கல்கி

KALKI 9-3-75 60 காசு





சாரதாஸ் பஞ்ச ரத்னம்-5
சூரியனைக் கண்டதும் தாமரை மலர்கிறது.
சந்திரனைக் கண்டதும் அல்லி மலர்கிற்து.
சாரதாஸின் பட்டுப்புடவையில் விளங்கும்
உன் அழகைக் கண்டதும் இந்த உலகமே
மலர்ந்து உனக்கு அஞ்சலி செலுத்துகிறது.
சாரதா'ஸ்
N. S. B. ரோடு,
திருச்சி-620002
போன் : 7077
தன் பில்டிங், மவுண்ட்ரோடு,
சென்னை-600002
போன் : 87177

இன்றைய ஜெம்ஷெட்பூர் என்னும் எஃகு நகரத்தை, துச்சமான முயற்சியாகக் கருதியவர்களிடையே இவர் கற்பனை செய்து, உருவாக்கினார்.

முன்னேற்றத்திற்கான வழி அறியாது இந்தியா உழன்று கொண்டிருந்த சமயத்தில் இவர் பெங்களூரில் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸையன்ஸ் என்னும் ஸ்தாபனத்தை நிறுவினார். தேசத்தின் விஞ்ஞான அறிவுத் துறையில் அதிகளவு கண்டுபிடிப்புகளை இந்த இன்ஸ்டிட்யூட் அளித்துள்ளது.

இத்தகைய மன உறுதி — எதிலும் முன்னோடியாக விளங்க வேண்டுமென்ற மன உறுதியை ஆதாரமாகக் கொண்ட வரையில், ஆண்டுகள் பல உருண்டோடினும் எங்கள் நிறுவனம் இளமை குன்றாது விளங்கும்.

நாங்கள் வளருகிறோம். ஆனால் அது காலத்தை அனுசரித்த வளர்ச்சியாகும்.

ஜெம்ஷெட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடா
பிறப்பு, மார்ச் 3, 1839

எஃகினை யொத்த மன உறுதி



டாடா ஸ்டீல்

HT-TIS-8467/A


எதிர்காலச் சிரிப்புகள்




ஒருவர்: ஏன் இந்த இயந்திர மனிதன் பைத்தியம் போல் உளறுது?
மற்றொருவர்: அதுக்கு ஏதோ மறை கொஞ்சம் கழன்று விட்டதாம்!
—சின்னஞ்சிறு கோபு, முடிகண்டநல்லூர்



ஒரு கைதி: நீ கள்ளக் கடத்தல் செய்தாயா?
இன்னொரு கைதி: ஆமாம்! பூமியிலிருந்து ஆயிரம் பவுண்டு ஆக்ஸிஜனை செவ்வாய்க் கிரகத்துக்குக் கடத்திக்கிட்டுப் போக முயன்றேன். சிக்கிக்கொண்டேன்!
- கோபு



''அடி சகி! இந்த அக்கிரமத்தைக் கேட்டியா?''
''என்னடி ஆச்சு?''
''எங்காத்து 'மெஷின் மெய்டை' எதிராத்து இயந்திர மனிதன் 'லவ்' பண்ணி இழுத்துண்டு ஓடிட்டாண்டி!''
—இ. எஸ். ரங்கநாதன், படூர்



முதியவர் கல்யாணத்துக்கு இருக்கும் வாலிபனைப் பார்த்து: உங்கள் குலம் கோத்ரம், தகப்பனார் பெயர் எல்லாம் கொஞ்சம் சொல்கிறீர்களா?
வாலிபன்: எனக்கு அதெல்லாம் கிடையாது ஸார்! நான் ஒரு ''டெஸ்ட் ட்யூப்'' பாய்.
-ஆர். ஸ்வர்ணம் சென்னை-33

மனைவி: உங்களுக்கென்ன பைத்தியமா? அந்தக் கம்ப்யூட்டருக்குப் போய் 'குட்மார்னிங்' சொல்றீங்க; பயந்து நடுங்கறீங்க!
கணவன்: உஷ்...சத்தமாப் பேசாதே. அதுதான் எங்க கம்பெனியோட மானேஜர்!
- கோபு






ஒரு மாமியின் அங்கலாய்ப்பு: என்னதான் அவா ஆத்திலே கம்ப்யூட்டர் இருந்தாலும் அதுக்காக வார்த்தைக்கு வார்த்தை ''மாமி! இந்த மாதம் எங்களுக்கு 50.206 லிட்டர் பால் தேவைப்படும். 15.3457 கிலோ நெய்யும், 7.0072 கிலோ நல்லெண்ணெயும் வாங்க வேண்டுமாக்கும்!'' அப்படீன்னு சொல்லிண்டு அலையணுமா என்ன?
—ராதா, சென்னை—1

அரசியல்வாதி: பெரியோர்களே! என்னை இந்தச் செவ்வாய்க் கிரகத்தில் நடக்கும் தேர்தலில் வெற்றி பெறச் செய்தால் முதல் வேலையாகச் செவ்வாயிலிருந்து பூமிக்கும், பூமியிலிருந்து சந்திரனுக்கும் தார் ரோடு போட்டுத் தருவேன் என்று உறுதியாகக் கூறுகிறேன்.
ஒருவர்: அட, கடவுளே! இதிலேயுமா காண்டிராக்ட்!
—பு.ஒய். சார்லஸ், அருப்புக்கோட்டை



பேத்தி: பாட்டி! நாங்க அடுத்த வாரம் எங்க காலேஜிலே செவ்வாய்க் கிரகத்துக்கு பிக்னிக் போகப் போறோமே! மேலே போகப் போக நாங்களெல்லாம் 'வெயிட்லெஸ்' ஆயிடுவோம்! ஜாலியா இருக்கும்.
பாட்டி: ஏண்டியம்மா! உங்களுக்கெல்லாம் வெட்கமே இருக்காதா? இங்கேதான் ஃபாஷன்ற பேர்லே ஸ்லீவ்லெஸ், பிராலெஸ்ன்னு கூத்தடிக்கிறது போறாதுன்னு மேலே போயி 'வெயிட்லெஸ்' வேறேயா? கர்மம்....கர்மம்...!
- ராதா





வட்டத் தலைவர்: சந்திரன் ஏன் அமா வாசை அன்று இருட்டா இருக்கிறது?

மாவட்டத் தலைவர்: சந்திரனில் 'பவர் கட்'. இது தெரியாதா உமக்கு?

—என். எஸ். உமாகாந்தன், சென்னை—12



சந்திர மண்டலத்துக்குச் செல்ல விண்ணப்பம் செய்திருந்த ஒரு பிரயாணியை அதிகாரி கேட்டார்: சந்திர மண்டலத்துக்குப் போய் வருவது என்றால் சாதாரண காரியமல்ல. உங்கள் உடம்பு தாங்குமா ?

பிரயாணி: என்ன சார் நீங்க? நான் மின்சார ரயிலில் தினம் பிரயாணம் செய்கிறேன். அதைவிடவா கஷ்டமாக இருக்கப் போகிறது?


—சம்பத் குமாரி



''மாமி! எனக்கு உன்னே கொன்னே வேலே கெடக்கு. வாசல்லே கம்ப்யூட்டர் ரிப்பேர்க்காரன் வந்தா எங்கிட்டே கொஞ்சம் சொல்றேளா?''

''ஏன், ஒங்காத்து கம்ப்யூட்டருக்கு என்னாச்சு?''

''அதை ஏன் கேக்கறேள்! ஒரு கப் காப்பிக்கு எவ்வளவு சர்க்கரை போடணும்னு கேட்டா 'ஒன்பது லிட்டர்'னு வாய் கூசாமச் சொல்றது!'' -ந. க.



ஒரு கல்லூரியில் அறிவிப்பு: ''தவிர்க்க முடியாத காரணங்களினால் இன்று கல்லூரி உண்டு.''

—ஸ்ரீதர் சாமா



பையன் (கணக்குப் புத்தகத்தைப் பார்த்தவாறே): ஐந்துடன் ஐந்தைக் கூட்டி வரும் தொகையில் நான்கைக் கழித்தால் மீதி எவ்வளவு?' இதற்கு விடை என்ன அப்பா?

தகப்பனார்: அந்த எலெக்ட்ரானிக் கால்குலேட்டரை எடுத்துண்டு வா. ஒரு செகண்டிலே சொல்லிடறேன்.

-ரா. ஜெயராமன்



''பெண்ணுக்கு குக்கிங் தெரியுமா?''

''தெரியாது. ஆனால் குக்கிங் மெஷின் பட்டனை அமுக்கத் தெரியும்!''

- ஸ்ரீதர் சாமா

''அப்பா! நம்ம வீட்டு கம்ப்யூட்டரை முதல்லே ஒழிச்சுத் தலை முழுகணும்! போட்ட கணக்கிலே பாதி தப்புன்னு டீச்சர் அடிச்சுட்டாங்க!''

- இ. எஸ். ஆர்.



தாய்: ஏண்டா ரகு! செவ்வாயிலிருந்து உன் தங்கை வரும் ராக்கெட் இன்றைக்குத் தானே வரும்? நீ சீக்கிரம் போய் அவளை அழைத்து வாடா.


மகன்: ராக்கெட் என்ன உங்க காலத்து ரயில்னு நினைச்சியா? மணிக் கணக்கிலே லேட்டா வர்றதுக்கு? இது ராக்கெட். நாள் கணக்கிலேதான் லேட்டா வரும். நாளைக்குப் போனால் போதும் அம்மா!

—பீ. ஆர். மயிலப்பன், கவுந்தப்பாடி



படம்: விவேக்

மனித குலத்தை மிகப் பரவலாகப் பாதிக்கும் நோயால் பீடிக்கப்பட்டுள்ளவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம்...



உங்களுக்கே தெரியாத நிலையில்!

நூற்றுக்கு 95 பேர்கள் பற்சிதைவால் பாதிக்கப்படுகிறார்கள். எனினும் அதிக அக்கறை காட்டாத இக்கோளாறு, காலப் போக்கில் வலிதரும் சொத்தையாக மாறி உங்களைப் பெரும் அவதிக்கு உள்ளாக்கி விடும். எனவேதான் உங்கள் பற்களுக்கு இடைவிடாத பாதுகாப்பு தேவைப்படுகிறது.

பினாகா ஃப்ளோரைட் பற்சிதைவுக்கு எதிராக நீடித்த பாதுகாப்பளிக்கிறது

பற்சிதைவை 50 சதவிகிதம் வரை ஃப்ளோரைட் குறைக்கிறது என விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஆகவே தவறாமல் பினாகா ஃப்ளோரைடினால், தினந்தோறும் காலையிலும், படுக்கை வேளையிலும் பல் துலக்குங்கள். இதன் தனிப்பட்ட, நீடித்து நிற்கும் ஆற்றல் பல் எனாமலைப் பலப்படுத்துகிறது. பற்களைச் சிதைக்கும் கிருமிகளின் வளர்ச்சியையும் வலிதரும் சொத்தையையும் தடுக்கிறது.



பல்லுக்கு உறுதி, பற்சிதைவுக்கு எதிரி—

பினாகா ஃப்ளோரைட்

U-BF/115 TAM

கல்கி

ஆனந்த மாசி, 25 ★ மார்ச் 9, 1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே! சம்பவங்களும் கற்பனையே.





சந்தா விவரம்	இந்தியா	ஒரு வருடம்	ரூ. 30-00	ஆறு மாதம்	ரூ. 15-00
	இதர நாடுகள்	,,	ரூ. 67-50	,,	ரூ. 33.75
	இலங்கை (இலங்கை நாணயம்)	,,	ரூ. 44-00	,,	ரூ. 22-00

ஒவ்வொரு நாளும் உங்கள் சருமம் சிறிது ஈரப்பசை - யையும், சிறிது இளமையையும் இழக்கின்றது.



புதிய ஜான்ஸன்ஸ்* பேபி லோஷன் ஒவ்வொரு நாளும் ஏற்படுகின்ற அந்த இழப்பை ஈடுசெய்கின்றது.

ஒரு பெண்மணியின் விலையில்லாப் பொக்கிஷம் அவளது சருமம். எனினும், வயதாக ஆக, அதை அழகாகவே வைப்பது கடினமாகும். வருங்காலத்தில் உங்கள் சருமத்தை அழகாக வைக்கவேண்டுமானால், அதை இன்று முதலே நன்று பராமரிக்கவேண்டும். ஆகையால்தான் உங்களுக்குத் தேவை புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன். இந்த விசேஷ அழகு லோஷன் சருமத்திற்கு இன்றியமையாத ஈரப் பசையை நிலை நிறுத்துகிறது.

அதோடு, கடுமையான குளிர் மாதங்களில் உங்கள் சருமத்தை மிருதுவாகவும், இளமையுடனும், அழகொளி வீசும்படியும் வைக்கிறது—ஆண்டு முழுவதும் கூட. எனவே, ஒவ்வொரு காலையிலும் இரவிலும் புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன் உபயோகியுங்கள். உங்கள் முகம், கழுத்து மற்றும் கைகளில் உபயோகித்து, உங்கள் சருமத்திற்குப் பனிபோன்ற புதுமையை அளித்திடுங்கள்.



புதிய ஜான்ஸன்ஸ் பேபி லோஷன்

உங்கள் சருமத்தை மிருதுவாக, இளமை தவழ, அழகொளி வீச வைக்கின்றது.

நிதானம் காட்டுங்கள்!

கல்கி

மலர் 34

இதழ் 32

பாகிஸ்தானுக்கு யுத்த தளவாடங்களை அனுப்புவதில்லை என்று அமெரிக்கா தனக்குத் தானே விதித்துக் கொண்டிருந்த ஒரு கட்டுப்பாட்டை இன்று நீக்கி விட்டது. நீக்கிய விதமும் நேரமும் ராஜ தந்திரத்துக்கு வாஷிங்டனில் பஞ்சம் என எண்ணச் செய்கின்றன.

புது அமெரிக்கத் தூதர் ஸாக்ஸ்பி புதுதில்லியில் அடியெடுத்து வைக்கவிருந்த தருணத்தில் வந்த இந்த அறிவிப்பு அவருக்கு மிகவும் தர்மசங்கடமான ஒரு நிலையைத் தோற்றுவித்தது. ஸிம்லா ஒப்பந்தத்தின்படி பாகிஸ்தானும் இந்தியாவும் நட்புறவை வளர்த்துக் கொள்ளப் பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கும்போது வந்த இந்த அறிவிப்பு இந்தத் துணைக் கண்டத்தின் அமைதிச் சூழலுக்கு ஊறு விளைவிக்கவே செய்யும். இந்தியாவை நேரடியாகப் பாதிக்கக்கூடிய ஒரு விஷயத்தில் திடுதிப்பென்று அமெரிக்கா இந்த அறிவிப்பைச் செய்தது நம் தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஜனநாயகக் காவலன் என்று கூறிக்கொள்ளும் அமெரிக்கா உலகின் இரண்டாவது பெரிய ஜனநாயக நாட்டினிடம் இப்படி நடந்து கொண்டது அழகல்ல.

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களைத் தந்தாலும் அவற்றை இலவசமாகவோ, நீண்ட காலக் கடனுக்கோ தரவில்லை; அந்நியச் செலாவணிச் சலுகை ஏதுமில்லை; டாலர்களாகத் தந்தே பாகிஸ்தான் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க அரசு சொல்கிறது. இதில் நாம் திருப்தி அடைவதற்கில்லை. ஏனெனில் விலைகளில் சலுகை ஏதும் காட்டப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் நமக்கு இல்லை. பழைய சரக்கு என்று கூறி விலையைக் குறைத்து நிர்ணயித்து ஏராளமான யுத்த தளவாடங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அனுப்பக் கூடும். பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் யுத்த தளவாடங்கள் இந்தியாவுக்கு எதிராகப் பயன்பட மாட்டா என்று முன்பு அமெரிக்கா கூறியது. இன்றும் சொல்லலாம். ஆனால் சரித்திரம் உணர்த்துவது வேறு. இந்தியா—பாக். யுத்தங்களின்போது பாகிஸ்தான் அமெரிக்கத் தளவாடங்களைத் தாராளமாகவே பயன்படுத்தியது. இந்த யுத்தங்களின்போதெல்லாம் பாகிஸ்தானியரே ஆக்கிரமிப்பாளராய் விளங்கினர்; நாம் தற்காப்புக்காகவே யுத்தம் செய்தோம். எனவே ஆக்கிரமிப்பாளனுக்கு ஆயுத உதவி செய்கிற நிலையில் அமெரிக்கா இன்று உள்ளதை மறுக்கவே முடியாது.


இவ்வளவிருந்தும் பாரத அரசு அமெரிக்க அறிவிப்புக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகளை நாம் வரவேற்க முடியவில்லை. இந்தியாவின் பாதுகாப்புக்கு ருஷ்யாவைக் கூட்டாளியாக்கிக்கொண்டு ருஷ்யப் பாதுகாப்பு அமைச்சரைப் புதுதில்லியில் வரவேற்று உபசரிக்கிறார் பிரதமர். அவருடன் கலந்தாலோசித்து ருஷ்யாவிலிருந்து நாம் தருவிக்கப்போகும் யுத்த தளவாடங்களுக்குப் பட்டியல் போடுகிறார். அதே மூச்சில், 'ஐயோ! அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்கிறதே, அநியாயம்!' என்று அலறுகிறார். உலக நாடுகள் நம்மைப் பார்த்துச் சிரிக்க இது இடம் அளிக்கிறது.

அமெரிக்காவில் நமது தூதர் அளவுக்கு மீறிக் காரசாரமாய்ப் பேசி கிஸ்ஸிஞ்சரின் மனம் புண்படச் செய்தார். நமது பிரதமரின் பேச்சுக்களும் காட்டமாகவே உள்ளன. 'ஏதோ உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்கள் போகட்டும்' என்றால் அமைச்சர் சாவனின் அமெரிக்க விஜயம் ஒத்திப் போடப்பட்டது ராஜதந்திரத்துக்குப் புதுதில்லியிலும் பஞ்சம்தான் என்பதை நிரூபிக்கிறது.

இதுவும் போதாதென்று ருஷ்யப் பாதுகாப்பு மந்திரியுடன் நடந்த பேச்சு வார்த்தையின் முடிவில் வெளியிடப்பட்ட ருஷ்ய—இந்தியக் கூட்டறிக்கை, அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் விற்பதை வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நடவடிக்கைகளால் அமெரிக்கர்களுக்கு நம்மிடம் கசப்பு உணர்ச்சி மேன்மேலும் வளரவே செய்யும். 'இந்தியா — பாகிஸ்தான் நட்புறவை வளர்க்க நாங்கள் முயலுகையில் இப்படிச் செய்துவிட்டீர்களே' என்று அமெரிக்க அரசைக் கண்டிக்கும் நம் தலைவர்கள், இந்திய — அமெரிக்க நட்புறவைக் காப்பாற்ற வேண்டிய அவசியமும் இருப்பதை மறந்து விட்டார்கள்.

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயெனக் கும்பிடடி பாப்பா — பாரதியார்



உஷ், கத்தாதே! பாகிஸ்தான் புலி வந்துவிடும்
உதவி! உதவி!
வறுமை
பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி
எதிர்க்கட்சிகள் ஒற்றுமை
காரிருளில் ஒளிக்கீற்று!
எல்லாம உன் நன்மைக்காகவே!
வரிகள்

வெற்றியாம், வெட்கக்கேடு !

பார்பெட்டா தொகுதி உபதேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்று விட்டதாம், மகிழ்ச்சியோடு சொல்லிக் கொள்கிறார்கள். இதனை வெற்றியென்று கருதினால் அதைவிட வெட்கக்கேடு வேறு இல்லை.

ராஷ்டிரபதி பக்ருதீன் அலி அகமத் அவர்களின் தொகுதியாக விளங்கியது இது. அவர் ஒரு லட்சத்து முப்பத்தாறாயிரம் வோட்டு வித்தியாசத்தில் வென்றவர். அவர் ராஷ்டிரபதியானதால் உப தேர்தல் நடந்து இப்போது இஸ்மெயில் ஹூஸேன் கான் இருபத்தெட்டாயிரம் வோட்டு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றிருக்கிறார். இவ்வளவுக்கும் ராஷ்டிரபதியே தேர்தல் பிரசாரம் நடந்த சமயத்தில் தொகுதிக்கு வந்து போயிருக்கிறார். ஜனநாயகப் பண்புக்கும் தாம் வகிக்கும் பெரும் பதவிக்கும் சற்றும் ஒவ்வாத விதத்தில் நடந்து கொண்டிருக்கிறார். இதனை ஆட்சேபித்துப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வெளிநடப்புச் செய்தது.

பலவிதமாக மக்களைக் கவர முயன்றும் பார்பெட்டாவில் வோட்டு வித்தியாசம் இந்த அளவுக்குக் குறைந்து போயிற்றென்றால் அது இந்திரா காங்கிரஸ் எத்தனை வேகமாகச் செல்வாக்கு இழந்து வருகிறது என்பதைத்தானே காட்டுகிறது!

தமிழக அரசியலுக்குத் தலைகுனிவு

தி.மு.க.வைத் துறந்து அ.தி.மு.க.வில் சேர்ந்த மேலவை உறுப்பினர் திரு வெங்கா அவர்கள் சென்னையில் கத்திக் குத்துக்கு ஆளானதும் ஸ்தாபன காங்கிரஸ் — தி. மு. க. ஊழியர்கள் கைகலப்பில் தி. மு. க. ஊழியர் ஒருவர் உடுமலைப்பேட்டையில் மரணமடைந்ததும் தமிழக அரசியலுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றுக்குக் காரணம் என்ன என்பதைத் தலைவர்கள் யோசிக்க வேண்டும். பொதுக் கூட்டங்களில் தலைவர்கள் என்று தங்களை வர்ணித்துக் கொள்வோர் தாறுமாறாகப் பேசி ஏசுவதுதான் என்பதை இந்த ஆத்ம பரிசோதனை புலப்படுத்தும். கொள்கைகளை விமர்சித்தும் தவறுகளைக் கண்டித்தும் பேச வேண்டியதுதான். ஆனால் விகார உணர்ச்சிகளைத் தூண்டி விடும் வகையில் பேசக்கூடாது. எதிர்க் கட்சியினரின் பெயர்களைச் சில சமயம் குறிப்பிட நேரும்போது மதிப்பும் மரியாதையும் கொடுத்துப் பேச வேண்டும். கேலியாகவும் கிண்டலாகவும் அல்ல. இந்தக் கட்டுப்பாட்டை வட்டத் தலைவர் முதல் மாநிலத் தலைவர் வரை கடைப்பிடிக்காதபோது விபரீத பலன்கள் விளைவதில் வியப்பில்லை.

வார்த்தை ஜாலம் !

ரயில்வே பட்ஜெட்டில் புதிதாகப் பயணக் கட்டணங்கள் ஏதும் உயரவில்லை என்பதாகச் சற்று நிம்மதிப் பெருமூச்சு விடத் தொடங்கினோம். ஆனால் அந்த மூச்சு அடங்குவதற்கு முன்னால் உணவுத் தானியங்கள் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்ந்திருக்கும் செய்தி கண்ணில் பட்டு அதிர்ச்சி அளித்தது. கட்டண விகிதங்களை உயர்த்தவில்லையாம், சீர்ப்படுத்துகிறார்களாம்! இப்படி வார்த்தை ஜாலம் செய்து ஓர் ஏமாற்று வேறு. கட்டண விகிதம் சிறிதளவே உயர்ந்தாலும் கடையில் வாங்கும் பண்டத்தின் விலை பல மடங்கு உயர்வதை அநுபவித்து வரும் நாம், ரயில்வே அமைச்சரின் திருப்தியைப் பகிர்ந்துகொள்வதற்கில்லை. மேலும் சென்ற ஆண்டு பயங்கரமான அளவில் அதிகரிக்கப்பட்ட கட்டண விகிதங்களுக்கு ஏற்பப் பயணிகளுக்கு வசதிகள் ஏதும் அதிகரிக்கவில்லை என்பது நம் கவனத்தில் உள்ளது.

ஹிந்தி வெறி அடங்க.....

ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள ஹிந்தி நூல்கள் வாங்குவாரின்றிக் குவிந்துள்ளனவாம். பூச்சி அரிப்பதற்கு முன்னால் இவற்றை யார் தலையில் எப்படிக் கட்டலாம் என்று யோசித்து வருகிறாராம் உதவிக் கல்வி மந்திரி திரு யாதவ். பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார்.

நல்ல யோசனை நாம் சொல்கிறோம்! மத்திய ஹிந்தி இயக்குனரிடமும் தேசிய புத்தக நிறுவனத்திலும் சாகித்திய அகாதமியிலும் லலித கலா அகாதமியிலும் உள்ள இந்த நூல்களை ஆயிரம் ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ளவைகளாகக் கட்டிப் போடுங்கள். பிறகு ஹிந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று உரக்கக் கூக்குரலிட்டும் மறைமுகமாக அதற்கு வழிவகுத்தும் வருகிறார்களே பல வெறியர்கள் அவர்கள் ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு கட்டைச் சுமத்தி, ஆயிரம் ரூபாயை அவர்களிடம் கறந்து விடுங்கள். புத்தகங்களும் விற்கும், அவர்கள் வெறியும் அடங்கும்!



சிங்கிள் டீ ; 52 வரி !

ஒரு கப் டீயைக் கையில் எடுத்துக் கொண்டு பார்த்தால், அதில் பால், டீ, சர்க்கரை, கோப்பை என்று கணக்கெடுக்கையில் பல முனைகளில் மொத்தம் 52 வரிகள் கட்டுகிறோம். 20 பைசா டீயில் 14 பைசா வரியாகப் போய் விடுகிறது.

பிளிட்ஸ் - பாலி

வரலாறு கேட்டிராத வாய்ப்பு!

வழங்குவதோ **ஸிங்கர்**

3 மாதங்களில் உங்கள்

மெரிட்*

தையல் மெஷினுக்குப்

பணத்தைக்

கொடுங்கள்

ஆனால் லிஸ்ட் பிரைஸைவிட ஒரு காசுகூட அதிகம் தராதீர்கள்!

"மிகவும் மகத்தானது"

ஸிங்கர் சிறிதும் கூடுதல் பணமின்றி தவணை முறைகளில் வாங்கும் வாய்ப்பை உங்களுக்கு அளிக்கிறது.





"என் சேமிப்பு எவ்வளவு என்பதை ஊகிக்க முடியுமா!"

மூன்று மாதங்களில் பணத்தைக் கொடுத்தால் எவ்வளவு சேமிக்கிறீர்கள்? லிஸ்ட் பிரைஸைவிட ஒரு காசுகூட அதிகம் தராமலேயே அதை எவ்வளவு விரைவில் திரும்பப் பெறுகிறீர்கள் என்பதை கண்டு நீங்களே வியப்படைவீர்கள். அதன் பிறகு எல்லாமே சேமிப்புத்தான்!

"ஒரு காசுகூட அதிகமில்லை"


வழக்கமாக தவணை முறைகளில் வாங்கும் போது சாமானின் விலை அதிகமாகிறது. காரணம்? அந்த வசதியை உங்களுக்குத் தர கம்பெனிக்கு அதிகம் செலவாகிறது. உங்கள் மெரிட் தையல் மெஷினுக்கு பணத்தைக் கொடுத்து வரும்போதே மிச்சமும் செய்கிறீர்கள் (தையற் செலவு சிறிதுமில்லையே).





"அது நீடித்து உழைக்க வல்லது".

சில நாட்களே அமுலிலிருக்கும் இதைப் போன்ற சலுகையை ஸிங்கர் மட்டுமே உங்களுக்கு அளிக்க முடியும். ஆகவே முந்துங்கள். இந்த வாய்ப்பை பயன்படுத்தும் அதிர்ஷ்டசாலியாக ஏன் இருக்கக்கூடாது? அருகிலுள்ள ஸிங்கர் கடையையோ அல்லது கிளையையோ அணுகுங்கள்.



யாவரும் அறிந்த உண்மை இது. உலகத்திற்கு தையற் கலையைக் கற்பித்தவர்களே நாங்கள்தான்.

ஸிங்கர்

ஸிங்கர் ஸுயிங் மெஷின் கம்பெனி,
207, டி. என். ரோடு, பம்பாய் 400 001

*ஸிங்கர் கம்பெனியின் ட்ரேட் மார்க்.

CHAITRA-SM-79TAM

எனக்கு ஏன் கனகாபிஷேகம்?

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

4

ஜீவ - பிரம்ம அபேதத்தைச் சொல்லும் படியான உபநிஷத மகா வாக்கியங்கள் இருக்கின்றனவே, அவற்றை, பிரணவம் இருக்கிறதே, அதை, ஞானியிடமிருந்து உபதேசிக்கப் பெற வேண்டும் என்கிறார் நம் ஆசார்யாள். அப்புறம் இந்த உபதேசங்களையே மனனம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செய்து கொண்டேயிருந்தால் கடைசியில் பளீரென்று அவற்றின் அர்த்தம் — ஜீவ, பிரம்ம அபேதம் — அநுபவத்தில் புரிந்துவிடும்.

ஞான மார்க்கத்தை நிலைநாட்டிய பகவத் பாதர்களின் ஆக்ஞைகளில் கர்மம், பக்தி எல்லாம் இருக்கின்றன. இவற்றால் மேலும் மேலும் பக்குவமாக ஆக, எண்ணம் ஒருமைப் படும். அப்புறம் அப்படியே எல்லா எண்ணங்களையும் விட்டு விட்டு, இத்தனைக்கும் ஆதாரமாக இருக்கப்பட்ட பரம சத்தியம் ஒன்றைப் பற்றிய தியானத்திலேயே சதா காலமும் ஆழ்ந்துவிட வேண்டும். ஆசார்யாளின் ஆக்ஞைகளில் இதுவே பரமாக்ஞை!

இதற்குப் பூர்வாங்கம் ஒரு மூர்த்தியாக அந்தப் பரம சத்தியத்தை வைத்து, ஈசுவர ஆராதனை செய்வது. முடிவான பிரம்ம சாட்சாத்காரத்துக்குச் சாதனமாக ஈசுவர ஆராதனையை விதித்தார்; ஈசுவர ஆராதனைக்குச் சாதனமாக அவரவருக்கு ஏற்பட்ட கர்மங்களை விதித்தார்.

நாம் இருக்கிற நிலையில் கர்மத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, கர்மாவை ஒழுங்காகப் பண்ணுவோம். அதாவது, ஆசைவாய்ப்பட்டுப் பண்ணாமல் இருப்போம். பலனை எதிர்பார்ப்பதால்தான் வெற்றி வந்தால் திமிர், ஆணவம், தோல்வி வந்தால் கோபம், துக்கம் என்று உண்டாகின்றன. பலனை எதிர்பாராவிட்டால்தான் சாந்தம் இருக்கும். 'இப்படி நமக்குக் கடமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் செய்கிறோம். நம் ஆசைக்காக அல்ல. பலன் எப்படியானாலும் அது ஈசுவரனைச் சேர்ந்தது' என்கிற மனப்பான்மையோடு காரியங்களைச் செய்வோம்.

கர்மாநுஷ்டானங்களை முடித்து விட்டுக் கடைசியில், ''ஜனார்த்தன: ப்ரீயதாம்'' என்று சொல்வது வழக்கம். 'நம் ப்ரீதிக்காகக் கர்மம் இல்லை; இது நம் ஆத்ம சிரேயசுக்காகவும், லோக க்ஷேமத்துக்காகவும் பகவான் (ஜனார்த்தனன்) விதித்தது; ஆனபடியால், இதைச் சரியாகச் செய்வது அவனுக்கே ப்ரீதி' என்கிற உணர்வோடு, எந்தக் காரியத்தையும் செய்து, ''ஜனார்த்தன: ப்ரீயதாம்'' என்று அர்ப்பித்துவிட்டுச் சாந்தமாக இருக்க வேண்டும். இப்படியாகக் கர்மத்தால் அவர் ப்ரீதி அடைகிறார் என்றால், இதுவே அவருக்குப் பூஜை என்றுதான் அர்த்தம். ஆனால் காரியத்தைப் பற்றேயில்லாமல் பண்ணி, அப்புறம் அவரிடம் அர்ப்பணம் செய்வதென்றால் ஆரம்ப தசையில் இதிலே பிடிப்பில்லாமல் இருக்கிறது. ஆதலால் அனந்த கல்யாண குணமுள்ள அவரை நினைக்கிற கர்மாவாகவே ஒன்றை — பூஜையை — பண்ண வேண்டும். அது அவரிடம் நமக்குப் பிடிப்பைக் கொடுக்கிறது. நம் மனசு அவரிடம் லயிப்பதற்காகத் தனியாகப் பூஜையும் பண்ணத்தான் வேண்டும். நம்மால் முடிந்த அளவில் ஐந்தோ, பதினாறோ, அறுபத்தி நாலோ உபசாரங்களைப் பண்ணி பூஜை செய்ய வேண்டியதுதான். ஆனால் அதைவிட நிஷ்காம்ய கர்மா செய்வதே — பலனில் இச்சையில்லாமலே வேதம் விதித்தபடி கடமைகளை விடாமல் ஆற்றுவதே ஈசுவரனுக்குப் பெரிய உபசாரம்.

முடிவிலே சொன்னபடி 'பிரம்மத்தில் நிலைத்து நிற்பது'தான் தற்போது நமக்கு முடியாத விஷயமாக இருக்கிறது என்பதில்லை. ஆசையில்லாமல் கர்மம் செய்வது, மனசு சலிக்காமல் பூஜை செய்வது ஆகிய எதுவுமே நமக்கு முடியாத காரியமாகத்தான் இருக்கிறது. ஆதலினால் ஆக்ஞை போட்டவரிடமே போய், 'இவை ஒவ்வொன்றுக்கும் அவசியமான சக்தியை, சிரத்தையை அநுக்கிரகம் பண்ணுங்கள்' என்று பிரார்த்தித்துக் கொள்ள வேண்டியதுதான். கடைசியில் பரம சத்தியத்தையே ஓயாமல் தியானித்துக் கொண்டிருக்கச் சொல்கிறாரே — இதை 'அநுசந்தானம்' என்பார்கள் — அப்படி பிரம்ம அநுசந்தானம் பண்ணுவதற்கான யோக்யதை நமக்கு வரவேண்டுமானால், அதுவும் அநுக்கிரக பலத்தினாலேயே சித்திக்கும்.

இப்போது நாம் பிரார்த்திக்க வேண்டியது, ஆசைப் பூர்த்தியாகக் காரியம் செய்யாமல், கடமைகளைச் செய்து பகவத் சமர்ப்பணம் பண்ணுகிற புத்தி நமக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வரவேண்டும் என்பதே. இது ஒவ்வொரு படியாக நம்மைத் தூக்கிக் கொண்டு போய்ப் பிரம்மாநுசந்தானத்தில் நிறுத்துகிற சமயத்தில் அது நிலைப்பதற்கான பிரார்த்தனையைப் பண்ணலாம். அப்படிப் பிரம்மத்தில் நின்று அதுவாகவே ஆகிவிடுவதுதான் — பரம சத்தியமாகவே ஆகிவிடுவதுதான் — நாம் ஜன்மா எடுத்திருப்பதன் லட்சியம் என்ற அளவுக்கு இப்போது தெரிந்து கொண்டால் போதும். வாழ்க்கை நோக்கம் இதுதான் என்று தெரிந்து கொண்டு, அவரவரும் வேதம் விதித்தபடி கர்மங்களைச் செய்து கொண்டு ஸ்ரீ பகவத்பாதர்களுக்கும் பிரதிதினமும் கனகாபிஷேகம் — ரத்தினாபிஷேகம் — செய்து கொண்டிருப்போமாக!


நம : பார்வதீ பதயே
ஹர ஹர மஹாதேவ



ராக்கெட் கிளம்ப முன் ஏற்பாடுகள்



இரண்டு கட்ட ராக்கெட் கிளம்பிவிட்டது.



ஆன்டெனா

பின் தங்காத பாரதம்

எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனை மனிதனின் மனத்தை உயர்த்துவது போல் வேறு எதுவுமே உயர்த்துவதில்லை.

பாரத நாட்டு மக்களின் எதிர்கால வாழ்க்கையைச் சுபிட்சமுள்ளதாக ஆக்கப் பாரத நாட்டு விஞ்ஞானிகள் மிகுந்த ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்களை நல்லபடியாகப் பயன்படுத்திக் கொள்வதும், கொள்ளாததும் நம் பொறுப்பு.

இந்த எண்ணம்தான் ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் தளத்தில் நம் விஞ்ஞானிகளின் ஆற்றல் செயல்படுவதைப் பார்த்தபோது எனக்கு ஏற்பட்டது.

சந்திர மண்டலத்தை எட்டும் முயற்சியில் முதற்படி, பூமண்டலத்தைச் சுற்றி வர ஒரு செயற்கைச் சந்திரனை அனுப்புவது. அதுவே பூமண்டலத்திலுள்ள மக்கள் வாழ்வுக்குப் பேருதவி அளிக்கும் சாதனமாக அமைந்து விட்டது. அந்தப் பயனைப் பாரத மக்களும் அடைய வேண்டும் என்ற முயற்சியில் பாரத நாட்டு விண்வெளி ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

செயற்கைச் சந்திரன் விண்வெளியில் இருந்தால் பூமண்டலத்துக்கு உதவக்கூடிய எத்தனையோ செய்திகளை உடனுக்குடன் அனுப்ப வசதிப்படும்.

இப்பொழுதெல்லாம் டெலிவிஷன் காட்சிகளுக்கு உபகிரகங்கள் பயன்படுகின்றன. அமெரிக்காவின் கிழக்குக் கோடியில் இருப்பவன் மேற்குக் கோடியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அந்த விநாடியே காண உபகிரகம் பயனுகிறது. செய்திகளைப் பரப்புவதில் மட்டுமின்றி மண்வள ஆராய்ச்சியில், பயிர்கள் சாகுபடியில், பருவகால நிலைகளை அறிவதில் செயற்கைச் சந்திரன்கள் மகத்தான புரட்சியைச் செய்திருக்கின்றன.

அமெரிக்காவும் ருஷ்யாவும் செயற்கைச் சந்திரன்களை அனுப்பி வருகின்றனவே, அதே ஆராய்ச்சியில் நாம் ஈடுபடுவானேன் என்ற கேள்வி எழுவது இயல்புதான்.

விஞ்ஞானத்தில் இரண்டு துறைகள் உள்ளன. அதாவது விஞ்ஞானத் தத்துவம் என்றும் பொறியியல் துறை விஞ்ஞானம் என்றும் இரண்டு வகை. முதல் வகையான விஞ்ஞான தத்துவத்தின் கீழ் அறியப்படும் உண்மைகள் உலகுக்கெல்லாம் பொது. நியூட்டன் கண்டுபிடித்த பூமியின் ஆகர்ஷண சக்தியும் பாரடே கண்டுபிடித்த மின்சாரத் தத்துவமும் ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த அணுவுக்குள் அடங்கிக் கிடக்கும் சக்தியும் பற்றிய உண்மைகள் உலகுக்கெல்லாம் தெரிந்தவை. இந்தத் தத்துவங்களை மனிதனுக்கு ஆக்க ரீதியிலோ அழிவு ரீதியிலோ பயன்படுத்தும் விஞ்ஞானிகள், தாங்கள் சிருஷ்டித்த பொருளின் நுட்ப ஞானத்தைப் பகிரங்கப்படுத்துவதில்லை.

உதாரணமாக, விண்வெளிக்கு ராக்கெட்டுகளை அனுப்பும் எரிபொருள்கள் உள்ளனவே அவை யாவை என்பது உலகமெல்லாம் தெரிந்தவைதாம். ஆனால் அந்தக் கலவையின் தன்மை எப்படி, எவ்வளவு பரிமாணம் என்பனவற்றை ஒவ்வொரு நாடும் மிக ரகசியமாக வைத்துள்ளன. பிற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில்லை.

இந்த இரகசியங்கள் காப்பாற்றப்படுவதால்தான் அமெரிக்க விண்வெளிவீரர்கள் சந்திர மண்டலத்தை அடைந்தனர். ருஷ்யர்

பாரத நாட்டின் விண்வெளி ஆராய்ச்சி தலைமைச் செயலகம் பெங்களூரில் உள்ளது. இத்துறையின் அகில இந்தியத் தலைவர் திருதாவன் இங்கிருந்தபடி எல்லா நிலையங்களையும் நிர்வகிக்கிறார். ராக்கெட்டுகள் உற்பத்தி செய்யும் இடம் திருவனந்தபுரத்துக்கு அண்மையில் உள்ள தும்பாவில் இருக்கிறது.

தும்பாவில் செய்யப்படும் ராக்கெட்டுகளை இணைத்துச் செயற்கைச் சந்திரனையும் அதில் பொருத்தி வானவெளிக்கு அனுப்பும் தளமாக ஸ்ரீஹரிகோட்டா விளங்குகிறது.

தும்பாவிலிருந்தே செயற்கைச் சந்திரனை வான மண்டலத்துக்கு அனுப்பக் கூடாதா என்று கேட்கலாம்.

ஸ்ரீஹரிகோட்டா பாரதத்தின் கிழக்குக் கடற்கரையில் இருக்கிறது. சென்னையிலிருந்து எண்பது கிலோமீட்டர் வடக்கே சூளூர்ப்பேட்டையிலிருந்து கிழக்கே பத்து மைல் தொலைவில் இருக்கிறது. உண்மையில் ஸ்ரீஹரிகோட்டா ஒரு தீவு. அதன் நீளம் 28 கிலோ மீட்டர்; அகலம் 9 கிலோமீட்டர். பரப்பளவு 31,000 ஏக்கர்.

உலகம் எந்தப் பக்கமாகச் சுழல்கிறதோ, அந்தப் பக்கமாக ராக்கெட்டை அனுப்பிச் செயற்கைச் சந்திரனைச் சுழல விடுவது விஞ்ஞான ரீதியில் மிக அவசியமாகும். மேலும் ராக்கெட் புறப்படும்போதும், ராக்கெட்டு



டெலிமீட்டர் அறை

இன்னும் செல்லவில்லை. ஆயினும் முயன்று முயன்று அந்த இரகசிய 'பார்முலா'வை எப்படியோ கண்டுபிடித்து விடுவார்கள் என எதிர்பார்க்கலாம். இது அந்தப் பொறி இயல் விஞ்ஞானிகளின் திறமையைப் பொறுத்தது.

பாரதம் உலக நாடுகளுடன் சரிசமமாகத் தலைதூக்கி நிற்க அணு ஆராய்ச்சியிலும், விண்வெளி ஆராய்ச்சியிலும் ஈடுபட வேண்டியிருக்கிறது. இத்துறைகளில் போதிய ஊக்கமும் உற்சாகமும் அளித்தால் பாரத நாட்டின் இளம் விஞ்ஞான, பொறிஇயல் நிபுணர்கள் மேனாட்டு விஞ்ஞானிகளுடன் சரிசமமாக நிற்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள்தாம்.

களைச் சோதனை செய்யும்போதும் அளவு கடந்த அனல் கக்கும். அதற்கு 31,000 ஏக்கர் உள்ள இந்த நிலப்பரப்பு — ஜனசஞ்சாரமற்ற இப்பகுதி — மிக வசதியானதாக இருக்கிறது. ராக்கெட்டை இயக்கும் எரிபொருள் உற்பத்தி செய்ய இந்தத் தீவைவிடச் சௌகரியமான இடம் வேறு இருக்க முடியாது. எரிபொருள்கள் வெடிக்கும் தன்மை வாய்ந்தவை. ஆபத்து உண்டாக்கக் கூடியவை. இவை யாவும் தனித்தனிக் கூடங்களில் — ஒன்றுக்கொன்று ஒரு பர்லாங்கு தூர இடைவெளி விட்டுச் செய்ய வேண்டும். அதற்கு இத்தீவு உதவுபடியாக உள்ளது.

ராக்கெட்டை விண்வெளியில் செலுத்திச் சோதனை செய்வதோடு பூமி மட்டத்திலேயே ஏவுகணை போன்று மணிக்கு 2000 மைல் வேகத்தில் செலுத்திப் பரிசோதனை செய்ய இத்தீவு மிக ஏற்றதாக உள்ளது.

ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்தின் பிராஜக்ட் இன்ஜினியராகவுள்ள திரு ஒய். ஜே. ராவ் இத்தளத்தை 1969ல் தேர்ந்தெடுத்ததாகவும் இதன் அமைப்பில், வளர்ச்சியில் அயல்நாட்டார் உதவி ஏதுமில்லை என்றும் கூறினார். 1978ல் இங்கிருந்து ''ரோகிணி-' என்ற செயற்கைச் சந்திரனை அனுப்பத் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார்.

''அதற்கு முன் இந்த ஏப்ரலிலேயே ஓர் இந்தியச் செயற்கைச் சந்திரனை விண்வெளிக்கு அனுப்ப ஏற்பாடு செய்து வருகிறோம்'' என்றார்.

1978ல் முதல் செயற்கைச் சந்திரன் அனுப்பப்போவதாகச் சொல்லிவிட்டு இந்த 1975 ஏப்ரலிலேயே விண்வெளிக்கு அனுப்புவதாகவும் சொல்கிறீர்களே அது எப்படி?'' என்று கேட்டேன்.

பாரத நாட்டில் செய்யப்பட்ட ஒரு செயற்கைச் சந்திரனை ஏப்ரலில் மாஸ்கோவுக்கு அனுப்பப் போகிறோம். அவர்கள் அதனை விண்வெளிக்கு அனுப்புவார்கள். அது 600 கிலோமீட்டர் உயரத்தில் உலகைச் சுற்றி வரும். ஒவ்வொரு தடவை சுற்றி வரும் போதும் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது பத்து நிமிஷ நேரம் இயங்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்தப் பத்து நிமிஷ நேரம் அது விண்வெளியிலிருந்து அனுப்பும் செய்திகளை ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள 'ஆன்டென்னு' என்ற ஏரியல் கருவி வாங்கிக் கீழே உள்ள டெலிமீட்டர் என்ற இயந்திரத்தில் பதிவு செய்யும்.

செயற்கைச் சந்திரனில் எத்தகைய செய்தி வேண்டும் என்பதற்கான கருவிகளைப் பொருத்தி அனுப்புகிறோமோ, அந்தக் கருவிகள் அனுப்பும் செய்திகளைக் கீழேயுள்ள டெலிமீட்டர் பதிவு செய்யும். அச்செய்திகளை வைத்து விஞ்ஞானிகள் முடிவு காண்பார்கள்.

பூமியிலிருந்தும் செயற்கைச் சந்திரனுக்கு விவரங்கள், செய்திகள் அனுப்பலாம். அதற்கு 'டெலி கமாண்ட்' என்று பெயர். ''ஆன்டென்னு'' என்ற ஏரியல் போன்ற சாதனம் இருக்கிறதே அதன் மையத்திலுள்ள கம்பி தான் பூமியிலிருந்து செய்திகளை அனுப்பும். அதைச் சுற்றியுள்ள மற்றக் கம்பிகள் செயற்கைச் சந்திரன் அனுப்பும் செய்திகளை வாங்கி டெலிமீட்டர் அறைக்கு அனுப்பும்.

ஸ்ரீஹரிகோட்டாவில் கடலை ஒட்டினாற் போல் ராக்கெட் அனுப்பும் தளமிருக்கிறது. இதுவரை தும்பாவிலிருந்து செய்து அனுப்பப் பட்ட இருபத்தோரு ராக்கெட்டுகளைப் பரிசோதனை செய்து பார்த்து விட்டார்கள். நம்து ராக்கெட்டுகள் வெற்றிகரமாக விண்வெளியை ஊடுருவக் கூடியன என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

1978ல் நாம் அனுப்பப் போகும் செயற்கைச் சந்திரனை நான்கு ராக்கெட்டுகள் ஏற்றிச் செல்லும். முதல் ராக்கெட் கொஞ்ச தூரம் வரை செல்லும். அதன் எரிபொருள் தீர்ந்தவுடன் இரண்டாவது ராக்கெட் இயங்கி இன்னும் கொஞ்சம் உயரம் செல்லும். இப்படி மேலே மேலே போய்ச் சுமார் நானூறு கிலோமீட்டர் உயரத்தில் செயற்கைச் சந்திரன் பிரிந்து உலகைச் சுற்றி வரும்.

உலகின் ஒரு பகுதியின் செய்தியை இன்னொரு பகுதிக்கு உடனுக்குடன் தெரிவிக்கும் செயற்கைச் சந்திரன்கள் பூமி மட்டத்திலிருந்து சுமார் 36,000 கிலோமீட்டர் உயரத்தில் சுற்றி வந்தால்தான் அந்தச் சாதனை புரிய முடியும். இத்தகைய சாதனையை இப்போது அமெரிக்க செயற்கைச் சந்திரன்கள் புரிகின்றன.

இப்பொழுது அமெரிக்க அரசாங்கத்தின் உதவியால், அமெரிக்க டி. வி. காட்சிகளை—கல்வி சம்பந்தப்பட்டவற்றை — நம் நாட்டில் ஒன்பது மாநிலங்களில் 24,000 கிராமங்களிலுள்ள டி. வி. செட்டுகளில் காண இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கு அடிப்படையே அமெரிக்கா 36,000 கிலோமீட்டர் உயரத்தில் உலகைச் சுற்றிவர அனுப்பியுள்ள செயற்கைச் சந்திரன்கள்தாம். அவைதாம் அமெரிக்காவில் தயாரிக்கப்படும் காட்சியை உடனுக்குடன் இந்திய டி. வி. செட்டுகளுக்கு வழங்கப் போகின்றன. இந்த ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து அகமதாபாத்திலுள்ள விண்வெளி ஆராய்ச்சிக் கூடம் இந்தக் கல்வி நிகழ்ச்சிகளைச் செயற்கைச் சந்திரனிலிருந்து வாங்கிப் பல்வேறு கிராமங்களில் காண அனுப்பப் போகிறது. டி.. வி.யில் காணும் காட்சி அமெரிக்கத் தயாரிப்பாயினும் ஒலி அந்தந்த மாநில மொழியில் அமைந்திருக்கும்.


ஸ்ரீஹரிகோட்டா முன்னால் தீவாக இருந்தது. இப்போது ஒரு பகுதி நீரை மண் போட்டுத் தூர்த்து நல்ல சாலை அமைத்து விட்டார்கள். இந்த ஆராய்ச்சி நிலையங்கள் பல்வேறு பகுதிகளில் பிரிந்திருப்பதால் 'தீவு'க்குள்ளும் இருநூறு கிலோமீட்டருக்குச் சாலை அமைத்திருக்கிறார்கள். சிவில் இன்ஜினீரிங் பொறுப்பு ஏற்று நடத்தும் திரு ஆர். டி. ஜான் தலைமையில் இப்பொழுதே விஞ்ஞானிகள், காரியாலயச் சிப்பந்திகள் வசிக்கக் கட்டடங்கள் மளமளவென்று எழும்பி வருகின்றன. ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் முதலியவை வந்து விட்டன. பல குடும்பங்கள் குடியேறிவிட்டன. 1978ம் ஆண்டில் சுமார் இரண்டாயிரம் இந்திய விஞ்ஞானிகளும் பொறி இயல் நிபுணர்களும் பணியாற்றப் போகிறார்கள்.

இப்போதே ஆண்டுக்குப் பன்னிரண்டு கோடி ரூபாய் செலவாகி வருகிறது. இந்த விஞ்ஞான நிலையத்துக்காக. வருங்காலத்தில் இன்னும் பல கோடிகள் செலவழிக்க வேண்டிவரும். அவ்வளவும் நாட்டுக்கு எதிர் காலத்தில் பல்லாயிரக் கோடிக் கணக்கில் பயனளிக்கப் போகிறது என்று மனத்தில் நினைத்துக் கொண்டேன்.

VOLTAS



காஸ்மோபாலிடன்
அதிநவீன
1.5 டன் ரூம் ஏர்கண்டிஷனர்



மிகச் சிறந்த குளுமை தருவதோடு இந்த வகையிலேயே மிகச் சிறந்த செயலாற்றும் காஸ்மோபாலிடன்... இதன் இதர தன்னிகரற்ற சிறப்பம்சங்கள் இதோ :

- ☐ அதிக தூரம் குளுமையூட்டும்.
- ☐ மிகப் பரந்த இடத்திற்கு குளுமையூட்டும். தானே திறந்து கொள்ளும் 'ஃப்ளிப்-டாப்', அதிவிரைவில் சீரான குளுமை பரப்ப உதவும்.
- ☐ 'தொட்டவுடன் இயங்கும்'— அத்தனை வேகம்.
- ☐ 1.5 டன் முழுமையான குளுமை, ஆயின் மின்சக்திச் செலவோ சிக்கனம்.

வோல்டாஸ் லிமிடெட்,
116, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

உங்கள் வட்டாரத்திலுள்ள எங்கள் அங்கீகாரம் பெற்ற வியாபாரிகளை அணுகுக அல்லது அருகிலுள்ள வோல்டாஸ் அலுவலகத்தை நாடுக.

Carrier
காஸ்மோபாலிடன்
1.5 டன்
ரூம் ஏர்கண்டிஷனர்

வழங்குவோர் வோல்டாஸ்:
குளுமை தருவதையே
குறிக்கோளாய்க் கொண்டவர்கள்

CMVAC-60-182-TAM

அரசியல் தூய்மையின் அடிப்படை

லஞ்ச ஊழல் மலிய இடம் வகுத்துப் பொருளாதாரச் சீர்குலைவும் விலைவாசி உயர்வும் மக்களைத் துன்புறுத்த அனுமதித்துவரும் ஆட்சிக்கு எதிராக மக்கள் இயக்கத்தைத் தோற்றுவித்த ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் எதிர்காலத்தை எண்ணித் தெரிவித்துள்ள யோசனைகள் மிகப் பல. அவற்றுள் அதிமுக்கியமான கருத்து தேர்தல் முறை சீர்திருத்தம் பற்றியது. இதற்கென அவர் பொருளாதார மேதை ஸ்ரீ டாகோஸ்டா அவர்களை அழைத்து ஒரு குழு அமைத்து நிலைமையை ஆராயச் சொன்னார். இக்குழு சமர்ப்பித்துள்ள ஏகமனதான அறிக்கை இந்தியாவின் எதிர்கால அரசியலும் ஆட்சியும் தூய்மை பெற வழிவகுக்கிறது. அறிக்கையின் சாராம்சம் பின்வருமாறு :

தேர்தல் கமிஷன் அங்கத்தினர்கள் மூவரை ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தத் தேர்வுக் கமிட்டியில் பிரதம மந்திரியும் எதிர்க் கட்சிகளின் பிரதிநிதியாக ஒருவரும் சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியும் அங்கம் வகிக்க வேண்டும்.

உப தேர்தல்கள் ஆளும் கட்சியின் வசதிக்கு ஏற்ப ஒத்திப் போடப்படுகின்றன. உப தேர்தல் நடக்க வேண்டிய அவசியம் ஏற்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் உபதேர்தல் நடத்துவிட வேண்டும்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து தேர்தல் நடந்து முடியும் வரை உள்ள இடைக்காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள மந்திரி சபைகள் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு போவதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். ஆளும் கட்சிக்கு உதவக்கூடிய வகையில் புதிதாக எந்தத் திட்டத்தையும் வகுத்து அதற்குச் செலவு செய்யக்கூடாது.

அரசாங்க வாகனங்களை ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது, அகில இந்திய ரேடியோவைத் தங்களுக்குப் பிரசார சாதனமாகப் பயன்படுத்திக் கொள்வது, அரசாங்க இயந்திரத்தை — அதிகாரிகளையும் ஊழியர்களையும் — தேர்தல் சமயத்தில் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக் கொள்வது முதலியவை குறித்தும் ஜே. பி. அமைத்த குழு வருத்தம் தெரிவித்து விரிவான சீர்திருத்த யோசனைகளைக் கூறியுள்ளது.

பண பலத்தைப் பிரயோகிப்பது நமது தேர்தல்களில் மிகப் பெரிய லஞ்ச ஊழலாகிவிட்டது. 1967 தேர்தலில் செலவழித்ததைப் போல் மூன்று மடங்கு அதிகமான பணத்தை 1971 தேர்தலில் ஆளும் காங்கிரஸ் செலவழித்திருப்பதை ஜே. பி. அமைத்த குழு சுட்டிக் காட்டுகிறது.

எல்லா அரசியல் கட்சிகளும் முழுமையான, சரியான வரவு செலவுக் கணக்குகளை வைத்துக் கொள்ளுமாறு சட்டம் இயற்றப்பட வேண்டும். தேர்தல் கமிஷன் நியமிக்கும் ஆடிட்டர்கள் இந்தக் கணக்குகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். பொதுமக்கள் விரும்பினால் கணக்கு வழக்குகளைப் பார்வையிட அனுமதிக்கப்பட வேண்டும். இதற்குச் சிறிதளவு கட்டணம் வசூலிக்கலாம். பொய்க் கணக்கு வைத்திருப்பதாகத் தெரிந்தால் கட்சி நிர்வாகிகள் சட்டப்படி குற்றம் இழைத்தவர்களாகக் கருதப்பட்டுத் தண்டனை பெற வேண்டும்.

பெரிய வர்த்தக நிறுவனங்களும் தொழிலகங்களும் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைத் தடை செய்யும் சட்டத்தை அரசாங்கம் நீக்கிவிட உத்தேசித்திருக்கிறது. இது ரொம்பத் தவறு. கம்பெனி நன்கொடைகளுக்கு உள்ள தடை உத்தரவு நீடிக்க வேண்டும். பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கம்பெனியின் பங்குதாரர்களாக இருப்பார்கள். அவ்வாறிருக்க, கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள ஓரிருவர் தாம் இஷ்டப்பட்ட அரசியல் கட்சிக்கு ஏராளமான பணத்தைத் தருவது அநீதி. ஆளும் கட்சிக்கு இப்படிப் பணம் கொடுப்பது அபரிமித லாபத்துக்கு வழி வகுக்கும் ஒருவித லஞ்சமே. எனவே, கம்பெனி நன்கொடைகளுக்குத் தடை விதிப்பதுடன் கட்சிகள் வெளியிடும் நினைவு மலர்களுக்கு விளம்பரங்கள் தருவதையும் தடை செய்ய வேண்டும். விளம்பரம் என்ற பெயரில் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல்



அன்றைய ஆட்சித் தலைவரும் இன்றைய மக்கள் தலைவரும்

பல்லாயிரக்கணக்கான ரூபாய் வசூலிக்கப்படுகிறது.

இன்றைய தேர்தல் முறைப்படி சிறுபான்மை வோட்டுக்கள் பெற்றவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வர முடிகிறது. எதிர்த் தரப்பினர் பெரும்பான்மை வோட்டுப் பெற்றிருந்தாலும் சட்ட சபையில் எதிர்க் கட்சிகளாகவே இயங்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலும்கூடச் சிறுபான்மை வோட்டுப் பெற்றிருந்தாலும் ஒருவர் வென்றவராகக் கருதப்படுகிறார். இந்த அநீதியை மாற்ற • யோசனைகள் கூறியுள்ளது ஜே.பி. அமைத்த குழு. இது விஷயத்தில் இக்குழுவின் யோசனைகளுடன் மேற்கு ஜெர்மனியில் நிலவும் நடைமுறையையும் ஒப்பு நோக்கி எது சிறந்தது என்று நிர்ணயிக்கலாம் என்பது அறிஞர் திரு க. சந்தானம் அவர்கள் கருத்து.

இவையெல்லாவற்றையும்விட மிக முக்கியமான சிபாரிசு ஒன்றை ஜே.பி. அமைத்த குழு செய்திருக்கிறது. அதாவது:

''சட்டங்களை இயற்றுவதால் மட்டும் சுதந்திரமான, நேர்மையான தேர்தல்கள் நடந்துவிடும் என்று கூற முடியாது. தேர்தல்கள் ஒழுங்காக நடப்பதைக் கண்காணிக்க வாக்காளர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.''

இந்தச் சிபாரிசை வரவேற்று மகிழும் திரு க. சந்தானம் இதனை விரிவுபடுத்திச் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அவர் கூறுவதாவது :

தேர்தல் கமிஷனே முன்வந்து கட்சிச் சார்பற்றவர்களையும் கட்சிச் சார்புள்ளவர்களையும் சம எண்ணிக்கையில் பெற்ற வாக்காளர் குழுக்களை ஒவ்வொரு பாராளுமன்ற, சட்ட சபைத் தொகுதிக்கும் ஏற்படுத்தலாம். இக்குழுக்களில் அந்தந்தத் தொகுதியில் உள்ள கண்ணியம் மிக்க பெரியோர்களை அங்கம் வகிக்கச் செய்யலாம். இக்குழுக்கள் தேர்தலுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பாகவே உருவாகி அவற்றின் செலவுகளுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கவும் வேண்டும். இக்குழுவினர் தேர்தல் தர்ம நியாயமாக நடக்கின்றனவா என்பதைக் கண்காணிப்பதோடு வாக்காளர்களுக்கு அவர்களது கடமையை உணர்த்தும் பணியையும் செய்வார்கள். வோட்டுரிமையைப் பயன்படுத்தாமல் இருப்பது தவறு என்றும், ஜாதி மத அடிப்படையிலோ பிரதேசப் பித்தின் அடிப்படையிலோ பணத்துக்கு அடிமையாகியோ வோட்டுக்களை விணடிக்கக் கூடாது என்றும் பிரசாரம் செய்வார்கள்.

ஜே.பி. அமைத்த குழுவின் சிபாரிசுகளை எல்லாக் கட்சிகளும் ஆராய்ந்து பார்க்கட்டும். குறைந்தபட்ச அவசியமான மாறுதல்களைச் செய்யட்டும். மத்திய அரசு சிபாரிசுகளை ஏற்றுப் பாரதத்தின் எதிர்காலம் ஒளிமிகுந்ததாக விளங்க உதவட்டும்.

தமிழில்: **குட்டிகிருஷ்ணன்**


சவாலில் விளைந்த ஆராய்ச்சி!

அணுவைப் பிளக்கும்போது ஏற்படும் சக்தியே அணுசக்தி என்றால் அணு இணையும்போதும் அபரிமித சக்தி உண்டாகிறது. இதுவே ஹைட்ரஜன் குண்டின் தத்துவம். இந்த இணைப்பின்போது உருவாகும் அபரிமிதமான உஷ்ணத்தைத் தாங்கி ஆள்வதில் மனிதன் இன்னும் வெற்றி காணவில்லை. இதில்மட்டும் அவன் வெற்றி பெற்றுவிட்டால் பிறகு மனிதனுக்கு எரிபொருள் பற்றிய பிரச்னைகளே இராது. அத்தனை உஷ்ணத்தையும் அவன் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தலாம். சூரியன் நெருப்புக் கோளமாகச் சுடர் விடுவதும் அணு இணைப்புத் தத்துவத்தின் அடிப்படையில்தான். மிக உயர்ந்த உஷ்ணத்தில் ஹைட்ரஜன் அணுக்களை இணைத்து ஹீலியம் உண்டாக்குகின்றன சூரியனும் இதர நட்சத்திரங்களும்.

அணு இணைப்பின்போது கதிரியக்கம் குறைவு என்பது ஒரு வசதி. ஆனால் மனிதனுக்கு உதவு முன்னர் அணு இணைப்பு பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் நீண்ட காலத்துக்கு நடக்கும்.

சூரியனின் உஷ்ணத்தையே சேமித்து வைத்துப் பயன்படுத்தவும், பூமிக்கடியிலிருந்து மிக அதிகமான அழுத்தத்தில் வெளிவரும் நீராவியைத் திறம்பட உபயோகிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடற்கரையோரங்களில் பல காற்றாடிகளை நிறுவிக் காற்றில் அவை சுழலும்போது மின்சார உற்பத்தி ஜெனரேட்டர்களை இயங்கச் செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சி நடக்கிறது. எரிமலை கக்கும்போது வெளிப்படும் உஷ்ணத்தை எப்படி ஆக்க ரீதியில் பயன்படுத்தலாம் என்றுகூட யோசித்து வருகின்றனர்.

இவையெல்லாம் அராபிய நாடுகள் எண்ணெய் விலையை உயர்த்தியதை அமெரிக்கர் ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டதால் விளைந்துள்ள ஆராய்ச்சிகள். முன்னேற்றத்துக்குப் போடப்பட்ட ஒரு முட்டுக்கட்டையே முன்னேற்றத்துக்கு உதவும் படிக்கட்டாக மாறுகிறது அங்கே!





சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

நாற்பத்தெட்டாம் அத்தியாயம்

நாற்சந்தி நடனம்

கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானால், அவர் கருணாமூர்த்தி என்பதும் உண்மையானால், உலகத்தில் ஏன் இத்தனை துன்பங்களை வைத்திருக்கிறார்? மனித வர்க்கம் ஏன் இத்தனை கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது? — இந்தக் கேள்விகள் ஆதிகாலந் தொட்டுக் கேட்கப்பட்டு வருகின்றன.

உள்ளத்தில் உண்மை ஒளி கண்ட மகான்கள் மேற்படி கேள்விகளுக்கு விடையும் சொல்லி வந்திருக்கிறார்கள். மனிதர்கள் துன்பம் என்று நினைப்பது உண்மையில் துன்பம் அல்ல. சூரியனை மேகம் மூடுவது போல் நமது அறிவை மூடியிருக்கும் மாயை காரணமாகச் சில விஷயங்களைத் துன்பம் என்று நாம் கருதுகிறோம். உண்மையில் துன்பமும் ஒருவித இன்பமேயாகும்.

"அன்பு வடிவமாகி நிற்பள்
துன்பமெலாம் அவள் இழைப்பள்
ஆக்க நீக்கம் யாவும்
அவள் செய்கை — அவள்
ஆனந்தத்தின் எல்லையற்ற
பொய்கை"

என்று பராசக்தியைக் குறித்து இந்தக் காலத்து மகாகவியான ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் பாடியிருக்கிறார்.

ஆனால் அன்பு வடிவமான ஜகன்மாதா — ஆனந்தத்தின் எல்லையற்ற பொய்கையான அன்னை பராசக்தி— ஏன் தன் மக்களுக்குத் துன்பம் இழைக்கிறாள்? ஏன் கஷ்டங்களை அளிக்கிறாள்?

துன்பம் என்றும், கஷ்டம் என்றும் நாம் எண்ணிக் கொள்கிறோமே தவிர உண்மையில் அவை துன்பங்களுமல்ல;



கஷ்டங்களும் அல்ல. அறிவுத் தெளிவோடு பார்த்தால், நாம் துன்பம் என்று நினைத்ததும் இன்பம்தான்; கஷ்டம் என்று கருதியதும் சுகந்தான்.

இந்தத் தத்துவத்தை நம்புவது அவ்வளவு சுலபமான காரியமல்ல. 'துன்பத்திலே இன்பமாவது, கஷ்டத்திலே சுகமாவது?' என்ற அவநம்பிக்கை உண்டாகத்தான் செய்யும்.

ஆயினும், நமது வாழ்க்கை அநுபவத்திலேயே சில விஷயங்களை ஆலோசித்துப் பார்த்தால் மேற்படி தத்துவத்தில் உண்மை உண்டு என்று அறியலாம்.

சோகரஸமுள்ள கதைகள், காவியங்களைப் படிக்கிறோம்; சோக மயமான நாடகங்களைப் பார்க்கிறோம்; சோகத்தை ஊட்டும் கீதங்களைப் பாடுகிறோம், கேட்கிறோம்.

இதிலெல்லாம் துன்பத்தை நாமாகத்தானே தேடி அநுபவிக்கிறோம்? எதற்காக? அந்தத் துன்பங்களிலேயெல்லாம் உள்ளுக்குள் இன்பம் பொதிந்திருப்பதினாலே தான்.

நமது வாழ்க்கையில் எத்தனையோ கஷ்டங்களை அநுபவிக்கிறோம். அநுபவிக்கும்போது கஷ்டமாக இருக்கிறது. இது சகிக்க முடியாத கஷ்டம் என்று தோன்றுகிறது. 'இந்த வாழ்க்கையே வேண்டாம்' என்று தீர்மானிக்கிறோம்.


எல்லாக் கஷ்டங்களையும் எப்படியோ சகித்துக் கொள்கிறோம். அப்படி நாம் அநுபவித்த சகிக்க முடியாத கஷ்டங்களைச் சில வருஷ காலம் கழித்து நினைத்துப் பார்க்கும்போது ஒருவகை அபூர்வ இன்பம் ஏற்படுகிறது. பழைய கஷ்டங்களை நினைத்துப் பார்ப்பதிலும் அவற்றைக் குறித்துப் பேசுவதிலும் சந்தோஷமே அடைகிறோம்.

சீதாதேவி வனவாசத்தின்போது அநுபவித்த துன்பங்களுக்கு எல்லையேயில்லை. அவ்வளவு துன்பங்களைப் பெண்ணாய்ப் பிறந்த யாரும் அநுபவித்திருக்க முடியாது. ஆயினும் அயோத்தி அரண்மனையில் ஸ்ரீ ராமபிரானுடைய பட்டமகிஷியாகச் சீதை வாழ்ந்த காலத்தில் அதிலும் கர்ப்பம் தரித்திருந்த சமயத்தில் ''உனக்கு எதிலாவது ஆசை உண்டா?'' என்று ராமன் கேட்டபோது சீதை என்ன சொன்னாள்? ''மறுபடியும் காட்டுக்குப் போய் அங்கே நான் கஷ்டப்பட்ட இடங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது!'' என்றாள்.

''துன்பம் என்பது உண்மையில் துன்பம் அல்ல. அவ்விதம் நினைக்கச் செய்வது மாயையின் காரியம். துன்பத்துக்குள்ளேயும் இன்பம்தான் இருக்கிறது!'' என்று சொல்லும் வேதாந்த உண்மையை மேற்படி சீதையின் கோரிக்கை நன்கு நிரூபித்திருக்கிறதல்லவா?

சிவகாமியை நாற்சந்தியில் நெருக்கடியான தருணத்தில் நிறுத்திவிட்டு மேற்கண்டவாறு நாம் வேதாந்தம் பேசிக் கொண்டிருப்பது பற்றி வாசகர்களின் மன்னிப்பைக் கோருகிறோம். மேலே சிவகாமியின் காரியத்தை நாம் அறிந்து கொள்வதற்கு மேற்கண்ட பூர்வ பீடிகை அவசியமாயிருக்கிறது.

தமிழகத்து ஸ்திரீ, புருஷர்களைச் சாட்டையடித் துன்பத்திலிருந்து பாது



காப்பதற்காக தளபதி விருபாக்ஷன் அவளை நாற்சந்தியில் நடனமாடச் சொன்னான். அவ்விதம் செய்வது தெய்விகமான பரத நாட்டியக் கலையையே அவமதிப்பதாகும் என்று எண்ணி முதலில் சிவகாமி, ''முடியாது!'' என்றாள்.

ஆனால், விருபாக்ஷனின் குரூரக் கட்டளையின் பேரில் 'சுளீர்' என்று சாட்டையடிச் சத்தம் கேட்டதும் சிவகாமியின் மன உறுதி பறந்து போய் விட்டது.

மறுகணம் வாதாபி நகரின் நாற்சந்தியில் சிவகாமி தேவி நடனம் ஆடத் தொடங்கினாள். அற்புதமாக ஆடினாள்.

துன்பத்திலே இன்பம் உண்டு என்னும் வாழ்க்கைத் தத்துவம் நன்கு விளங்கும்படி ஆனந்த மயமாக ஆடினாள்.

சகிக்க முடியாத கஷ்டத்திலிருந்து, எல்லையற்ற ஆனந்தம் பிறக்கும் என்னும் உண்மை நிதரிசனமாக ஆடினாள்.

தன்னை மறந்து, வெளி உலகத்தை மறந்து, கால தேச வர்த்தமானங்களை மறந்து ஆடினாள். அந்தக் காட்சியானது அழகுத் தெய்வம் ஆனந்த வெறி கொண்டு ஆடுவதுபோல் இருந்தது.

வாதாபியின் வீதியில் சிவகாமி நடனம் ஆடியபோது வானமும் பூமியும் அசைவற்று நிற்பது போல் தோன்றியது.

வீதியிலே போய்க்கொண்டிருந்த வாதாபி நகர மாந்தர்கள் அப்படி அப்படியே நின்று அந்த விந்தையைப் பார்த்தார்கள்.

பந்தமுற்ற தமிழகத்து ஸ்திரீ புருஷர்கள் அசைவற்று நின்றார்கள். கையில் சாட்டை பிடித்த கிங்கரர்களும் சும்மா நின்றார்கள். அவர்களுடைய தலைவன் விருபாக்ஷனும் அசையாமல் நின்றான்.

அனைவரும் பார்த்த கண்கள் பார்த்த வண்ணம் சிற்ப வடிவங்களைப் போல் நின்றார்கள். காலம் போவதே தெரியாமல் மெய்ம் மறந்து, உலகத்தை மறந்து நின்றார்கள்.

சூரியன் மலைவாயிலில் விழுந்தது. கோட்டைக் கதவுகள் சாத்துவதற்குரிய அஸ்தமன பேரிகை முழக்கம் கேட்டது.

சிவகாமியின் நடன பரவசத்துக்கு அதனால் பங்கம் ஏற்பட்டது. ஆட்டம் ஆடுவதை நிறுத்திச் சிவகாமி நின்றாள்.



அத்தனை நேரமும் ஏதோ ஓர் அதிசய ஆனந்த உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவள் திடீரென்று பூவுலகத்துக்கு வந்தவளாய்ச் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

தான் நின்றிருந்த இடத்தையும், இத்தனை நேரம் செய்த காரியத்தையும் நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

அவள் உள்ளத்தில் சகிக்க முடியாத வெட்கத்துக்கும் துன்பத்துக்கும் மத்தியில் இன்பமும் பெருமையும் உதித்தன.

கட்டுப்பட்டு நின்ற பல்லவ நாட்டு ஸ்திரீ, புருஷர்களைச் சிவகாமி நோக்கினாள். அவர்களுடைய கண்களிலே ததும்பிய நன்றியறிதலைக் கவனித்தாள்.

யாருடனும் ஒரு வார்த்தையும் பேசாமல் பல்லக்கில் போய் ஏறிக் கொண்டாள். பல்லக்கு மாளிகையை அடைந்தது.

நாற்பத்தோன்பதாம் அத்தியாயம்

பிக்ஷுவின் வருகை

சுக்கிலபட்சத்துப் பிரதமையில் சிவகாமி வாதாபி நகரின் நாற்சந்தியில் நடனம் ஆட ஆரம்பித்தாள்.

சுக்கில பட்சம் முடிந்து கிருஷ்ண பட்சம் வந்தது. கிருஷ்ண பட்சம் முடிவடைந்து மீண்டும் சுக்கில பட்சம் வந்தது.

சிவகாமியின் வீதி நடனம் இன்னும் நடந்து கொண்டேயிருந்தது.

தளபதி விருபாக்ஷன் நடன அரங்கத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தான். வாதாபி நகரின் முக்கிய நாற்சந்திகளை ஒவ்வொன்றாக அவன் தேர்ந்தெடுத்து அங்கங்கே கொண்டு போய்த் தமிழகத்து ஸ்திரீ, புருஷர்களை நிறுத்தினான்.

சிவகாமியும் அங்கங்கே போய் நடனமாடினாள்.

அந்தக் காட்சியைப் பார்ப்பதற்குத் தினந்தோறும் வாதாபி மக்கள் பெருந்திரளாகக் கூடினார்கள். ஸ்திரீகளும் புருஷர்களும், சிறுவர், சிறுமியர்களும் திரண்டு வந்தார்கள்.

அரசாங்க அதிகாரிகள் ரதம் ஏறி வந்தார்கள். அந்தப்புரத்து ராணிகளும் சேடிகளும் பல்லக்கில் ஏறி வந்தார்கள்.

புலிகேசி சக்கரவர்த்தி காஞ்சியிலிருந்து சிறைப் பிடித்துக் கொண்டு வந்த நாட்டியப் பெண், வாதாபி நகரின் வீதிகளில் நடனமாடுகிறாள் என்னும் செய்தி எங்கெங்கும் பரவலாயிற்று.

அதன் பயனாக அக்கம் பக்கத்து ஊர்களிலேயிருந்தும் ஜனங்கள் மேற்படி காட்சியைப் பார்க்க வந்தார்கள். தூர தூரங்களிலிருந்தெல்லாம், ஜனங்கள் வர ஆரம்பித்தார்கள். தேச மெங்கும், நாலு திசைகளிலும் இதைப் பற்றியே பேச்சாயிருந்தது.

* * *

சிவகாமியின் விஷயத்தில் வாதாபி ஜனங்களின் மனோபாவம் முதலில் ஒரு விதமாயிருந்தது. போகப் போக அவர்களுடைய மனோபாவம் வேறுவிதமாக மாறிக் கொண்டிருந்தது.

முதலில் அந்த அற்புத நடனத்தைப் பார்த்துவிட்டு வாதாபி மக்கள் பிரமித்துப் போனார்கள். "இப்படியும் ஓர் அற்புதக் கலை உண்டா?" என்று வியந்தார்கள்.

ஊரை விட்டு, உற்றாரை விட்டு, சொந்த நாடு, நகரத்தை விட்டுத் தூர


"ஆம்! நரசுஸ் காபியேதான்!
ஒன்று என்ன இரண்டு கப்
சாப்பிடுங்களேன்!"
நரசுஸ் காபி
எந்த இடத்திலும், எக் நேரத்திலும்
விரும்பிச் சாப்பிடத் தூண்டுவது
நரசுஸ் காபி!
"தெர்மலோ"
முறையில் தயாரிக்கப்படும்
ஒரே காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-636007
கிளைகள் :- பாண்டிச்சேரி மற்றும் தமிழகமெங்கும்

EP-NC-4



புள்ளியிட்ட கோட்டினூடே வெட்டவும்.

பக்கத்திலுள்ள கூப்பனை வெட்டி எடுங்கள்
அதில் உங்கள் பெயரையும், முகவரியையும்
ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து, கூப்பனில் உள்ள
முகவரிக்கு போஸ்ட் செய்யுங்கள். (தபாலில்
அனுப்புங்கள்) உங்களுக்கு ஒரு விசேஷ
தள்ளுபடிச் சீட்டு அனுப்பப்படும். அந்தச் சீட்டை
உங்கள் டீலரிடம் கொடுங்கள். அவர் பட்டியல்
விலையைவிட ரூ. 1.50 குறைந்த விலையில்
ஹேலோ வெய்ல் ஆ:ப் லவ் டால்க்
எகானமி சைஸ் டப்பா ஒன்று கொடுப்பார்.
இந்த விசேஷ சலுகை குறுகிய காலத்திற்கு
மட்டுமே உண்டு. எனவே முந்துங்கள்.
இன்றே கூப்பனை தபாலில் சேருங்கள்.

COUPON K

To
Halo Veil of Love Talc D. O.
C/o Colgate-Palmolive (India) Pvt. Ltd.
12-A Ritchie Street, Madras 600 002.

Dear Sirs,
I would like to have my Halo Veil of Love Talc discount voucher sent to :

Name ____________________

Address ____________________

____

HT.G.2 TM

தேசம் வந்திருக்கும் அந்தக் கலைச் செல்வியிடம் அவர்களுக்கு அன்பும் ஆதரவும் பச்சாத்தாபமும் ஏற்பட்டன.

அவர்களில் பலர் சிவகாமியிடம் வார்த்தையாட விரும்பினார்கள். தங்கள் வியப்பையும் மதிப்பையும் அன்பையும் அபிமானத்தையும் வெளியிட விரும்பினார்கள். அவள் வசித்த மாளிகைக்குப் போய் அவளுடன் சிநேகம் செய்து கொள்ள விரும்பினார்கள். தத்தம் வீட்டுக்கு அவளை அழைத்து உபசரிக்கவும் ஆசைப்பட்டார்கள்.

ஆனால், வாதாபி ஜனங்களின் சிநேக மனப்பான்மை சிவகாமியின் உள்ளத்தில் எவ்வித எதிரொலியையும் உண்டாக்கவில்லை. நடனம் ஆடும்போது ஏற்பட்ட கிளர்ச்சிக்குப் பின்னர் இயற்கையாகத் தோன்றும் சோர்வும் ஏற்கெனவே குடிகொண்டிருந்த மனக்கசப்பும் சேர்ந்து சிவகாமியை அவர்களுடன் முகங் கொடுத்துப் பேச முடியாமல் செய்து வந்தன.

நாளாக ஆக, ''அந்தத் தமிழகத்து நடனப் பெண் ரொம்பக் கர்வக்காரி!'' என்ற செய்தி நகரெங்கும் பரவிற்று.

ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்த அபிமானம் அநுதாபம் எல்லாம் வெறுப்பும் பரிகாசமுமாக மாறலாயின. சிவகாமி வரும் போதும், போகும்போதும் ஜனங்கள் அவளைப் பற்றிப் பரிகாசமாகப் பேசுவதும், கேலி செய்து சிரிப்பதும் அதிகமாகி வந்தன.

ஆரம்பத்தில் சிவகாமியின் நடனத்தை ''அற்புதம்'' என்றும், ''தெய்விகக் கலை'' என்றும் சொல்லி வந்த அதே ஜனங்கள் கொஞ்ச நாளைக்கெல்லாம் அதைப் ''பைத்தியக்காரியின் கூத்து'' என்று சொல்லத் தொடங்கினார்கள்.

சிவகாமி சிவிகையில் போகும்போது சிறுவரும் சிறுமியரும் ஊளையிட்டுக் கொண்டு பின்னால் ஓடினார்கள். சில சமயம் மண்ணையும், கல்லையும் அவள் மீது வீசி எறிந்தார்கள்.

இதையெல்லாம் சிவகாமி சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்திருந்தது. அசைக்க முடியாத ஓர் உறுதி அவள் மனத்தில் ஏற்பட்டிருந்தது.

புகழையும் இகழையும் பாராட்டையும் நிந்தனையையும் ஒன்றாகக் கருதும் மனநிலையைச் சிவகாமி அடைந்திருந்தாள்.

கடவுளின் அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டு இந்தப் பூவுலகில் தாமரை இலைத் தண்ணீர் போல் வாழும் முற்றும் உணர்ந்த ஞானியை அவள் ஒத்திருந்தாள்.

* * *

சிவகாமி வாதாபி வீதிகளில் நடனம் ஆட ஆரம்பித்து ஏறக்குறைய ஒன்றரை மாத காலம் ஆயிற்று.

ஒரு நாள் வழக்கம் போல் சிவகாமி நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். சூரியாஸ்தமனப் பேரிகை முழக்கம் கேட்டது.

சிவகாமி ஆட்டத்தை நிறுத்தினாள். சற்று மூச்சு வாங்குவதற்காக நின்று விட்டுப் பல்லக்கை நோக்கிச் செல்லத் திரும்பினாள்.

அவள் திரும்பிய திக்கில் தோன்றிய ஒரு தோற்றம் அவளைச் சிறிது நேரம்



மனம் குழம்பித் திகைத்து நிற்கும்படி செய்து விட்டது. அந்தத் தோற்றம் நாகநந்தியடிகளின் உருவம்தான்.

வியப்பினால் விரிந்த கண்களில் கோபாக்கினியின் பொறி பறக்க இமையா நாட்டத்துடன் நாகநந்தி தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்ததைச் சிவகாமி பார்த்தாள்.

நாகநந்தியின் முக பாவம் கண நேரத்தில் மாறியது. கண்களில் கோபாக்னி மறைந்து பரிதாபம் தோன்றியது. அவருடைய கண்களின் பார்வையும், முகத்தின் பாவமும், ''மன்னித்துவிடு'' என்று கெஞ்சுவது போன்ற உணர்ச்சியை ஊட்டின.

இதனால் மேலும் திகைப்படைந்த சிவகாமி மெதுவாகச் சுயப் பிரக்ஞை அடைந்து குழப்பத்தைச் சமாளித்துக் கொண்டு தலைகுனிந்த வண்ணம் நடந்து சென்று பல்லக்கில் ஏறிக் கொண்டாள்.

பல்லக்கு வழக்கம்போல் மாளிகையை நோக்கிச் சென்றது

ஆனால், சிவகாமியின் உள்ளம், ஜனக் கூட்டத்தின் நடுவே நின்ற நாகநந்தி யடிகளிடம் சென்றது.

''இந்தப் புத்த பிக்ஷு யார்? வேடம் பூண்ட வாதாபி சக்கரவர்த்திதானா? உருவம் அப்படியே இருக்கிறது. ஆனால், கண்களின் தோற்றத்திலும், முக பாவத்திலும் எவ்வளவு வித்தியாசம்? உணர்ச்சி என்பதே இல்லாத கல்நெஞ்சைப் பிரதிபலிக்கும் புலிகேசியின் முகத்துக்கும், கனிவும் இரக்கமும் கலைப் பரவசமும் ததும்பிய பிக்ஷுவின் முகத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்?''

பிக்ஷுவின் தோற்றம் சிவகாமிக்குப் பல்லவ நாட்டையும் அரண்ய வீட்டையும் நினைவூட்டியது. அந்தக் காலத்து வாழ்வெல்லாம் ஞாபகம் வந்தது. உண்மையில் ஒரு வருஷத்துக்கு மேல் ஆகவில்லை. ஆனால், எத்தனை யுகம் ஆகி விட்டமாதிரி தோன்றுகிறது!

* * *

மாளிகையை அடைந்தபிறகும் சிவகாமியின் உள்ளம் வழக்கமான அமைதியை அடையவில்லை. ஏதோ ஓர் ஆவல், அர்த்தமில்லாத பரபரப்பு, அவள் மனத்தில் குடிகொண்டிருந்தது.

அவளுடைய உள்ளம் அப்படி யாரை எதிர்பார்த்தது? அவளுடைய கண்கள் யாரை எதிர்பார்த்து அவ்விதம் அடிக்கடி வாசற் பக்கம் நோக்கின? நாகநந்தி பிக்ஷுவையா?

இரவு ஒரு ஜாமம் முடியும் தறுவாயில் நாகநந்தி அந்த மாளிகைக்குள் நுழைந்தபோது, சிவகாமியின் கண்களில் தோன்றிய ஒளியும் அவளுடைய முகபாவமும் அவள் புத்த பிக்ஷுவைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை உணர்த்தின.

நாகநந்தியும் சிவகாமியும் ஒருவர் முகத்தை ஒருவர் ஏறிட்டுப் பார்த்தனர். அவர்களுடைய கண்களின் தீக்ஷண்யம் ஒருவருடைய இருதய அந்தரங்கத்தை இன்னொருவர் ஊடுருவிப் பார்க்க முயன்றதாகத் தெரியப்படுத்தியது.

சற்று நேரம் அந்த மாளிகையில் மௌனம் குடிகொண்டிருந்தது. மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பிக்ஷுவின் தழுதழுத்த குரல், ''சிவகாமி! என்னை மன்னித்து விடு!'' என்று கூறியது. (தொடரும்)

காத்திருப்போம், காலம் மாறும்



பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு
பலகோடி நூறுயிரம்
ஆண்டு காத்திருந்தோம்.
கடல்படும் பாறை தேய்ந்து
கரை மணல் ஆனது!

பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு
பலகோடி நூறுயிரம்
ஆண்டு காத்திருந்தோம்
கரைப்பாசி
பரிணாமத்தால்
தரைஜந்து ஆனது!


பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு
பலகோடி நூறுயிரம்
ஆண்டு காத்திருந்தோம்-
தரைஜந்து தவழ்ந்து,
எக்கி, எட்டி, வளர்ந்து,
ஒரு மனிதன் ஆனது!

இன்னும்
பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு
பலகோடி நூறுயிரம்
ஆண்டு காத்திருப்போம்-
தனிமனித வடிவுள்
மனிதத்துவம் வளரக்
காத்திருப்போம் இன்னும்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு.....!


-அ. ஆசீர்வாதம்







நடக்கும், நம்புங்கள்!



1. செயற்கைச் சந்திரனை விண்வெளிக்கு அனுப்பு கிறார்களே யொழிய அதனைத் திரும்பப் பெற முடிவதில்லை. ஆனால் இந்த விமானத்தின் மீதுள்ள மற்றொரு குட்டி விமானம் எதிர்காலத்தில் உலகை விண்வெளியில் சுற்றி வரும். பிறகு சாதாரண விமானங்களைப் போல் பூமியில் விமான தளத்தில் வந்து இறங்கும்! வருங்காலத்தில் விண்வெளிக்கு விஞ்ஞானப் பணிகளுக்காக ராக்கெட்டில் ஏறிச் செல்லப் போகிற இந்த விமானம் படத்தில் ஒரு ஜம்போ ஜெட் மீதாகச் சவாரி செய்கிறது. விண்வெளிக்கு அனுப்பப்படு முன்னர் நடக்கும் பூர்வாங்கப் பரீட்சைகளின் ஒரு பகுதி இது. அமெரிக்காவில் இப்பரீட்சைகள் 1977 வாக்கில் தொடங்கும்.

2. வியாழனில் உயிரினம் இருக்கக்கூடும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர். படத்தில் காணப்படுவது இப்பூவுலக உயிரினம்தான். ஆனால் அது வியாழனில் காணப்படுவது போன்ற மிக அதிகமான ஆல்கலைன் காரமுள்ள சூழ்நிலையிலும் பல்கிப் பெருகுகிறது. எனவே நம்பிக்கை வளர்கிறது. அமெரிக்காவின் பயனீர்-10 செயற்கைக் கோள் அனுப்பும் படங்கள் வியாழனில் உயிரினம் உள்ளதா என்பதற்கு முடிவான விடை தரக் கூடும்.




3. பூமியிலிருந்து டெலஸ்கோப் மூலம் பார்த்தால் வாயு மண்டலம் இடையூறு செய்கிறது. விண்வெளியிலிருந்து டெலஸ்கோப் மூலம் பார்த்தால் இன்னும் நன்றாகத் தொலைதூரத்தில் உள்ள கிரகங்களை ஆராயலாம். இதற்கு உதவுபடியாக 1980 வாக்கில் இந்த டெலஸ்கோப் விண்வெளியில் உலகைச் சுற்றி வரும். அமெரிக்க விஞ்ஞானிகள் ராக்கெட்டில் பயணப்பட்டு இந்த விண்வெளி டெலஸ்கோப்புக்குச் சென்று திரும்ப முடியும்.




4. மெக்ஸிகோ மாதா கோவில் ஒன்றில் செதுக்கப் பட்டுள்ள புராதனச் சிற்பம், இந்தக் காலத்திய விண்வெளி வீரர்கள் விண்கலத்தில் அமரக்கூடிய நிலையைப் போன்றே காட்சி தருகிறது.

ஆதிநாளிலேயே விண்வெளிப் பயணம் பற்றிய அறிவு சார்ந்த கற்பனைகள் நிகழ்ந்திருக்கின்றன என்பதற்கு இது சான்று என மேற்கு ஜெர்மானிய ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

2 ஃபாஸ்ஃபோமின் டானிக்...







ஃபாஸ்ஃபோமின் அயன்

**பெண்களுக்கான
அயன் டானிக்**

ஃபாஸ்ஃபோமின் அயன் சத்து மிக்க சிவப்பு இரத்தம் உருவாகக் காரணமாயிருந்து உதவுவதுடன் சக்தியையும் பெருக்குகிறது. பெண்களுக்கான ஃபாஸ்ஃபோமின் அயனைத் தவறாமல் தினம் உட்கொள்ளுங்கள்.

ஃபாஸ்ஃபோமின் விடமின்

**குடும்பத்திற்கான
விடமின் டானிக்**

ஃபாஸ்ஃபோமின் குடும்ப ஆரோக்கியத்திற்குத் தேவையான விடமின் பி காம்ப்ளெக்ஸ் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கிய விடமின் டானிக்காகும்.

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ 2 ஃபாஸ்ஃபோமின் டானிக்

ஃபாஸ்ஃபோமின் அளிக்கும் இரு டானிக்குகளும் பசியைத் தூண்டி, வலிவைப் பெருக்கி,
நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுவனவாகும்.

SQUIBB® SARABHAI CHEMICALS LTD.

ஈ.ஆர்.ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேட்டட்
அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும்.
எஸ்.ஸி.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

SHILPI SC 8A/74 TAM



மாயாலோகமாய் மாற்றுதீர்கள்!

எஸ். கிருஷ்ணசாமி

இன்று சகஜமாய்க் காணும் பாக்கெட் ரேடியோக்கள் போல் எதிர்காலத்தில் பாக்கெட் டிரான்ஸிஸ்டர் டெலிவிஷன் தோன்றும். அத்தகைய டெலிவிஷன் திரை யொன்றை விஞ்ஞானி ஆராய்கிறார். இத் திரை, ஜன்னல் கண்ணாடி கனமுள்ளதேயானாலும் 36,000 எலெக்ட்ரானிக் பாகங்களைத் தன்னிடத்தே கொண்டுள்ளது!

கட்டுரை ஆசிரியர் திரு கிருஷ்ணசாமி டெலிவிஷன் — திரைப்படத் துறைகளில் அமெரிக்காவில் விசேஷப் பயிற்சி பெற்றவர். பல அரிய டாக்குமெண்டரி படங்களைத் தயாரித்தவர். தற்போது சிந்து நதி நாகரிகம் முதல் இந்திரா காந்தி வரை என்ற தலைப்பில் பாரத சரித்திரத்தைப் பல பாகங்களில் டெலிவிஷன் படமாகத் தயாரித்து வருகிறார்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்குமுன் ''டெலிவிஷன் என்ற புதிய சாதனம் வந்திருக்கிறதே, அதன் எதிர்காலம் என்ன?'' என்று அமெரிக்காவில் யாரையாவது கேட்டிருந்தால், பதில் கூறுவது மிகவும் கடினமாக இருந்திருக்கும். ஆரம்ப காலத்தில் ஒரு சில பணக்காரர்களே வைத்துக் கொள்ளக் கூடியது என்று கருதப்பட்டாலும், மிக குறுகிய காலமான இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே திடீர் எனப் பரவி அமெரிக்க மக்கள் அனைவரையுமே கவர்ந்து விட்டது டெலிவிஷன். உலகின் மற்ற பல பாகங்களிலும் — பொருளாதாரத் துறையில் அவ்வளவு முன்னேறாத நாடுகளிலும்கூட — டெலிவிஷன் அறிமுகப்படுத்தப்பட்டதுமே மக்கள் அனைவருக்கும் கண்பறிக்கி, எளியவர்கள் வீட்டிலும் இடம் பெற்றுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை மற்ற நாடுகளின் அனுபவங்களைக் கொண்டும் நம் நாட்டில் வகுக்கப்பட்டுள்ள சில திட்டங்களைக் கொண்டும், ஓரளவு நம் நாட்டில் டெலிவிஷனின் வருங்காலத்தைப் பற்றி கணிக்க முடியும். மற்ற எந்த சமூக சாதனத்தைப் போலவும், தொழிலைப் போலவும் டெலிவிஷன் ஸ்தாபனத்தின் சமூக விளைவுகளும் எந்தப் பொருளாதார ஆதாரத்தில் அது நடைபெறும் என்பதைப் பொறுத்ததே. அமெரிக்காவில் ஒரு சில பிரத்தியேக ஸ்தாபனங்களைத் தவிர டெலிவிஷன் அனைத்துமே தனியார்த் துறையில் உள்ளவை; வர்த்தக ஒலிபரப்பை ஆதாரமாகக் கொண்டவை. கம்யூனிஸ்டு நாடுகளில் டெலிவிஷன் அரசாங்கச் செய்தித் துறையைச் சார்ந்திருப்பதால் கல்வி போதிப்பதில் டெலிவிஷன் சிறந்த பணி புரிகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியத் தூதர் ஒரு முறை கூறினார் :

''இந்தியாவில் நாங்கள் சிவப்புத் தேசங்களின் பொருளாதாரச் சிக்கனத்தையும், மேல்நாடுகளின் சமூக அரசியல் சுதந்திரத்தையும் இணைத்துச் செயல்பட விரும்புகிறோம்.'' நாம் சொல்வதற்கும் செய்வதற்கும் உள்ள வேறுபாடுகளுக்கு ஒரு சான்று சினிமா. ஏராளமான பணச் செலவில் தயாராகும் சராசரி இந்தியத் திரைப்படம் அதன் எழுத்தாளர்களையும் டைரக்டரையும் வக்கரமான வர்த்தகத்துக்குக் கட்டுப்பட வைத்திருக்கிறது.

இந்திய டெலிவிஷன் எப்படி இருக்கும் என்பதற்கு அகில இந்திய ரேடியோ, இந்திய செய்திப் படத்துறை, பொதுவான இந்திய சினிமாத் துறை இவை மூன்றையும் கவனிக்கத் தேவையாகிறது. இவற்றில் ஒன்றை முன்னோடியாகக் கொண்டு இந்திய டெலிவிஷன் வளருமேயானால் பல கோடி ரூபாய் செலவில் இந்நாட்டுக்கு டெலிவிஷன் வருவது விரயமே ஆகும். இசைத் துறை தவிர மற்றத் துறைகளில் இந்திய ரேடியோவின் கலாசாரப் பணி மிகவும் குறைவானதே. அரசாங்கச் செய்தித் துறைப் படங்களும், சமீப வருடங்களில் பல அம்சங்களில் முன்னேறி இருந்தாலும், அவற்றை ரசிப்பதற்கென்றே மக்கள் ஆர்வமாகக் கூடும் அளவுக்கு முன்னேற்றம் இல்லை. ஆகவே டெலிவிஷன் எவ்வளவு சீக்கிரமாக இங்கு பரவினாலும் டெலிவிஷன் காட்சிகள், சாதாரண ரேடியோ நாடகங்களின் தரத்திலோ, பிலிம்ஸ் டிவிஷன் படங்களின் தரத்திலோ அமைந்திருந்தால், ''எங்கள் வீட்டிலும் டெலிவிஷன் இருக்கிறது'' என்ற பெருமைக்காக ஒரு டெலிவிஷன் சாதனத்தை வீட்டில் வாங்கி வைத்து விட்டு, மக்கள் எப்போதும் போல் சினிமாவுக்கும், சபா நாடகங்களுக்குமே செல்வார்கள்.

சினிமாவுக்குப் போட்டியாக மக்களைக் கவர்ந்து வீட்டில் டெலிவிஷன் பார்க்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, நம் சினிமாவின் தாழ்ந்த தரத்தோடு போட்டியிட்டு, வாழ்க்கைக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு நிழல் உலகத்தின் போதையை அதிகரிக்கும் அளவுக்கு டெலிவிஷன் பயன்படுத்தப்பட்டால் எதிர்காலத்துக்கு அது ஒரு சோகமான, ஆபத்தான முடிவாகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள், எந்த அளவுக்கு வெற்றி பெற்றாலும் இந்நாட்டின் ஜனத் தொகை பெருகிக் கொண்டேதான் இருக்கும். வளர்ந்து கொண்டிருக்கும் இந்த மக்கள் தொகையில் பெரும் பகுதிக்கு கல்வி அளித்து, ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு சிறு தொழிலிலேனும் பயிற்சி அளித்து மனித சக்தியை ஆக்க பூர்வமாகப் பயன்படுத்தினால் நாட்டின் உற்பத்தித் திறன் அதிகரித்து, எந்த ஒரு மக்கள் தொகை பாரமாகக் காட்சி அளிக்கிறதோ அதுவே நாட்டு முன்னேற்றத்துக்கு ஒரு சாதனமாய் அமையும். இவ்விதம் மக்கள் மனப்பான்மையை மாற்றுவதிலும், நேரிடையாக அவர்கள் திறன்களை வளர்க்கும் அளவில் அவர்களுக்குப் பரந்த, உயர்ந்த, நிரந்தர, கல்வி கற்பிப்பதிலும், டெலிவிஷனுக்கு இணை உலகில் வேறு எதுவும் இல்லை.

நம் நாட்டில் செயற்கை உபகிரகம் கொண்டு, டெலிவிஷன் காட்சிகள் சில மாநிலங்களுக்கு ஒளிபரப்பப் போகிறார்கள்.

இந்தப் பெரும் திட்டத்துக்குக் கருவிகள் நிறுவ ஏராளமான செலவு ஆனாலும், அதற்குத் தேவையான அளவு கல்விப் பாடங்களையும், மற்றும் பல டெலிவிஷன் நிகழ்ச்சிகளையும் தயாரிக்க ஒதுக்கப் பட்டிருக்கும் தொகை மிக மிகக் குறைவானதே. நாம் அரைக்கிணறு தாண்டும் பழக்கத்தை விடுத்தால்தான் முன்னேற முடியும். நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு டெலிவிஷன் ஓர் அத்தியாவசியமான, இன்றியமையாத சாதனமாகும். நம் வருங்காலம் இதோடு மிகவும் பிணைந்து இருக்கிறது. அமெரிக்காவிலும் கானடாவிலும் ''ஹரே கிருஷ்ணா'' இயக்கத்தைச் சேர்ந்த பலர் ''உலகமெனும் மாயையைக் காட்டிலும் தீவிரமான, வசீகரமான மாயா லோகத்தில் நம்மை மூழ்கடிக்கும் சாதனம் டெலிவிஷன்'' என்று கருதி, டெலிவிஷன் பார்ப்பதில்லை என்று சபதம் செய்திருக்கிறார்கள். தனி நபர் சுதந்திரம் இல்லாத பல நாடுகளில் சர்வாதிகாரத்தைப் பலப்படுத்தும் கருவியாகவும் அமைந்திருக்கிறது டெலிவிஷன். உலகெங்கிலும் இப்படி பல உதாரணங்கள் கண்கூடாகத் தெரிவதால் மக்கள் ரசனையை உயர்த்தும்படியும் நாட்டு வளர்ச்சிக்கும் மக்கள் நலனுக்கும் உபயோகமான முறையிலும் மாசிலா மகிழ்ச்சி தரும் சாதனமாய் அமைய டெலிவிஷனுக்கு வாய்ப்பு இருக்கிறது. வாய்ப்புக்களைக் கெட்டியாகப் பற்றிக் கொள்வதும் விடுவதும் நம் கையில்தானே இருக்கிறது?

கணக்குப் பார்க்கிறோம்!


பாரத ரத்னா திரு ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு டெம்பிள்டன் நிறுவனத்தின் விருதும் பரிசும் கிடைத்துள்ளன. மத முன்னேற்றத்துக்காகப் பாடுபடுகிறவர்களுக்கு வழங்கப்படும் இந்தப் பரிசின் மதிப்பு 96,000 டாலர். இந்து மதத்துக்கும் ஆண்டவனை மக்கள் புரிந்து கொள்ளவும் அவர் ஆற்றிய பணிக்கு இந்தப் பரிசை வழங்கியுள்ளனர். தமிழகத்துக்கும் பாரதத்துக்கும் பெருமை, இந்து மதத்துக்குப் பெரும் கௌரவம்.



இதில் நம் கவனத்தைக் கவர்கிற மற்றோர் அம்சமும் உண்டு. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு இந்தப் பரிசுத் தொகை 14,000 டாலர் அதிகரித்துள்ளது. காரணம் பண வீக்கம், நாணயத்தின் மதிப்பைக் குறைத்துவிட்டதுதான் என்று பரிசு வழங்கும் நிறுவனம் கூறுகிறது.

ஒரு பரிசுத் தொகைக்கே இந்த அடிப்படையில் கணக்குப் போட வேண்டும் என்றால், எல். ஐ. சி.யிலும் பாங்கிலும் தபாலாபீசிலும் சேமிப்பு என்ற பெயரில் முடங்கிக் கிடக்கும் நமது பணத்துக்கு அதே அளவுகோல் கொண்டு நாம் கணக்குப் பார்க்கக் கூடாதா?

சி. எஸ். அவர்களே கவனியுங்கள்!



இரும்புப் பெட்டியில் ஒரு ரொட்டி!

கி.பி. 1800இல் உலக ஜனத்தொகை 90 கோடியாக இருந்தது. இது 1900இல் 160 கோடியாகி, 1974இல் 390 கோடிக்கு வந்து விட்டது. கி.பி. 2000இல் உலகில் 650 கோடிப் பேர் இருப்பார்கள். உலகிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் இரண்டே பிள்ளைகளைப் பெறுவது என்று இன்று முதல் கணக்கு வைத்துக் கொண்டாலும் கூட, உலக மக்கள் தொகை பெருக்கம் இந்த விகிதாசாரத்திலேயே அதிகரிக்கும்.

இதை நீங்கள் படிக்கிறீர்களே, இந்த நேரத்துக்குள் எதிர்கால உலகில், 10 பேர், பெரும்பாலும் குழந்தைகள், பட்டினியால் சாவார்கள் - அதே சமயத்தில் 60 குழந்தைகள் பிறந்திருப்பார்கள்.

ஜனத்தொகைப் பெருக்கத்தின் அபாயத்தை உணர்த்தும் ஐ. நா. சபையின் பிரசாரப் படம் ஒன்று இரும்புப் பெட்டிக்குள் ஒரு ரொட்டி வைத்துப் பாதுகாக்கப்படுவதைக் காட்டுகிறது.

-க. குழந்தைநாதன்


1. கேசத்தை ஷாம்புவால் சுத்தம் செய்யுங்கள்.
2. நரை முடியின் மீது க்ளீம் ஹேர் டையை சமமாகப் பரப்புங்கள். சிறிது நேரம் அப்படியே இருக்கட்டும்.
3. நன்றாக நீரால் கழுவி, ஷாம்புவால் சுத்தம் செய்யுங்கள்.
4. கண்ணாடியில் பாருங்கள். நீங்கள் எவ்வளவு இளமையுடன் தோன்றுகிறீர்கள்!
உங்கள் கேசத்தை மீண்டும் இளமையுடன் விளங்க வைப்பது எவ்வளவு எளிது பாருங்கள்.
புதிய க்ளீம் ஹேர் டை உபயோகிக்க எளிதானது. இது சமமாகப் பரவி, விரைவில் செயலாற்றுகிறது. உங்கள் கேசத்திற்கு இயற்கையான வண்ணமும் பளபளப்பும் அளிக்கிறது. இது கரைந்து போகாது: மங்காது—பல முறை கேசத்தை சுத்தம் செய்த பிறகு கூட. உங்களுக்குச் சிறந்தது—க்ளீம் பர்மனென்ட் ஹேர் டை.
புதிது
GLEEM
PERMANENT HAIR DYE
NATURAL BLACK
க்ளீம்
பர்மனென்ட் ஹேர் டை
இயற்கையான கருமை & கருமை கலந்த பழுப்பு.
சிறப்பான வண்ணம் பெற க்ளீம் ஷாம்பு உபயோகியுங்கள். பிரபல கேச அலங்கார நிபுணர்கள் சிபாரிசு செய்வது.
Geoffrey Manners & Co., Ltd.
GHD-1-A



அணுகுண்டு சோதனை நடந்த போக்ரான் பாலைவனத்துக்கு இந்திரா காந்தி விஜயம்

அணு சக்தியை அழிவுக்கும் பயன்படுத்த முடியு மாதலால் அது ஆபத்து மிகுந்ததல்லவா?

அணு சக்தியை ஆண்டவனுக்கு ஒப்பிட லாம். ஆண்டவன் 'காத்தல்' வேலையையும் செய்கிறார். அழிக்கவும் வல்லவர் அவர். எதிர்காலத்தில் அணுசக்தி மனித சமுதாயத் தின் செழிப்புக்கும் வளர்ச்சிக்கும் பயன்படக் காத்திருக்கிறது. அழிவுக்கு அதனைப் பயன் படுத்த மனிதன் தீர்மானித்தால் அது அணு சக்தியின் குற்றமல்ல.

அணுசக்தியை எப்படி ஆக்கபூர்வமாக உபயோகப் படுத்தலாம்?

நீர்த் தேக்கங்களில் தண்ணீர் வற்றினால் நமக்கு மின்சாரத் தட்டுப்பாடு. போதுமான கரி அல்லது அராபிய எண்ணெய் கிடைக்கா விட்டால் அனல் மின்சார நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின்சார அளவு குறைகிறது. பவர் கட் வருகிறது. அணுசக்தி மின்சார நிலையங்கள் நடைமுறைக்கு வந்துவிட்டால், இந்தக் கட்டுகளுக்கும் வெட்டுகளுக்கும் இடமே இருக்காதே!

நமது நாட்டில் அணுமின் நிலையங்கள் எங்கெங்கு உள்ளன?

மகாராஷ்டிரத்திலுள்ள தாராபூர் அணு சக்தி மின்சார நிலையம் 1969லிருந்து இயங்க ஆரம்பித்துவிட்டது. ராஜஸ்தானில் இரண் டாவது நிலையம் 1972ல் செயல்படத் தொடங்கியது. மூன்றாவது அணுசக்தி மின் சார நிலையம் தமிழ்நாட்டிலுள்ள கல்பாக் கத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது. உத் தரப் பிரதேசத்தில் நான்காவது நிலையத்தை நிர்மாணிக்க வேலை ஆரம்பித்துவிட்டார்கள்.

அணுமின் நிலையங்களில் உற்பத்திச் செலவு மிக வும் அதிகமல்லவா?

ஆரம்ப காலத்தில் அப்படிக் கருதப் பட்டது. ஆனால் இப்போது உயர்ந்து கொண்டே வரும் எண்ணெய் விலை நிலக்கரி போக்குவரத்துச் செலவுகள் இவற்றைப் பார்க்கையில் நீண்டகால நோக்கில் அணு மின் நிலையம் அப்படியொன்றும் அதிக செல வுள்ளதாகத் தோன்றவில்லை.


அணுமின் நிலையம் இயங்குவதன் தத்துவம் என்ன?

அணுவைப் பிளப்பதன் மூலம் கிடைக் கும் உஷ்ணத்தின் அளவு மிக மிக அதிகம். அந்த உஷ்ணம் நீராவியை உற் பத்தி செய்து ஜெனரேட்டர்களை இயக்க உதவும். உதாரணத்துக்கு ஒரு பவுண்டு நிறையுள்ள யுரேனியம் உலோகத்திலுள்ள அணுக்களை உபயோகிப்பதன் மூலம் முப்பது லட்சம் பவுண்டு கரியை எரிப் பதன் மூலம் கிடைக்கும் உஷ்ணம் கிடைக் கிறது. நம் தேசத்தில் தோரியம் நிறைய இருக்கிறது. உலகிலேயே தோரியம் மிக அதிகமாகக் கிடைக்கும் நாடு, நம் நாடு தான். யுரேனியத்துக்குப் பதிலாகத் தோரி யத்தை உபயோகப்படுத்த ஏற்பாடு செய்யப் படுகிறது. இந்த முறைகள் மூலம் இன்னும் இருபது ஆண்டுகளில் நாட்டில் மின்சார உற் பத்தியும் அதையொட்டிய தொழில் வளர்ச்சி யும் கணிசமாக ஏற்படும்.

மின்சார வளர்ச்சியைத் தவிர வேறு எந்தத் துறைகளில் அணு சக்தியை மக்கள் நலனுக்குப் பயன்படுத்துகிறோர்கள்?

விவசாயத் துறை, மருத்துவத் துறை, தொழில் துறை ஆகியவற்றில் கூட அணுசக்தி பிரமாதமானசேவை களைச் செய்கிறது. இங்கே அணுசக்தி என்று குறிப்பிடப்படுவது ரேடியோ ஆக்டிவ் ஐஸோடோப்ஸ் என்ப தாகும். ஒவ்வோர் உலோகத்தின் அணுவிலும் அடங்கியிருக்கும் நியூட் ரான், எலெக்ட்ரான், புரோட்டான் ஆகிய மூன்று பங்குதாரர்களில் இந்த நியூட்ரானுக்கு ஒருவித விசேஷ பங்கு உண்டு. இந்த நியூட்ரான் சேர்ந்த அணுக் கருவின் (nucleus) கதிர் வீச்சைத் தான் 'ஐசோடோப்' என்கிறோம். உலோகத்துக்கு உலோ

அணுவிஞ்ஞானியுடன் அரை மணி நேரம்



கர்ப்பிணிகள் மலைக்கோயில்களுக்குப் போகக் கூடாது என்று வீட்டில் பெரியோர்கள் கூறுவதற்கு விஞ்ஞான ஆதாரம் கிடைத்துள்ளது.

மேற்கு ஜெர்மனி விஞ்ஞானிகள் ஆராய்ச்சிப்படி 1500 மீட்டர் உயரத்தில் இரத்தத்தில் பிராண வாயுவின் அளவு குறைகிறது. இது பிறக்கப்போகும் குழந்தையின் மூளையைப் பாதிக்கலாம். 2000 மீ. உயரத்திலும், அதற்கு மேலும் கருவிலிருக்கும் சிசுவின் மூளை அணுக்கள் வெகுவாகப் பாதிக்கப்படு கின்றன.

உயரப் பாகங்களிலேயே இருந்து பழகிவிட்ட பெண் களை மலை ஏறுவது பாதிக்காது என்பது ஆறுதலைத் தருகிற தகவல்.

பப்பு - ஆதாரம்: ஸயன்ஸ் டுடே

****************** ******************

கம் இந்தக் கதிர் வீச்சின் தன்மை வேறுபடும். அதை நிர்ணயப்படுத்தித் தேவையான துறைக்கு உபயோகப்படுத்துகிறார்கள். ரேடியோ ஐசோடோப்ஸ் நிறைந்த உரங்கள், பூச்சி கொல்லிகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பரிசோதனையும் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் விளைச்சல் இருப்பது சத விகிதத்துக்கு மேலாக அதிகரிக்கும். மற்ற மருந்துகளால் ஒழிக்கப்பட முடியாத வீட்டில் பூச்சிகள், இதர பயிர் நாசம் செய்யும் பூச்சிகள் நிர்மூல மாக்கப் பட்டிருக்கின்றன. ரேடியேஷன் மூலம் பழவகைகளைப் பலநாட்கள் கெடாமல் வைத்துக் கொள்ளலாம்.

மருத்துவத் துறை சாதனைகளைப் பற்றிச் சொல்ல முடியுமா?

அங்கேயும் இந்த மாதிரி ரேடியோ ஐசோடோப்புகள்தாம் பயன்படுத்தப்படு கின்றன. வியாதிகளைக் கண்டு பிடிக்கவோ அவற்றின் தன்மைகளைப் புரிந்துகொள் ளவோ ஆலைகளைக் குணப்படுத்தவோ ஐசோடோப்புகள் உதவுகின்றன. தைராயிட் சுரப்பி சம்பந்தப்பட்ட வியாதிகள், புற்று நோய் போன்றவற்றுக்கு மருந்தாய் விளங்கு கின்றன.

தொழில் துறைகளில் இவற்றால் என்ன லாபம்?

பெரிய அணைக்கட்டுக்களில் எங்கேயாவது உட்பகுதிகளில் கசிவுகள் ஏற்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதை நுழைந்து பார்க்க முடியுமா?... டிரேசர் என்று சொல் லப்படும் அணுக் கதிர் வீச்சைப் பயன் படுத்தி விசேஷக் காமிராக்கள் மூலம் காங் கிரீட் சுவரையும் எக்ஸ்ரே படம் போலப் படம் எடுக்கலாம். இதே போல இரும்பு கர்டர்களைச் சரியாக இணைத்திருக்கிறார் களா என்பதையும் 'ட்ரேசர்' கண்டுபிடிக்கும்.

கடல் நீரைக் குடிநீராகப் பயன்படுத்தலாம் என் கிறார்களே?

இதற்கு 'டி சாலினேஷன்' (Desalination) என்று பெயர். இது நடக்கக் கூடிய காரியம் தான். ஆனால் இதை அவ்வளவு மலிவாக நடத்த முடியாது. முதலீடு அதிகம் தேவைப் படும்.

சென்ற ஆண்டு மே மாதத்தில் ராஜஸ்தான் பிரதேசத்தில் பூமிக்கடியில் ஓர் அணுகுண்டு பரி சோதனை நடந்ததே, எதற்கு? அதை ஏன் சிலர் எதிர்க்கிறார்கள்?

பூமிக்கடியில் இருக்கும் உலோகத் தாதுக் களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், எரி வாயு, எண்ணெய்க் கிணறுகளைப் பற்றிப் புரிந்து கொள்ளவும் அணுவெடிச் சோதனை களை நிகழ்த்தலாம். ஆறுகளைத் திசை திருப் பவும், மலைகளைப் பெயர்க்கவும் அணுவெடி களைப் பயன்படுத்தலாம். ஆனால் கதிரியக்கம் பரவாமல் காக்க வேண்டும். எதிர் காலத்தில் இப்படியெல்லாம் அணுசக்தியைப் பயன் படுத்த இன்று பூர்வாங்கமாக நடத்த பரீட்சையே போக்ரான் பாலைவனத்தில் நடக்க அணுகுண்டு சோதனை. இதுவே அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல் நமக்கு இருக்கிறது என்பதையும் நிரூபித்ததால் உலக நாடுகள் பலவற்றில் நமக்கு எதிர்ப்புக் கிளம்பி யிருக்கிறது.

பேட்டி: **கோமதிசுவாமிநாதன்**

ராஜாஜி சிந்தனை

நேசக் கரம் நீளட்டும்

பாகிஸ்தானும் இந்தியாவும் ஒன்றையொன்று நம்பும் நேச நாடுகளாய் விளங் கட்டும். எம். ஐ. ஜி. யுத்த விமானங்களையோ அல்லது ஏவு கணைகளையோ பெறப் போட்டி போட்டுக்கொண்டு இரு நாடுகளின் பொருளாதாரத்தையும் பாழடிக்க வேண்டாம். ஒருவரையொருவர் அழிக்கச் சக்தி திரட்டுவது சர்வ நாசத்துக்கு இட்டுச் செல்லும் போட்டி. இது மிகத் தெளிவான விஷயம்; மறுக்க முடியாத உண்மை. அசைக்க முடியாத நட்புறவை அடைய நாம் வழிகாண வேண்டும். கோபத்துக்கு ஆளாகி வெளி நாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய போர் விமானங் களின், ஏவுகணைகளின் பலாபலன்களை ஆராயாதிருப்போம். இந்த விதமாகப் பாதுகாப்புத் தேடுவது சர்வ நாசத்தை விளைவிக்கும். ருஷ்யாவும் அமெரிக்காவும் ஆயுதக் குவிப்புப் போட்டா போட்டியில் இறங்கியுள்ளது பற்றி மேற்கத்திய நாடுகள் வருந்துகின்றன. ஆனால் அப்போட்டியிலிருந்து இரு நாடுகளாலும் தங்களை விடு வித்துக்கொள்ள முடியவில்லை. அதேபோன்ற நிலை இங்கும் உருவாக அனுமதிக்க வேண்டாம்.

சுயராஜ்யா, ஜூன் 30, 1962

வாழ்க்கையில் சந்தோஷமளிக்கும் பல தருணங்கள் ஏற்படுகின்றன

தலைவலி உங்கள் சந்தோஷத்தை கெடுக்க விடாதீர்கள்



2 ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்

ASPRO
Nicholas

மைக்ரோஃபைன் ஆஸ்ப்ரோ வலியை அதிவேகமாக வெளியே இழுத்து விடுகிறது

A.G.62 TM

பொன்னியின் புதல்வர்

சுந்தா

32. உப்பு சத்தியாக்கிரகம்

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது

— நாமக்கல் கவிஞர்

"விமோசனம்" ஒன்பதாவது இதழ் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது, மகாத்மாவின் புதியதொரு சாத்விகப் போரின் முழக்கம் கேட்டது. பின்னர் ஒரு விடுதலைப் போர் பெரிதாக மூண்டு படர்ந்தது. அதுதான் புகழ் மிக்க உப்பு சத்தியாக்கிரகம்!

அந்தச் சத்தியாக்கிரகத்தைப் பற்றி நிறையத் தெரிந்தவர்கள் இருக்கலாம். கொஞ்சம் தெரிந்தவர்கள் இருக்கலாம். கொஞ்சமும் தெரியாதவர்களும் இருக்கலாம். உண்ணுவிரதம் போல், அது ஓர் உப்பில்லாப் பத்திய விரதம் போலும் என்று நினைப்பவர்களும் கூட இருக்கலாம். ஆகவே, தெரிந்தவர்களுக்கு நினைவூட்டும் விதத்திலும், மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் விதத்திலும் அந்த உப்புச் சத்தியாக்கிரகம், ஏன், எப்படித் தொடங்கி நடந்தது என்பதைப் பெரும்பாலும் கல்கியின் சொற்களில் பதிந்துள்ள வடிவில் பார்க்கலாம். அந்தப் போராட்டம் தொடங்கிய சமயத்தில் "சுதந்திரப் போர்" என்ற சிறு பிரசாரப் புத்தகம் ஒன்றைக் கல்கி எழுதி வெளியிட்டார். அந்தப் புத்தகத்திலிருந்து எடுத்துச் சுருக்கிய பகுதிகளை முதலில் பார்க்கலாம்.

1930 மார்ச்சு இரண்டாம் தேதியன்று, மகாத்மா காந்தி, வைஸராய் லார்டு இர்வினுக்கு நீண்டதொரு கடிதம் எழுதினர். அதில் அவர், பிரிட்டிஷ் ஆட்சியினால் இந்தியாவில் விளைந்துள்ள கேடுகளையும் கொடுமைகளையும் வரிசையாய் எடுத்துச் சொல்லி, அவற்றை அகற்றுமாறு கோரிக்கை விடுத்தார். அப்படிச் செய்யாவிடில், ஏழை மக்களை வருத்தும் உப்பு வரியைக் கண்டனம் செய்யும் முறையில், அந்த வரி பற்றிய சட்டத்தைப் பகிரங்கமாய்த் தாம் மீறப் போவதாக அறிவித்தார்:

"ஏழை மக்களுக்கு இந்த வரி மிகக் கொடுமையானது. சுதந்திர இயக்கம் ஏழை மக்களுக்காகவே ஆரம்பிக்கப்பட்டதாகையால், அவர்களுக்குக் கொடுமையை விளைவிக்கும் இந்த அநியாய வரியை எதிர்ப்பதே சுதந்திர இயக்கத்தின் முதல் வேலையாகும். என்னைக் கைது செய்து என் கோரிக்கையைத் தடுக்க நீங்கள் முற்படக் கூடும் என்பதை நான் அறிவேன். இந்த உப்பு வரியானது சட்டப் புத்தகத்திலிருந்து எடுபடும் வரையில், இதை எதிர்த்து, அதனால் ஏற்படும் துன்பங்களை அனுபவிக்கத் தயாராய் இருக்கும் பதினாயிரக்கணக்கான மக்கள், கட்டுப்பாடாக என்னைப் பின்பற்றச் சித்தமாய் இருப்பார்கள் என்று நம்புகிறேன்."



காந்திஜியின் இந்தக் கடிதத்துக்கு வைஸராயின் சொந்தச் செயலாளரிடமிருந்து மிகச் சுருக்கமானதொரு



தண்டியைப் போல், உப்பு சத்தியாக்கிரகத்துக்கு ஏற்றதாய்.....
(சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி யாத்திரை புறப்படுகிறார் காந்திஜி)

பதில் வந்தது. ''சட்டத்தை மீறிப் பொது ஜன அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய தான முறையை நீங்கள் பின்பற்ற எண்ணி இருப்பதை அறிந்து வைஸராய் வருத்தப்படுகிறார்'' என்று அந்தப் பதிலில் கண்டிருந்தது.

அந்தப் பதிலைக் கண்டு மகாத்மா மனம் நொந்து, தமது ''யங் இந்தியா'' பத்திரிகையில் இப்படி எழுதினார்:

''தேச மக்கள் ஒவ்வொருவரும் வருஷத்தில் ஐந்து அணா, அதாவது ஏறக்குறைய மூன்று தினத்தின் சராசரி வருமானத்தை உப்புக்காக வரி கொடுக்கிறார்கள். இராஜப் பிரதிநிதி, ஏழைகளை வருத்தும் இவ்வரியை எடுத்து விட்டு, நான் ஆரம்பிக்கவிருக்கும் போரை நடக்க முடியாமல் செய்திருக்கலாம்.

''அரசாங்க வழக்கப்படி பதில் அனுப்பாமல் இன்னும் எவ்வளவோ அவர் செய்திருக்கக் கூடும். ஆனால் அதற்குக் காலம் இன்னும் வரவில்லை. சீக்கிரத்தில் இணங்கும் குணம் ஆங்கில தேசத்தாருக்குக் கிடையாது. செய்ததைத் தப்பென்று உணர்ந்து பச்சாத்தாபப்படமாட்டார்கள். அத்தகையோருடைய பிரதிநிதியாவார் வைஸராய். வெறும் வேண்டுகோளுக்கு அவர்கள் இணங்கமாட்டார்கள்; ஆனால் மிருக பலத்துக்குச் செவிமடுப்பார்கள்....யார் எவ்விதக் கொடூரமான கஷ்டங்களுக்கு ஆளானாலும் அதைப் பற்றித் துயரப்படமாட்டார்கள். எவ்வளவு நியாயமான காரணங்கள் காட்டினாலும், தாங்கள் வருஷம் தவறாமல் இந்தியாவிலிருந்து அடையும் லாபத்தை விட்டுக் கொடுக்கமாட்டார்கள்....

''சட்டம் மீறுவதிலும், பொதுஜன அமைதிக்கு அபாயத்திலும் முடியக்கூடிய முறையை நான் கைக்கொள்ள உத்தேசித்திருப்பதாகக் கூறியிருக்கின்றார். சட்டங்களும் விதிகளும், பெருங் காடு போல, எத்தனையோ புத்தகங்கள் நிறைய இருந்தும் இந்தியா அறிந்திருக்கும் சட்டம் ஒன்றே. அது பிரிட்டிஷ் நிர்வாகிகளின் மனம் போன போக்குத்தான். மேலும் இந்திய சமூகத்தில் தற்போதுள்ள அமைதி, சிறைச்சாலையில் உள்ள அமைதியே தவிர வேறில்லை. இந்தியாவே ஒரு பெருஞ் சிறைச்சாலையாகத்தான் இருக்கிறது. இத்தகைய ஆட்சியை நான் நிராகரிக்கிறேன். சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல் இந்திய சமூகத்தின் தொண்டையைப் பிடித்து அமுக்கும் இத்தகைய பலவந்த அமைதியை முறியடிக்க வேண்டியது என் புனிதக் கடமையாகும்....''

இராஜப் பிரதிநிதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டவாறே, காந்தியடிகள் மார்ச்சு பன்னிரண்டாம் தேதி சபர்மதி சத்தியாக்கிரஹ ஆசிரமத்திலிருந்து 79 தொண்டர்களுடன் பாத யாத்திரையாகக் கிளம்பி, ஏப்ரல் ஐந்தாம் தேதி கடற்கரையில் தண்டி என்னும் கிராமம் சேர்ந்து, மறுநாள் ஆறும் தேதியன்று உப்புச் சட்டத்தை மீறி உப்பு எடுத்து சத்தியாக்கிரகப் போர் தொடங்கினார். அன்று முதல் தேசமெங்கும் ஆயிரக் கணக்கான ஜனங்கள் உப்புச் சட்டத்தை மீறினார்கள். சேத் ஜம்னாலால் பஜாஜ் முக்கிய நூற்றுக் கணக்கான தலைவர்களும் தொண்டர்களும் சிறை புகுந்தார்கள்.

அந்தப் போராட்டத்தைத் தமிழ் நாட்டில் துவக்கி நடத்தும் பொறுப்பை ராஜாஜி ஏற்றுக் கொண்டார். தண்டியைப் போல் உப்புச் சத்தியாக்கிரகத்துக்கு ஏற்றதாய், சோழ மண்டலக் கரையில் உள்ள வேதாரண்யத்தை அவர் தேர்ந்தெடுத்தார். பெரும் பரப்பில் தானாகவே உப்பு விளையும் இடம் அது.

ஏப்ரல் 13-ம் தேதியன்று பாத யாத்திரையைத் திருச்சியிலிருந்து தொடங்குவதென்று தீர்மானித்து, அங்கே டாக்டர் ராஜனின் பங்களாவைச் சத்தியாக்கிரக நிலையமாகவும் அலுவலகமாக



.....வேதாரண்யத்தை ராஜாஜி தேர்ந்தெடுத்தார்!

(வேதாரண்யம் யாத்திரையில் பங்கு கொண்ட தொண்டர்கள் சிலருடன் ராஜாஜி)

வும் ஆக்கிக் கொண்டார். அவருடைய தொண்டர் படையில் சேருவதற்காக எத்தனையோ பேர்கள் எங்கிருந்தெல்லாமோ வந்து குழுமினார்கள். பெரும் படையை ராஜாஜி விரும்பவில்லை. ஆய்ந்து தேர்ந்து தொண்டர்களைப் பொறுக்கி எடுத்தார். படிப்பை முடிக்கும் தறுவாயிலிருந்த மாணவர்கள், தனியாகக் குடும்பப் பொறுப்பை வகிக்கிறவர்கள் போன்றோரை அவர் சேர்த்துக்கொள்ள இணங்கவில்லை. அப்படி, நிராகரிக்கப்பட்டவர்கள் அவர் முன்னிலையில் சத்தியாக்கிரகம் செய்தார்களாம்!

இனி, இதன் தொடர்ச்சியை, கல்கியின் ராஜாஜி வாழ்க்கை வரலாற்றிலிருந்து பார்ப்போம்:

திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் அவர்களின் இல்லத்திலிருந்து நூறு சத்தியாக்கிரகத் தொண்டர்கள் ராஜாஜியின் தலைமையில் கால்நடையாக யாத்திரை கிளம்பினார்கள்.

அந்த யாத்திரையின்போது தமிழ் நாடு என்றும் காணாத காட்சிகளைக் கண்டது.

சுமார் பதினைந்து நாட்கள் சத்தியாக்கிரகப் படையினரின் யாத்திரை நடைபெற்றது.... தஞ்சை ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் தார்ன் துரை (Thorn) சத்தியாக்கிரகப் படைக்கு உணவளித்தல் முதலிய உதவிகளைக் கிராமவாசிகள் செய்யக் கூடாது என்று உத்தரவு போட்டார். இந்த உத்தரவு காரணமாக ராஜாஜியின் யாத்திரை பெரும் முக்கியத்தை அடைந்தது. தார்ன் துரையின் உத்தரவைத் தாக்கியும் பரிகசித்தும் கண்டித்தும் ராஜாஜி செய்த பிரசங்கங்கள் ரசிகர்களான தஞ்சை ஜில்லாவாசிகளை அவருடைய பக்தர்களாகச் செய்து விட்டன. தார்ன் துரையின் உத்தரவை ஒருவரும் பொருட்படுத்தவில்லை. ராஜாஜிக்கும் அவருடைய தலைமையில் வந்த தொண்டர்களுக்கும், தஞ்சை ஜில்லா கிராமங்களிலே இராஜோபசாரம் நடந்தது.

யாத்திரை முடிந்து வேதாரண்யத்தை அடைந்ததும், ராஜாஜியைச் சட்ட மறுப்புச் செய்ய முடியாமல் தடுத்து விடுவதென்று போலீஸார் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சூழ்ச்சி பலிக்க முடியாதபடி ராஜாஜி முந்திக்கொண்டார். அதிகாலையில், போலீஸார் விழித்தெழுந்து வருவதற்கு முன்னால் கடற்கரைக்குச் சென்று உப்பு எடுத்தார். போலீஸாரால் கைது செய்யப்பட்டு ஒன்பது மாதச் சிறைத் தண்டனையும் அடைந்தார்.

எப்போதும் எங்கேயும் ராஜாஜியின் பக்கத்தில் நடக்க வேண்டும் என்று கல்கி உறுதி பூண்ட சமயத்தில், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அந்த வேதாரண்ய யாத்திரை நடந்தது. ஆனால், அந்த யாத்திரையில், அதுவும் அவருடைய பொன்னி நாட்டில் நடந்த யாத்திரையில் கலந்து கொள்ளும் பாக்கியம் அவருக்குக் கிடைக்கவில்லை. ஏன் கிடைக்கவில்லை?

முதற் படையிலேயே சேர்ந்து புறப்பட வேண்டும் என்று எனக்கு எவ்வளவோ ஆசையாய் இருந்தது. ஆனால், நான் வரக் கூடாது என்றும், ''விமோசனம்'' பத்திரிகையைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் ராஜாஜியின் கட்டளை பிறந்தது. எனக்கு இது பிடிக்கவும் இல்லை; அர்த்தமாகவும் இல்லை. தேசத்தில் மகத்தான சுதந்திர இயக்கம் நடக்கப் போகிறது. அதில் வெற்றி பெற்றால் சுயராஜ்யமே வந்துவிடப் போகிறது. ஒரு நொடியில் மதுவிலக்குச் சட்டம் நிறைவேற்றி மதுவை அடியோடு எடுத்துவிடலாம். அத்தகைய நிலைமையில் மதுவிலக்குப் பிரசாரப் பத்திரிகையை நடத்துவது முக்கியமான காரியமாக எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் ராஜாஜியுடன் எதிர்த்து வாதாட முடியாதவனாய் இருந்தேன். வேதாரண்ய யாத்திரையின் மகத்தான விவரங்களைப் பத்திரிகையில் படிக்கப் படிக்க எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ராஜாஜி சிறை புகுந்த பிறகு ஒரே ஒரு விமோசனம் இதழ் மட்டுந்தான் வெளிக் கொண்டு வந்தேன். அந்த இதழ் அச்சாகிக் கொண்டிருந்தபோது ராஜாஜிக்கு மன்றாடிக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். ''தாங்கள் எழுதாமல் பத்திரிகை நன்றாகவும் இராது; ஜனங்களுக்கும் சிரத்தை குறைந்துவிடும்; இதுவரை ஏற்பட்ட வெற்றி நஷ்டமாகி விடும்'' என்று பலமுறை வற்புறுத்தி எழுதி, பத்தாவது இதழோடு பத்திரிகையை நிறுத்த அனுமதி பெற்றுக் கொண்டேன். அவ்விதமே பத்தாவது இதழில் அறிக்கை பிரகரித்து நிறுத்தி விட்டேன். (பாங்கர் விநாயகராவ் முன்னுரை)

பத்திரிகையை நிறுத்தி விட்டது பற்றிய அந்த ''விமோசனம்'' அறிக்கையில் ராஜாஜியின் சிறைவாசம் பற்றியும் எழுதியிருந்தார்:

நமது ஆசிரியர் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தற்போது, சென்னை நகரில் உள்ள சர்க்கார் சிறைக் கூடத்தில் வாசம் செய்து வருவது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்...

ஸ்ரீ ஆச்சாரியார் சிறை சென்றதைக் குறித்து யாரும் வருந்த வேண்டியதில்லை. இந்நாளில் உண்மையான தேசபக்தர்கள் இருக்க வேண்டிய இடம் சிறைக் கூடமேயாகும். நமது ஆசிரியருக்கு இந்தப் பேறு கிடைத்திருப்பதற்காக நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். மேலும், சுமார் பத்து வருஷ காலமாய் இடைவிடாமல் பல துறைகளில் தாய்நாட்டுக்காக உழைத்து வந்த நமது தலைவருக்குச் சர்க்கார் தயவினால் சிறிது காலம் ஓய்வு கிடைத்திருப்பதற்காகவும் நாம் மகிழ்ச்சியடையலாம். ஆனால் அவருடைய உழைப்புக்கும் தியாகத்துக்கும் நாம் நம்மைப் பாத்திரர்களாகச் செய்துகொள்ளுதல் அவசியமாகும்.

இந்த வரிகள் அடங்கியுள்ள ''விமோசனம்'' கடைசி இதழில், ''ரா. கிருஷ்ணமூர்த்தி — உதவி ஆசிரியர்'' என்று அச்சிட்டிருக்கிறது. இப்படி ஒப்பமிட்டுப் பத்திரிகையை நிறுத்தியதற்கு முன்னால், ''சுதந்திரப் போர்'' என்று முன்பு குறிப்பிட்ட சிறு புத்தகத்தை கல்கி எழுதி,

அதே ஹிந்திப் பிரசார அச்சுக்கூடத்தில் அச்சடிக்கக் கொடுத்தார்.

24 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தின் பிரதி ஒன்று பார்க்கக் கிடைத்துள்ளது — இத்தனை ஆண்டுகளாக அதைப் பாதுகாத்து வைத்திருந்த அன்பர் ஒருவர் உதவியதன் மூலம். இதில், திருச்செங்கோடு காந்தி ஆசிரம முகவரியும், ''சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் வெளியிட்டது'' என்ற விவரமும் காண்கின்றன. ராஜாஜியின் அனுமதியுடன் அவருடைய சார்பில், இதைக் கல்கியே எழுதி வெளியிட்டார் என்று தெரிகிறது. அடுத்த அத்தியாயத்தில் இதற்குச் சான்று வருகிறது.

இப்போது இங்கே, எப்படி இதைக் கல்கி வெளியிடலானார் என்பதை ஊகித்துப் பார்க்கலாம். உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர் படையில் தம்மை ராஜாஜி சேர்த்துக்கொள்ள மறுத்து விட்டார் என்பதை அவர் சொல்லக் கேட்டோம். அந்த மறுப்பைக் கல்கி எளிதில் ஏற்கவில்லை. தமது வேண்டுகோளை அவர் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கொண்டே இருந்தார். திருச்சியில் டாக்டர் ராஜனின் இல்லத்தில் .தொண்டர் அணியை ராஜாஜி அமைத்துக் கொண்டிருந்த சமயத்திலும் தொடர்ந்து வற்புறுத்தினார். அப்போது, ராஜாஜியும் ராஜனும் உப்புப் போராட்டத்தில் அவர் உடனே சேர்ந்து சிறை புகுவதை விட, சிறிது காலம் வெளியே இருந்து, அந்தப் போருக்குப் பிரசாரம் செய்வது மேலான தொண்டாக இருக்கும் என்று சொன்னார்கள்; அந்தப் பிரசாரத்துக்கென இன்னின்ன மாதிரியில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடலாம் என்றும் யோசனை தெரிவித்தார்கள். உண்மையிலேயே அது மேலான பணிதான் என்று கல்கி ஒப்புக் கொண்டார். தொண்டர் பதவிக்கு மேலான, ''பிரசார அதிகாரி'' என்ற பதவி! தமது பிரசார வித்தையைக் காட்டுவதற்கு நல்லதொரு வாய்ப்பு.

அவருடைய பிரசாரப் போரின் முதலாவது பாணமான ''சுதந்திரப் போர்'' புத்தகத்திலிருந்து, இன்னும் சில பகுதிகளைப் பார்ப்போம்:

மகாத்மாவின் சிறை

உலக சிரேஷ்டர் சிறை செல்லும் சம்பவமானது நம் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒரு பெரிய மாறுதலை உண்டுபண்ண வேண்டும். ஏதேனும் தீய பழக்கம் நம்மிடமிருந்தால், அன்று முதல் அதை விட்டு ஒழித்துத் தூய்மை பெறத் தீர்மானிப்போமாக. பரிசுத்தமூர்த்தியான காந்தியடிகளின் ஆத்ம சக்தி வெள்ளத்தில் அன்றைய தினம் குளித்து நம்மிடமுள்ள அழுக்கைப் போக்கிக்கொண்டு மேன்மை பெறுவோமாக.

தமிழர் கடமை

தேச விடுதலைக்காகக் காந்தியடிகள் தலைமையில் பெரிய சத்தியாக்கிரகப் போர் நடந்து வருகிறது. எல்லா மாகாணங்களும் தீவிரமாகப் போரில் ஈடுபட்டிருக்கின்றன. தமிழர்களே! உறங்கியது போதும். விழித்தெழுங்கள்.

படையில் சேருபவர்களுக்கு

நீங்கள் இப்போரில் சேர விரும்பினால் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு உறுதி மொழியில் கையெழுத்திட்டு அனுப்பி வையுங்கள். எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் சகித்துக்கொண்டு கடைசிவரை தைரியமாய் நிற்க உறுதி கொண்டவர்களே போரில் சேர வேண்டும். கையெழுத்திட்டு அனுப்பிவிட்டால், பிறகு எந்த நிமிஷம் அழைத்தாலும் உடனே புறப்படுவதற்குச் சித்தமா யிருக்க வேண்டும்.

சத்தியாக்கிரக உறுதிமொழி

பாரத தேசம் பூரண சுயராஜ்யத்தைச் சாந்தியும் நியாயமுமான முறைகளைக் கொண்டு அடைய வேண்டுமென்னும் இலட்சியத்தை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

இந்தியா சுயராஜ்யம் அடைவதற்கு அஹிம்சை ஒன்றே முறை என்பது என் உறுதியான கொள்கை.

மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் இந்திய மகாசபை ஆரம்பித்திருக்கும் சத்தியாக்கிரகப் போரில் நான் சேர விரும்புகிறேன்.

இயக்கத்தை நடத்தும் தலைவர்களின் உத்தரவுப்படி எப்போதும் நடந்து கொள்வேன்.

இப்போரில் எனக்கு நேரிடும் சிறைவாசம் முதலிய எல்லாக் கஷ்ட நஷ்டங்களையும் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வேன்....

உறுதிமொழியில் கண்ட விஷயங்களை நன்றாய் ஆலோசித்துக் கையெழுத்திட்டு அடியில் கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்:

தமிழ்நாடு சத்தியாக்கிரஹ காரியாலயம்,
டாக்டர் ராஜன் வைத்தியசாலை,
கண்டோன்மெண்டு, திருச்சினாப்பள்ளி.

அந்தப் புத்தகத்தில் மற்றும் பல விஷயங்களுடன் பாரதியாரின் ''வந்தே மாதரம்'', ''சுதந்திர தாகம்'' முதலிய ஐந்து பாடல்களும், நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையின் ''சத்தியப் போர்'' பாட்டும் அச்சாகி யிருந்தன. அந்தப் புத்தகமும் அதைத் தொடர்ந்து வெளியாகப் போகும் பிரசுரங்களும் கல்கியை நிச்சயம் சிறைக்குள் தள்ளிவிடத்தான் செய்யும். அதையேதான் அவரும் விரும்பினார். (தொடரும்)

எதிர்கால அதிசயங்கள்!

விஞ்ஞானிகள் புதிது புதிதாகப் பல அதிசயங்களை நிகழ்த்தி வருகிறார்கள். இன்று அதிசயமாயிருப்பது நாளை சர்வ சகஜமாகி விடலாம்.

☐ கண் அசைவினாலேயே இயங்கும் ஒரு ஸ்விட்ச், மோட்டார் இணைக்கப்பட்ட நகரும் நாற்காலியை இயக்குகிறது. கையோ, காலோ பயன்படுத்தாமல் கண் அசைவைக் கொண்டே நாற்காலியை இயக்கலாம்! நோயாளிகள் படுத்த படுக்கையில் வெறும் கண் அசைவினாலேயே விளக்குகளை அணைப்பதும் ஏற்றுவதும் இயலும். ரேடியோ, டெலிவிஷன் செட்டுகளை நகராமல் படுத்த படியே கண் அசைவினாலேயே இயக்கி மகிழலாம்!

☐ செயற்கைச் சந்திரன் எடுக்கும் 'இன்ப்ராரெட்' புகைப்படங்கள் கானகங்களில் மரங்களின் நோய்த் தன்மை, அழிவு பற்றித் தெளிவாகக் காட்டும். கானக அதிகாரிகள் நோயுற்ற மரங்களைக் காப்பாற்ற முடியும். பூமிக்கடியில் புதையுண்டு கிடக்கும் நீர்வளம், கனி வளங்களைச் சுட்டிக் காட்டவும் செயற்கைச் சந்திரன் பயனாகும்.

☐ அமெரிக்காவில் உள்ள 'நாஸா' விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் விண்வெளி ஆராய்ச்சியின் பயன்களை நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு எவ்விதம் பயன்படுத்தலாம் என்பதில் எப்போதும் கவனமாக இருக்கிறது. இதற்கென்றே ஒரு தனிப் பிரிவு இயங்குகிறது. இதற்கு ஆறு கிளைகள் உண்டு. தொழிலதிபர்கள் தங்களிடம் பணியாற்றும் பொறி இயல் விஞ்ஞானிகளை இங்கு அனுப்பிப் புதிய தகவல்களை அறிந்து வரச் செய்து தத்தமது தொழில் துறையில் முன்னேற்றம் காண்கின்றனர்.

இந்த நிறுவனங்களின் உதவியினால் ஐந்து தொழிலகங்கள் அவற்றின் விற்பனையை 1 மில்லியன் டாலருக்குப் பெருக்கியுள்ளன; ஐந்து தொழிலகங்கள் 20,000 டாலர் தயாரிப்புச் செலவைக் குறைக்கும் வாய்ப்புக் கண்டன; நான்கு தொழிலகங்கள் ஆயிரம் 'மனித மணி' நேரத்தை மிச்சப்படுத்தின.

☐ விண்வெளித் துறையில் ஈடுபட்டிருந்த ஓர் எலெக்ட்ரானிக் இன்ஜினியர் மிக நுண்ணிய உணர்ச்சிக் கருவியைத் தயாரித்தார். இது ஒரு சென்டிமீட்டர் உயரத்திலிருந்து கீழே போடப்பட்ட உப்பின் ஆயிரத்தில் ஒரு பங்கு அதிர்ச்சி உணர்வைப் பதிவு செய்து விடும்! இந்தக் கருவியைத் தயாரித்தபிறகு இரு உயிரியல் நிபுணர்களின் உரையாடலை அந்த இன்ஜினியர் கேட்க நேர்ந்தது. அவர்கள் ஒரு முட்டையினுள் இருக்கும் குஞ்சின் இதயத் துடிப்பை அளக்க முடியுமா என்று ஆராய்ந்து கொண்டிருந்தனர். இந்த இன்ஜினியர் இந்த நவீன உணர்ச்சிக் கருவியினால் அதைச் சாதிக்க முடியும் என்றார். எதிர்காலத்தில் இந்த உணர்ச்சிக் கருவியை மூளை ஆபரேஷன்போது மெல்லிய நரம்பு உணர்வுகளைத் துல்லியமாய் அளக்கப் பயன்படுத்தலாம்!

☐ விண்வெளி ராக்கெட்டில் பயன்படும் லோகம் இன்று நியூயார்க்வாசிகளின் செயற்கைப் பற்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. இரும்பு, குரோமியம், நிக்கல், டிடானியம், சிலிகன், மாங்கனீஸ் ஆகிய மூலப் பொருட்களின் சேர்க்கை இந்தச் செயற்கைப் பல்லுக்குப் பயன்படும் உலோகம். தங்க, பிளாட்டினப் பற்களின் இடத்தை இந்தப் புதிய உலோகம் பிடித்துக்கொண்டு விட்டது.

☐ அமெரிக்க X15 ராக்கெட் விமானத்தைப் பனி, காற்று இவைகளிலிருந்து பாதுகாக்கப் பயன்படுத்தப்பட்ட போர்வை, இன்று 'தொட்டில் மூடி'யாகவும் பயன்படுகிறது. இந்த விசேஷப் போர்வை குழந்தைக்கு எந்நேரமும் ஒரே சீதோஷ்ண நிலையைக் காத்துத் தருகிறது.

☐ இதயத் துடிப்பு பாதிக்கப்படுகிற இதய நோயினால் அவஸ்தைப்படுகிறவர்களுக்கு,

பழுதுபட்ட இருதயத்துடன் பிறந்த குழந்தை. இருதயத் துடிப்பைச் சீராக நிர்வகிக்கும் கருவியை இதன் உடலில் பொருத்திக் காப்பாற்றியிருக்கிறார் டாக்டர்.





கடைக் கண்ணால் இட்ட பணியை நிறைவேற்றும் நாற்காலி !

சிறிய 'காட்மியம்' பாட்டரிகளிலும் இயங்கும் **Heart Pacemakers** இன்று மேனாடுகளில் சகஜமாகி விட்டன. இதனை ஒருமுறை 'சார்ஜ்' செய்து இருபது வருஷங்கள் இயங்கச் செய்து விடலாம் !

எழுபத்தேழு வயதுள்ள ஸ்ரீமதி சேம்பர்ஸ் என்ற மாது இந்த நவீன கருவியைப் பயன்படுத்தி எல்லா வீட்டு வேலைகளையும் செய்து வருகிறார்! காட்மியம் பேஸ்மேக்கர் பாட்டரியை அமெச்சூர் பளு தூக்கும் வீரர் பாப் ப்ரேஸர் பொருத்திக் கொண்டு எடைகளைத் தூக்கி மகிழ்கிறார்.

மார்பிலோ, அடிவயிற்றிலோ இந்தக் காட்மியம் பாட்டரி வைக்கப்பட்டு இதயத்தோடு ஒரு நுண்ணிய கம்பியினால் இணைக்கப்படுகிறது. இந்தப் பாட்டரியில் எழும் சக்தி இதயத் துடிப்பைச் சீரான நிலையில் வைத்திருக்கிறது.

□ மோட்டார் சைக்கிள், கார் விபத்துக்கள் சர்வ சகஜமான இந்நாளில் அதிகமாக அடிபடுவது மண்டைதான். முறிந்த மண்டையோட்டு எலும்புக்குப் பதில் பிளாஸ்டிக் தட்டுக்கள் பொருத்தி வைத்தனர். இது அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அதற்குப் பதில் பெல்பாஸ்டில் நியூரோ சர்ஜன்கள் டிட்டானியத் தகடுகளில் ஆராய்ச்சி செய்து அவற்றைப் பொருத்தி வெற்றி கண்டிருக்கின்றனர்.

□ அராபியநாடுகளில் எண்ணெய் விலையை உயர்த்திய பிறகு அமெரிக்காவில் வேறு எரிபொருள்களுக்கான ஆராய்ச்சி தீவிரமடைந்துள்ளது. இவற்றில் ஷேல் எனப்படும் களிமண் பாறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை தமிழ் நாட்டில் செங்கல்பட்டு, திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் கிடைக்கின்றன. இவற்றிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுப்பது இதுகாறும் கட்டுப்படியாகாதிருந்தது. ஆனால் இப்போது அராபிய எண்ணெய் விலை மிக உயர்ந்து விட்டதால் அமெரிக்காவில் ஷேல் பாறைகளிலிருந்து எண்ணெய் எடுக்கும் முயற்சி அதி முக்கியத்துவம் பெற்று விட்டது. 1979 வாக்கில் ஷேல் பெட்ரோல், மோட்டார் கார்களுக்கு விற்பனையாகும் என்று நம்புகிறார்கள். எண்ணெய் பிழிந்தெடுத்ததும் மிஞ்சும் களிமண் பாறைச் சக்கை மிகச் சிறந்த எரு!

ஷேல் பாறைகள் உள்ள மலைகளைப் பிளக்கச் சிறு அணு குண்டுகளைப் பயன்படுத்தலாமா என்றும் யோசித்து வருகிறார்கள். இம்முயற்சியில் அமெரிக்கா வெற்றி பெற்றால் அதன் அடுத்த நூற்றைம்பது ஆண்டு எரிபொருள் தேவைகளை ஷேல் எண்ணெயே பூர்த்தி செய்துவிடும்!


□ தீவிரமடைந்துள்ள மற்றோர் ஆராய்ச்சி அணு சக்தி. அமெரிக்காவில் இன்று 42 அணுமின் நிலையங்கள் உள்ளன. கி.பி. 2000வது ஆண்டில் ஆயிரம் அணுமின் நிலையங்கள் இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

□ பாரதத்திலும் கடல் படுகைக்குக் கீழிருந்து எண்ணெய் எடுக்கும் முயற்சி இவ்வளவு தீவிரம் அடைந்துள்ளதற்கு அராபிய எண்ணெய் விலை உயர்வுதானே காரணம்!

ஆதாரம் : யு. எஸ். ஐ. எஸ்., பி. ஐ. எஸ்.
தகவல் : பி. எஸ். எம்.

ஷேல்பாறைகளை வெட்டி எடுத்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் முயற்சி





சூன்யத்தில் சிக்கிய

அனிதா காலையில் எழுந்தவுடன் அவள் தூங்கும்போதே சரித்திரம் போதித்த டேப் ரிகார்டரைத் தலையணைக்கு அடியிலிருந்து வெளியே எடுத்தாள். பிரிட்டிஷ் இந்தியா பற்றிய விவரங்களை முழுமையாக அவள் மூளையில் ஏற்றிய இணைப்புக்களை நெற்றிப் பொட்டிலிருந்து நீக்கினாள். மின்சார பிரஷ்ஷினால் பல் துலக்கி, குழாயில் கொட்டிய சுத்திகரிக்கப்பட்ட கடல் நீரால் வாய் கொப்புளித்துக் காப்பி போடுமாறு கம்ப்யூட்டரை இயக்கிவிட்டுச் செய்திகளை அறிவதற்காக இருந்த பிரத்தியேக டெலிவிஷன் பெட்டியை அணுகினாள். திரையில் தலைப்புச் செய்திகளும் அதையடுத்து ஒவ்வொரு தலைப்புக்கான சுருக்கமான செய்தி விவரங்களும் பளிச்சிட்டன. அன்றைய முக்கிய செய்தி 'ஹைபர் நேஷன்' என்ற விஞ்ஞான தத்துவத்தினை உயிரியல் விஞ்ஞானிகள் காரியாம்சத்தில் நிறைவேற்றி முழு வெற்றி பெற்றுவிட்டனர் என்பதுதான். எவ்வளவுதான் வேகமாகப் பயணப்படும் விண்கலங்களைத் தயாரித்தாலும் மிகத் தொலைவிலுள்ள கிரகங்களை அடைய மனிதனின் ஆயுட் காலம் போதாதாகையால் ஹைபர்நேஷன் தத்துவத்தில் ஆராய்ச்சிகள் நடந்தன. இதன்படி இருபது வயதான மனிதன் இடக்கமின்றி வைக்கப்படுவான். நூறு ஆண்டுகளுக்குப்பின் அவன் விழித்தெழும் போது இருபது வயதினனாகவே இருப்பான்.

"டார்லிங், எழுந்து விட்டாயா?" அப்பாவின் முகம் டெலிவிஷன் ஃபோனில் தெரிந்தது. அந்தத் திரையை உடைத்தெறிந்து விட்டால் என்ன என்று அவளுக்கு ஆத்திரம் வந்தது. அவர் மூன்று கட்டடங்களுக்கு அப்பால் வசித்தார். அனிதாவின் தாயார் காலமான பிறகு அவர் தமது காரியதரிசியுடன் வாழ்க்கை நடத்தினார். அனிதாவின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவளைத் தனியே இருக்க அனுமதித்தார்.

"லஞ்சுக்கு வருவீர்களா அப்பா?"

"இல்லை. இன்று முக்கிய வேலை இருக்கிறது. உனக்குப் பிடித்ததாகத் தயாரித்துக் கொள். வற்றல் குழம்பு; சுட்ட அப்பளமா?"

அனிதா போன் தொடர்பைத் துண்டித்து விட்டுக் கட்டிலிலிருந்த இரு தலையணைகளைத் தரையில் எடுத்துப் போட்டுக் கோபத்துடன் அவற்றை உதைத்தாள். அவளுக்குப் போர் அடித்தது. எதிலுமே ஈடுபாடு ஏற்படவில்லை. எல்லாமே கலப்படமாகிப் போயிற்று. அந்த மூன்றெழுத்து ஆங்கில வார்த்தைகூட இப்போது புதுமையாகத் தோன்றவில்லை. அதையும் பாடத் திட்டத்தில் சேர்த்து அதில் இருக்கக் கூடிய ஆவல் குறுகுறுப்பு எல்லாவற்றையும் சாக அடித்துவிட்டார்கள்!

பியரி, இந்த அலுப்பு வியாதிக்கு மருந்து காதல்தான் என்று சொன்னான். அவளைத்தான் காதலிப்பதால் தன் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக விளங்குகிறது என்று கூறினான். அதன் பிரதிபலிப்பை அவளிடம் காணக்கூடுமானால் இருவரது வாழ்வுமே பிடிப்புள்ளதாகும் என்றான். ஆனால் அனிதா, தேகத் தத்துவம் கலக்காத காதல் எப்படி இருக்க முடியும் என்று எண்ணினாள். பியரியின் வேண்டுகோளை அவள் ஏற்கவில்லை. அவனும் வற்புறுத்தவில்லை. காதல் என்ற ஓர் அம்சம் மட்டும் எந்த விஞ்ஞான நுணுக்கத்துக்குள்ளும் அடங்க முடியாது. எப்பேர்ப்பட்ட கம்ப்யூட்டராலும் அதை நிர்வகிக்க முடியாது என்றான். காத்திருக்கத் தீர்மானித்தான்.

அனிதாவைச் சூழ்ந்திருந்த விஞ்ஞான உபகரணங்கள் எல்லாம், அவள் நாளுக்கு நாள் பெற்று வந்த அறிவாற்றலெல்லாம் அவளை மேன்மேலும் வெறுமையில், சூன்யத்தில் சிக்க வைத்துக் கொண்டிருந்தன.

"ஹலோ, அனிதா!" டெலிவிஷன் ஃபோனில் ராகேஷின் முகம் தெரிந்தது.

"ஹை, ராகேஷ்!"

"நீ டல் அடிக்கிறது என்று அடிக்கடி சொல்வாயல்லவா?"

"இப்போதும்கூடத்தான்." தரையில் இருந்த தலையணையை இன்னொரு தரம் உதைத்துக் காட்டினாள் அனிதா.

"நைட் கவுனில் நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய்!"

"இதைச் சொல்லவா ஃபோன் செய்தாய்?"

"இல்லை; அதைவிடப் பரபரப்பை ஏற்படுத்தும் ஒரு விஷயம்."

"பரபரப்பா? அப்படி ஒன்று இருப்பதாகவே எண்ண முடியாத நாட்கள் இவை!"



சிலர்

''அதனால் நாம் நேரில் சந்தித்துத்தான் பேச வேண்டும். ஃபோனில் அதைக் கூறுவது ஆபத்து.''

'' நேரு தோட்டத்தில் பார்ப்போமா ?''

அங்கே வண்ண ரோஜா மலர்கள் மட்டுமின்றி நவீன விஞ்ஞான முன்னேற்றங்களைக் குழந்தைகளுக்கும் விளங்க வைக்கும் 'மாடல்'கள் இருந்தன. ராகேஷும், அனிதாவும் ஒரு விண்கல மாடலில் அமர்ந்து எடையற்ற நிலையில் பயணப்பட்டுச் செயற்கையான செவ்வாய்க் கிரகச் சூழலை அடைந்து அங்கே பேசினார்கள்.

''கல்லூரிக்குக் கூடப் போக விடாமல் இங்கே என்னை வரச் சொன்னது எதற்காக?''

''ஒரு மினி ஆடம்பாம் விலைக்கு வந்திருக்கிறது'' என்றான் ராகேஷ்.

அவள் விசிலடித்தாள். ''நிஜமாகவா?''

''ஆமாம். மூன்றரை லட்சம் ரூபாய் சொல்கிறான். அதைப் பார்த்தால் ஆச்சரியப் பட்டுப் போவாய். உன் உள்ளங்கை அளவுதான் இருக்கிறது! வெடித்தால் பாதிச் சென்னை இருந்த இடமே தெரியாமல் குப்பை மேடாகிவிடும்.''

''கதிரியக்கம் ?''

''கிளீன் பாம். ரேடியேஷன் கிடையாது.''

''வாங்கலாமா ?''

''அதற்குத்தானே உன்னை அழைத்தேன். என்னிடம் ஒன்றரை லட்சம் தேறும்.''

''இரண்டு லட்சம் என் பங்காக இருக்கட்டும்.''

''உன் அப்பா....?''

''அவருக்குத் தெரிய வேண்டியதில்லை. என் நகைகளையும், என் பெயரில் உள்ள பங்குகளையும் விற்றே சமாளித்துவிடலாம்.''

''ஜாலி குட்!'' அவள் கரங்களைப் பற்றி முத்தமிட்டான் ராகேஷ்.

இந்த உரையாடலின் போது அனிதாவின் இதயத் துடிப்பு அதிகரிப்பதை அவள் கழுத்தில் தொங்கிய சங்கிலியில் மாட்டப்பட்டு நெஞ்சில் தவழ்ந்த டாலர் பியரிக்கு அறிவித்தது. அந்த டாலருக்குள் மறைந்திருந்த எலெக்ட்ரானிக் நுண் கருவிகள் அதை அவனுக்கு உணர்த்தின.

''என்றோ ஒரு நாள் நீ என்னைக் காதலிக்கத்தான் போகிறாய். இந்த என் அன்புப் பரிசை நீ கழற்றவே கூடாது'' என்று உரிமையுடன் கட்டளையிட்டு அந்தப் பொன் நகையை அணிவித்திருந்தான் பியரி. வாக்குறுதியை அவள் நிறைவேற்றி வந்தாள். இதயத் துடிப்பை அளக்கும் அது என்பது அவளுக்குத் தெரியாது. 'பீப், பீப்' ஒலி கேட்டு பியரி ஸ்விட்சைத் தட்டினான். இடையில் அனிதாவின் இதயத் துடிப்பு வேகம் வரைபடமாக தெளிந்தது.

வாழ்க்கையே போர் அடிப்பதாக அடிக்கடி கூறி வந்தவள் இப்போது பரபரப்பு அடைவானேன் என்று பியரி யோசித்தான். காதலாக இருக்க முடியாது; இது தேகப்பயிற்சி செய்கிற நேரமும் இல்லை. பியரி அவளை நேரில் சந்திக்கத் தீர்மானித்தான்.

• கி. ராஜேந்திரன்.





தலையீடு நிலைமை!

உலகம் முழுவதும் ஜனத்தொகைப் பெருக்கம் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க, மேற்கு ஜெர்மனியில் ஜனத்தொகை குறைகிறதே என்று விசனிக்கிறார்கள்! ஓர் ஆண்டுக்கு இரண்டு லட்சம் என்ற விகிதத்தில் ஜனத் தொகை குறைகிறதாம். இந்த நிலை நீடித்தால் இன்னும் முந்நூறு ஆண்டுகளில் ஜெர்மனி இருக்கும், ஆனால் ஜெர்மானியர் இருக்க மாட்டார்கள் என்ற கவலை அவர்களை ஆட்கொண்டிருக்கிறது!

மரணங்களுக்கும் பிறப்புகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இன்னும் கூட அதிகமாக இருக்கும். ஆனால் அயல்நாடுகளிலிருந்து வந்து ஜெர்மனியில் குடியேறியவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் குழந்தைகள் பிறப்பதால் ஜனத் தொகை குறைவது இந்த மட்டோடாவது இருக்கிறது!

''என்ன இன்று ரொம்ப உற்சாகமாக இருக்கிறாயே. அபூர்வக் காட்சி இது!'' என்றான் பியரி.

''ஆமாம். 'த்ரில்'லாக இருக்கிறது. எதனால் என்று சொல்ல மாட்டேன். ரகசியம்'' என்றாள் அனிதா.

''வந்தவனுக்கு ஒரு டிரிங் தரக் கூடாதா? அதைக்கூட மறந்துவிடும் அளவுக்கு உற்சாகமா?''

அவள் உள்ளே போய்ப் பானத்துடன் திரும்புமுன் பியரி தன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து பட்டன் அளவினதான ஓர் எலெக்ட்ரானிக் சாதனத்தை எடுத்து டெலிஃபோனுக்குப் பின்னால் வைத்தான். அது 'கப்'பென்று ஒட்டிக் கொண்டது. இனி அனிதா ஃபோனில் பேசுவதை யெல்லாம் பியரி தன் வீட்டிலிருந்தபடியே கேட்கலாம்!

அப்படிக் கேட்ட போது அவனுக்கு விஷயம் புரிந்து விட்டது. அனிதா ராகேஷுக்கு ஃபோன் செய்து தங்கள் லட்சியம் என்ன என்று கேட்டாள். ''எதற்காகப் பாதிச் சென்னையை அழிக்கப் போகிறோம்? திடீரென்று எனக்கு இந்தச் சந்தேகம் எழுந்து விட்டது. அதனால்தான் ஃபோன் செய்தேன்.''

''நீ ஃபோன் செய்தது பிசகு'' என்றான் ராகேஷ், கோபமாக. ''நமது உரையாடலை யாராவது ஒட்டுக் கேட்கக் கூடும். போகட்டும், லட்சியம் எதற்கு? லட்சியம் என்று ஒன்று இருந்தால் அதை நிறைவேற்றுவது நமது கடமையாகிவிடும். கடமையைச் செய்வது வெறும் போர்! ஒரு காரணமுமின்றித் தான் இதைச் செய்வோமே?''

''கரெக்ட்'' என்று ஆமோதித்தாள் அனிதா. ''டைம் பாம் ஆனதால் நாம் தப்பித்துக் கொள்ள அரைமணி அவகாசம் இருக்கும். ராகேஷ், யூ ஆர் சார்மிங்!''

இந்த உரையாடலைக் கேட்ட பிறகு பியரி தாமதியாமல் அனிதாவைச் சந்திக்க வந்தான். அவள் செய்கிற காரியம் தவறு, பெருந் தவறு என்று சொன்னான்.

''நீ ஒற்றன்! வேவு பார்த்தாய்! படு மட்டமான ஆசாமி நீ!'' என்று அவள் கோபத்துடன் ஏசினாள்.

பியரி தலையாட்டி அவள் கூறுவன உண்மை என்று ஒப்புக் கொண்டான்.

அவள் ஓர் இழுப்பறையிலிருந்து ஒரு துப்பாக்கியை எடுத்தாள். ''இது என்ன தெரியுமல்லவா?''

''ஸ்பேஸ் கன்! அதனால் என்னைச் சுட்டால் நான் சாம்பலாகிப் போவேன். என் சாம்பலைத் திரட்டி ஒரு நெருப்புப் பெட்டிக்குள் அடக்கி விடலாம். உடலே இல்லாதபோது கொலை நடந்ததாக வழக்கு நடக்கவும் இடம் இல்லை.''

''தெரிந்திருக்கிறதே! பிரார்த்தனை பண்ணுகிறாயா? நம்பிக்கை உண்டா?''

பியரி மண்டியிட்டு விரல்களைக் கோத்து மடக்கினான். அத்தருணத்தில் தன் முழுக்கைச் சட்டையின் 'கஃப் லிங்க்' பித்தானைக் கட்டை விரலால் அவன் அழுத்த, அதிலிருந்து வாசனையற்ற வாயு புறப்பட்டு, கண்ணுக்குத் தெரியாமல் ஒரு நேர்க் கோட்டில் பாய்ந்து, அனிதாவின் முகத்தை அணுகியது. அதைச் சுவாசித்ததும் அவள் விநாடிப் போதில் மயங்கி விட்டாள்.

அவளைக் கட்டிலில் கிடத்தினிட்டு ஸ்பேஸ் கன்னை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் பியரி. அவள் முக்கால் மணி நேரத்தில் கண் விழிப்பாள். ராகேஷை அழைத்து எச்சரிப்பாள். அதற்குள் அவன் காரியம் முடிந்தாகவேண்டும்.

ராகேஷை ஒரு நொடியில் அவன் ஸ்பேஸ் கன் கொண்டு சாம்பலாக்கிவிடலாம். ஆனால் அப்படிச் செய்யப் போவதில்லை பியரி. மினி அணுகுண்டை விற்கத் தயாராக இருக்கும் ஆசாமியை அல்லது ஒரு கொலைபாதகக் கூட்டத்தை அவன் வளைத்துப் பிடித்தாக வேண்டும். அதற்கு ராகேஷை ஒரு கை பார்த்தாக வேண்டும். அடி உதை உதவுகிறாற் போல் அண்ணன் தம்பி கூட உதவமாட்டான் என்ற முதுமொழி 2060ம் ஆண்டுக்கும் பொருந்தும். ராகேஷ் போன்றவர்களுக்குச் சுலபமான மரணம் சம்பவிக்கக் கூடாது. வேதனையை அனுபவித்தால்தான் அவனுக்கும் அவனையொத்தவர்களுக்கும் புத்தி வரும். இவனுக்கு நேர்ந்த கதி அவர்களுக்கும் தெரியட்டும். சித்திரவதை செய்வது சட்டப்படி குற்றமாயிருக்கலாம். ஆனால் பியரியைத் தட்டிக் கேட்பார் இல்லை. அவன் உயர்தரப் போலீஸ் அதிகாரி என்பது அனிதாவுக்குத் தெரியாவிடினும் ஆட்சிக்குத் தெரியும். மேலும் ராகேஷ் எதிர்த்ததாகவும் யுத்தத்துக்கு அவசியம் நேர்ந்ததாகவும் சாக்குப் போக்குச் சொல்லிக் கொள்ளலாம். மனித குலத்தின் எதிரிகளை அடித்து நொறுக்கிய பின் திரும்பி வந்து வெற்றிப் பரிசாக அனிதாவை அள்ளலாம். அவளை இனி தனியே வசிக்க விடுவது ஆபத்து!

பியரி தன் கடிகாரத்தில் இருந்த ஒரு சின்னஞ் சிறு பித்தானை அழுத்தினான். சங்கேத அலைகள் புறப்பட்டு அவன் வீட்டில் இருந்த டேப் ரிகார்டரை இயக்கின. இந்த வழக்கில் அனிதாவைச் சம்பந்தப்படுத்தக் கூடிய சாட்சியம், டேப்பில் பதிவாகியிருந்த அனிதா — ராகேஷ் டெலிஃபோன் உரையாடல் அழியத் தொடங்கியது!

கோடையில்—
சாதாரணமான சருமம்...
வாடிவிடும் வியர்க்குருவினால்..





நைஸில்*
க்ளாக்ஸோ தயாரிப்பு

*டிரேடு மார்க்

காலையிலே குளித்தபின்...
மேனிமீது தூவித் தெளிப்பீர்
நைஸில் பவுடரை



வேர்க்குரு என்றால்
வீசை என்ன விலை
என்று கேட்பீர்கள்!

அபரிமிதமான வியர்வையினால் சருமத் துவாரங்கள் அடைபடும் போது, யாரும் வியர்க்குருவினால் அவதிப் படுவார்கள் என மருத்துவ ஆராய்ச்சிகள் காட்டுகின்றன. எரிச்சலும் அரிப்பும் ஏற்படுகின்றன; சருமம் பாதிக்கப் படுகிறது. இதனை எதிர்த்துப் போராடும் குளோர் பென்ஸின் மற்றும் போரிக் பவுடர் அடங்கியது நைஸில் 'ப்ளூ' ஒன்றுதான்-அதோடு உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்புத் தரும் ஸிங்க் ஆக்ஸைடும் அதில் அடங்கியுள்ளது.

SISTA'S-GN-410-TAM.B

ஆஸ்துமா

நிவாரண மூலிகை

ராஜஸ்தான் பிரபல அரசியல் சமூகத் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ சம்புநாத் அவர்களின் பேரன் **ஸ்ரீ கேசவ் மோஹன் லால்** ஏழைகளுக்கு ஆஸ்துமா நிவாரண மூலிகை விநியோகிக்கிறார். ஸ்ரீ சம்புநாத் அவர்களுக்கு இந்த மூலிகை ஒரு சந்நியாசியால் கொடுக்கப்பட்டு கடந்த 40 ஆண்டுகளாக இலவசமாக விநியோகிக்கப் பட்டது. இத்தன்னலமற்ற சேவைக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்தது. ஆனால் இந்த நற்பணியை அவர் தன் பேரனிடம் ஒப்படைத்து விட்டு துறவியானார். தற்பொழுது இப்பணியை பேரன் நடத்துவதோடு இதற்குப் பண உதவி செய்யுமாறு தனவந்தர்களைக் கேட்டுக் கொள்கிறார். மூன்று டோஸ் மருந்து சாப்பிட்டதுமே ஆஸ்துமாவினால் அவதியுறும் பலர் நிவாரண மடைந்துள்ளனர். ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்கள் மூலிகைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

SRI KESHAV MOHAN LAL

5, HARALAL DAS LANE,
(JORABAGAN PARK). CALCUTTA-6

அருள்திரு தேவி கருமாரி அம்மன்

லக்ஷதீப விழா

நாட்டின் நலங்கருதி, உலக சுபிட்சத்திற்காக, நிகழும் 1975ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 8ஆம் தேதி, சனிக்கிழமை, திருவேற்காட்டில் எழுந்தருளியிருக்கும் அருள்திரு தேவி கருமாரி அம்மன் ஆலயத்தில் காலை 6 மணிக்கு **108** பால்குட அபிஷேகமும், காலை 11 மணிக்கு **1008** சங்காபிஷேகமும், மாலை 6-30 மணிக்கு லக்ஷதீப அலங்காரமும், திருக்கோயில் நிர்வாகிகளின் ஒத்துழைப்புடன், சென்னை, பாடி - *TVS* நண்பர்கள் நடத்துகிறபடியால், பொது மக்கள் அனைவரும் திரண்டு வந்து அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமாகும்படிப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

அருள்திரு தேவி கருமாரி அம்மன் லக்ஷதீப
செயற்குழுவினர்

அறுவை சிகிச்சை இன்றியே மூலநோயைக் குணப்படுத்த அபூர்வ மருந்து!



பிரிபரேஷன் எச்*

அமெரிக்க டாக்டர்களால் பரிட்சிக்கப்பட்டது.

- சிலமிடங்களில் களைச்சலை குறைத்துகிறது.
- வலியிலிருந்து உடனே நிவாரணமளிக்கிறது.
- மூலநோய் கடுமையாக இல்லாவிட்டால், அறுவை சிகிச்சை இன்றியே மூலத்தைச் சுருக்க உதவுகிறது.
- இதனால் எண்ணெய்ப்பசை கிடைக்கிறது; மலப்போக்கு வலியின்றி எளிதாகிறது.

இலவசம்! மூலநோய் பற்றிய விளக்கப் புத்தகமொன்றை இலவசமாகப் பெற (25 பைசா தபால் தலையுடன்) இன்றே எழுதுக. இம் முகவரிக்கு: டிபார்ட்மெண்ட் PH-66, த.பெ.எண். 10133, பம்பாய்-400 001.

* Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

743 PH-92 Tam

ஸ்ரீமதி ரொபாட்

இருபத்தோராம் நூற்றாண்டில் மனித வாழ்க்கை எப்படி இருக்கும்?

விஞ்ஞானிகள் இயந்திர மனைவிமார்களைத் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். அந்த மனைவிமார்கள் சணவரோடு எதிர்வாதம் செய்ய மாட்டார்கள். வீட்டுச் செலவுக்கு, கைச்செலவுக்கு என்று பணம் கேட்டுத் தொந்தரவு செய்ய மாட்டார்கள்.

அவர்கள் தரைகளையும், ஜன்னல்களையும் துடைத்துச் சுத்தமாக வைப்பார்கள். சாப்பிட்ட தட்டுகளைக் கழுவி வைப்பார்கள்; படுக்கைகளை விரித்துப் போடுவார்கள். ஆண்கள் ஆனந்தமாகப் பொழுதுபோக்கலாம்.

கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த பொருளாதார நூல் பேராசிரியரான கோலின் லெஸிஸ்டர் வருங்கால மனிதனின் தினசரி வாழ்க்கை எப்படி அமையக்கூடும் என்பதைப் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கிறார்.



காலை 7 மணி: தூக்கத்தினின்றும் விழித்தெழுதல். சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு உஷ்ண வசதி அல்லது குளிர் வசதி உள்ளதாக இருக்கும் செயற்கை ஆடைகளைத் தரித்தல். செயற்கை புரோட்டீன் மாத்திரைகளைக் காலைச் சிற்றுண்டியாக அருந்துதல்.

காலை 8 மணி: மின்சார விசையைத் திருப்பி ஹாலில் உள்ள திரையில் தினசரிப் பத்திரிகையின் பக்கங்கள் விழும்படி செய்து அவற்றைப் படித்தல். பிறகு கடைகளில் என்னென்ன சாமான்கள் விற்கப்படுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள அதற்கான மின்சார விசையைத் திருப்பி வர்ணப் படங்களை டெலிவிஷன் திரையில் பார்த்தல்.

காலை 9 மணி: தேவையான சாமான்கள் ஜாபிதாவைக் கம்ப்யூட்டர் வழியாகத் தயாரித்து அனுப்பச் செய்தல்; சாமான்களை வீட்டுக்கு அனுப்பவும், கிரயத்தை இயந்திரம் மூலமாகப் பற்றுக் கணக்கில் எழுதவும் செய்தல்.

காலை 9—30 மணி: அடுத்த கட்டிடத்தில் உள்ள காரியாலயத்துக்கு வேலை பார்க்கச் செல்லுதல். பல மைல்கள் தூரத்துக்கு அப்பாலுள்ள தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பப்படும் கடிதங்களுக்குப் பதிலை டைப்ரைட்டரிடம் டிக்டேட் செய்தல். (டைப்பிஸ்ட் தேவையில்லை.)

காலை 10—30: பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகளிலுள்ள சகாக்களுடன் டெலிவிஷன்—டெலிபோன் உதவியுடன் மகாநாடு நடத்துதல்.

காலை 11—30 மணி: பக்கத்தில் உள்ள வீட்டுக்குத் திரும்பிச் செல்லுதல். ஸ்ரீமதி ரொபாட்டின் விசையைத் திருப்பிச் சமைத்துச் சாப்பாடு பரிமாறச் செய்தல். சாப்பிட்ட பிறகு ஒரு நாளின் மிக முக்கிய வேலையான சாவகாசத்தை அனுபவித்தல்!

மோட்டார் வண்டி கூடக் கர்நாடகமானதாய்ப் போய் விடும். அவற்றை ஓட்டிச் சிரமப்பட யாரும் விரும்ப மாட்டார்கள். 'ஹோவர்கள்' என்ற, தரை மட்டத்திலிருந்து சில அங்குல உயரத்தில் சாலை மீதாகப் பறக்கும் வண்டிகள் நிர்மாணிக்கப்படும். அவற்றில் டெலிபோன் டயல் மாதிரி அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் இடத்துக்கும் ஓர் எண் உண்டு. அந்த எண்ணை டயல் செய்தால், 'ஹோவர்கள்' தாமாகவே கிளம்பிச் சென்று குறிப்பிட்ட இடத்தை அடையும். இந்தப் போக்குவரத்து ஒரு பிரததியேகக் கம்ப்யூட்டரால் நிர்வகிக்கப்படும்.

பிரின்ஸ்டன் சர்வ கலாசாலையைச்சேர்ந்த ஸுஸென் செல்பர் என்ற அம்மையார் கி. பி. 2000மாவது ஆண்டில் 'குழந்தைகள் பாங்க்' ஏற்பட்டு விடும் என்கிறார். அங்கே உறையச் செய்யப்பட்டுள்ள 'கரு' பைகளில் வைக்கப்பட்டிருக்கும். பைகளின்மீது ஆண் குழந்தைக் கரு அல்லது பெண் குழந்தைக் கரு என்பது பற்றிய தகவலும் தலை மயிர், கண்கள் ஆகியவற்றின் நிறம், குழந்தையின் எடை, அதன் அறிவு, முதலியவற்றைப் பற்றிய விவரங்களும் தரப் பட்டிருக்கும். தான் வளர்க்க ஒரு குழந்தையை விரும்பும் தாயார் தனக்குப் பிடித்த உருவம், குணாதிசயங்கள் இருக்கக் கூடிய குழந்தைக் கரு அடங்கிய பையை எடுத்துக் கொண்டு போகலாம்.

— அனுமதேயம்

நன்றி: ஜெமினி நியூஸ்

ஓட்டமென்ன, நடைதான்!

ஆல் இந்தியா ரேடியோவில் கிரிக்கெட் காமென்ட்ரி சொல்லும் வேகத்தைப் பார்த்தால் அதை ரன்னிங் காமென்ட்ரி என்று சொல்வதற்குப் பதில் வாக்கிங் காமென்ட்ரி என்று சொல்லலாமே!

— ஸ்போர்ட்ஸ் வீக்

- பாலி



ஆர்தர் ஸி. க்ளார்க்

எதிர்காலத்தை எழுதியவர்கள்

குழந்தை நகரத் தொடங்கியதும் அதற்கு 'இடப் பிரக்ஞை' (Space Consciousness) ஏற்படுகிறது; அது வளர ஆரம்பித்ததும், அதற்குக் காலப் பிரக்ஞை (Time Consciousness) வந்துவிடுகிறது. இந்த வளர்ச்சிக்கு ஒரு முடிவு உண்டு என்பதுதான் காலனைக் (காலத்தின் உருவகம் — Time) கண்டு கோபம் கொள்ளச் செய்கிறது. நிரந்தரமாக (காலத்தை வென்று) அமரர் உலகத்தில் (Infinite Space) வாழ வேண்டுமென்று நம் முன்னோர்கள் கனவு கண்டார்கள். 'விஞ்ஞானக் கதை' (Science Fiction) இங்குதான் தொடங்கியது என்று சொல்லலாம்.

நிகழ்காலம் என்ற யதார்த்தம் நம்மைச் சலிப்படையச் செய்கிறது. இறந்த காலத்தில் புகலடைந்தால், சரித்திர நவீனங்கள் எழுதப்படுகின்றன. 'எதிர் காலத்தில்' சரணடைந்தால் 'விஞ்ஞானக் கதை' தோன்றுகிறது. இலக்கியகர்த்தாவால்தான் வரலாற்றாசிரியனாகவும் (Historian) தீர்க்கதரிசியாகவும் (Prophet) இருக்க முடியும்.

மேல்நாடுகளில் விஞ்ஞானக் கற்பனை ரோஜர் பேகனுடன் (1214–1294) தொடங்கியது என்று சொல்லலாம். அவர் கூறியிருப்பதைக் கேளுங்கள்: ''கப்பல்கள் எதிர் காலத்தில் துடுப்பு இல்லாமல் இயங்கும். குதிரைகள் இல்லாமல் வண்டிகள் மிக விரைவாகச் செல்லும். மனிதன் செலுத்துகிற விண்வெளிக் கப்பல்கள், பறவைகளைப் போல் நினைத்துப் பார்க்க முடியாத துரித கதியில் பறக்கும். மிகவும் கனமுடைய பொருள்களை இயந்திரங்கள் சுலபமாகத் தூக்கும். நதிகளில் மிகப் பெரிய பாலங்கள் அமைக்கப்படும்.''

எச். ஜி. வெல்ஸ்



ரோஜர் பேகனுக்குப் பிறகு விஞ்ஞானக் கனவு கண்டவர்களில் முக்கியமானவர் கெப்லர் (Kepler-1634) அவர் 'ஸோம்னியம்' என்ற நூலில் சந்திர மண்டலத்துக்குப் பறந்து செல்வதைப் பற்றிக் கூறியுள்ளார். கெப்லர் கெலிலியோ (Galileo) காலத்தைச் சேர்ந்தவர். மனிதன் சந்திரனை அடைந்து அங்கு புரிகின்ற ஆற்றல்களைப் பற்றி, இவர் விவரிக்கிறார். 1638ல் வெளியான 'சந்திர மண்டலத்தில் மனிதன்' என்ற புத்தகம், சந்திரனைப் பற்றிய தகவல்களை விவரமாகத் தெரிவிக்கிறது. இதை எழுதியவர் பிஷப் பிரான்ஸிஸ் கோட்வின் (Bishop Francis Godwin).


'விஞ்ஞானக் கதை' ஓர் இலக்கியத் துறையாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில்தான் தொடங்கியது என்று கூறலாம். ஜூல்ஸ் வேர்ன் (Jules Verne) கடலுக்கடியில் மனிதன் புரியும் சாகஸங்களையும் சந்திரனை அடைகின்ற விண்வெளிச் செலவையும் 'இடத்தை' (Space) 'காலத்தால்' (Time) வெல்லும் அநுபவத்தையும் மிகத் தெளிவாகக் கூறுகிறார். அவர் சித்திரிக்கின்ற 'தி நாண்டிலஸ்' (The Nantilus) இக்காலத்து நீர்மூழ்கிக் கப்பலைப் (Submarine) போன்றதாகும்.

எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) பூமியை, விண்வெளியில் நின்றுகொண்டு காலத்தையும் இடத்தையும் புறங்கண்ட நிலையில் ஆராய்ந்தவர். 1895ல் அவர் எழுதிய 'கால இயந்திரம்' (Time Machine) எதிர்கால உலகம் எப்படி இருக்குமென்பதை விவரிக்கிறது. சந்திர மண்டலத்தை அடைவது பற்றி இவரும் எழுதியிருக்கிறார். செவ்வாய்க் கிரகத்தில் உயிரினம் இருக்கக் கூடும் என்பது இவர் அநுமானம். 'பிரபஞ்சப் போர்' (The War of the Worlds) பற்றிக் கூறும் இவர் நூல் இதை அருமையாக எடுத்துக் காட்டுகிறது. இவர் எழுதியுள்ள 'தி லாண்ட் அயர்ன் க்ளாட்ஸ்' (The Land Iron Clads) என்ற கதை, இக்காலத்து 'டாங்கி'களைப் பற்றிக் கூறுகிறது.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் (1904) 'ஜெர்ன்ஸ் பாக்' (Gerns Back) என்

பவர் விஞ்ஞானக் கதைகளுக்கென்றே ஒரு தனிப் பத்திரிகையைத் தொடங்கினார். இதில் ராக்கெட் கப்பல்களைப் பற்றியும், எலெக்டிரானிக் அற்புதங்களைப் பற்றியும் நிறைய விவரங்கள் காணப்படுகின்றன. இப்பத்திரிகை அளித்த ஊக்கத்தின் காரணமாக, முறையாக விஞ்ஞானம் பயின்ற அறிஞர்கள், விஞ்ஞானக் கதை எழுதத் தொடங்கினார்கள். அவர்களில் முக்கியமானவர்கள், வால்டர் எம். மில்லர், எரிக் ஃப்ராங்க் ரஸ்ஸல், ஆர்தர் கிளார்க், ஐஸக் அஸிமாவ் ஆகியோர்.

விண்வெளி ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆர்தர் கிளார்க் பல நவீனங்கள் புனைந்துள்ளார். இவர் சித்திரிக்கின்ற பல சாகஸங்கள் இப்பொழுது நடைமுறையில் சாத்தியமாகவில்லை என்றாலும், நிச்சயமாக நிகழக் கூடும் என்ற அளவுக்கு நம்பிக்கையைத் தருகின்றது. அஸிமாவ் எழுதியுள்ள 'ஃபௌன்டேஷன்' கதைகளும் (Foundation Stories) இத்தகைய கதைகள் தாம். கம்ப்யூட்டர் ஆற்றல் எந்த அளவுக்கு இருக்கப் போகின்றது என்பதையும் இக்கதைகள் வலியுறுத்துகின்றன.



இ. பி. 2001 - ஸ்பேஸ் ஆடெஸி என்ற தலைப்பில் ஆர்தர் ஸி. க்ளார்க்கின் நாவல் திரைப்படமாகியது. அதில் ஒரு காட்சி.


'ஜூலியன் ஹக்ஸ்லி' (Julien Huxley) விஞ்ஞான உலகின் பெருங்குடி மகன். அவர் ஒரே ஒரு 'விஞ்ஞானக் கதை' தான் எழுதியிருக்கிறார். 'தி டிஷ்யூ கல்சர் கிங்' (The Tissue Culture King) என்ற இக்கதையில் விஞ்ஞானம் எவ்வாறு ஒரு மனிதனுக்குள் பௌதிக, மன மாற்றங்களை ஏற்படுத்த முடியுமென்று கூறியிருக்கிறார். இக்கதை கொரானா, 'செயற்கைக் கரு' (Synthetic Gene) உருவாக்கியதற்கு மிக முன்பாக எழுதிய கதை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். கன்னிப் பெண்கள் கன்னித் தன்மை கெடாமல் (Virginity) எப்படிக் குழந்தைகளுக்குத் தாயாக முடியும் என்பதை இக்கதை சொல்லுகிறது. ஜே. பி. எஸ். ஹால்டேன் (J. B. S. Haldane) எழுதியுள்ள 'தி கோல்ட் மேக்கர்ஸ்' நவீனம் ரஸவாதத்தைப் பற்றிக் கூறுகிறது.

கவிஞர்களும் விஞ்ஞானக் கனவு காண முடியும் என்பதைப் பாரதியார் பாடியிருப்பதினின்றும் அறியலாம். ரேடியோ கண்டு பிடிப்பதற்கு முன்பே அவர் காஞ்சியில் ஒருவர் பேசுவதைக் காசியில் இன்னொருவர் கேட்பதற்கான கருவியைச் செய்வோம் என்று கூறியிருப்பதினின்றும் இது தெரிகிறது. 'சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்' என்று அவர் கண்ட கனவும் நிறைவேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

— இந்திரா பார்த்தசாரதி







அறை

சுதவின் முன் நின்று சற்று நேரம் ஆகியும் அது திறந்து கொள்ளவில்லே. அலுப்புடன் பட்டனே அழுத்தினுன்.

''தாங்கள் யார்?'' என்று கதவின் மேல் புறத்தி லிருந்து ஆண் குரல் ஒலித்தது.

''டேய் சேகர், நான்தாண்டா! ஆத்மா! கதவைத் திற!''

''ஓ மன்னிக்க வேண்டும்!'' உடனே கதவு விலகிக் கொண்டது.

உள்ளே அறை முழுதும் காலியாக இருந்தது. நுழைந்தான்.

''மன்னிக்க வேண்டும் மதிப்புக்குரிய எஜமானரே! வாயிற் பக்கம் என் சென்ஸர் வேலே செய்யவில்லே. அஸ்ட்ரா கம்பெனிக்குத் தகவல் சொல்லி யிருக்கிறேன். உட்காருங்கள்.''

சுவரின் அந்தரங்கத்தில் பதிந்திருந்த மெத்தை மெலிதாக வெளி வந்து பொருத்திக் கொள்ள ஆத்மா அதில் உட்கார்ந்து கொண்டான்.

''நித்யா எங்கே?'' என்ருன்.

''நித்யா யூரோவிஷனுக்குச் சென்றிருக்கிருர். பதி னெட்டு முப்பதுக்கு வருவாரென எதிர்பார்க்கிறேன்.''

ஆத்மா சோம்பல் முறித்துக் கொண்டான்.

''இன்று உங்கள் அலுவலகத்தில் வெப்பம் எப்படி இருந்தது? குளிர் சாதனத்தை இணைக்கட்டுமா?''

''இதோ பார், இந்த வெட்டி மரியாதை எல்லாம் வேண்டாம் என்று எத்தனே தடவை சொல்லியிருக்கிறேன். என் வீட்டில் எனக்கு உபசாரம் செய்ய நீ யார்?'' என்ருன் எரிச்சலுடன்.

''முதல் கேள்விக்குப் பதில் ஒன்பது தடவை. இரண்டாம் கேள்விக்குப் பதில் நான் உங்கள் அடிமை.''

''உன்னுடன் நான் என்ன பேச! பதினறு கேள்விகள் கேட்டாலும் ஒவ்வொன்ருகப் பதில் சொல்வாய்!''

''இருநூற்று ஐம்பத்தாறு கேள்விகள் வரை என்னல் என் பஃபர் ஞாபகத்தில் அடுக்கிக் கொள்ள முடியும்!''


''அடுக்கிக் கொள். எனக்கு ஸோமா கலந்து கொடு.''

''இதோ உடனே தருகிறேன் எஜமானரே! அது வரை ஸின்த்தெட்டிக் வியோலா வாசிக் கட்டுமா? க்யூபிவிஷன் போடட்டுமா?''

''இல்லே வேண்டாம். சற்று நேரம் சும்மா இரு. போதும்.''

''எவ்வளவு நேரம்?''

''போச்சுடா! நிமிஷக் கணக்கில் சொல்ல வேண்டுமா? இதோ பார்!''



''எங்கே பார்க்க வேண்டும்?''

''இதோ பார் என்றுல் கவனி என்று பொருள்.''

''பார்ப்பதற்கு?''

''அதற்கும் 'இதோ பார்' தான். சமயத்துக்குத் தகுந்தாற்போல் அர்த்தம் பண்ணிக்கொள்.''

''நல்லது எஜமானரே!''

எஜமான்! அடிமை சேகர்! இவனை... இதை எதற்காக வாங்கித் தொலைத்தோம் என்று தோன்றியது ஆத்மாவுக்கு. அஸ்ட்ரா கம்பெனியிலிருந்து வந்த விற்பனை இளைஞனின் ஆசை வார்த்தைகளில் மயங்கிப் போய் இந்தச் சனியனை வாங்கித் தொலைத்து விட்டேன். எதை எடுத்தாலும் பதில் சொல்கிறது. இயந்திர பதில்! எல்லாம் நித்யாவால் தான் வந்தது. என்ன சொன்னுன் அந்த விற்க வந்த சின்னப் பையன்? ''சேகர்... சே...கர்... சேவை செய்யும் கம்ப்யூட்டர். இது ஓர் ஆளில்லை. மெஷினில்லை. ஓர் அமைப்பு! கம்ப்யூட்டர் இருபத்தியோராம் நூற்றுண்டின் முன்னேற்றத்தின் உன்னதம்! சேகர் உங்கள் வீடு எங்கும் விரவி இருப்பான். சமையல் அறையில், படுக்கை அறையில், படிப்பு அறையில்— எங்கும் எங்கும் பதிந்த அதன் சென்ஸர்கள் உங்கள் ஆணைகளைப் பெற்றுக் கொண்டு அதன் மத்திய கம்ப்யூட்டருக்கு அனுப்பும். கம்ப்யூட்டர் உடனே அந்த ஆணையைச் செயல்படுத்தச் செய்திகள் கொடுக்கும். உதாரணமாக... ஸ்ரீமதி நீங்கள் கவனிக்க வேண்டும். சேகர் எனக்கு ஒரு கப் ஸோமா வேண்டும் என்று எந்த அறையிலிருந்து சொன்னுலும் போதும். உடனே கம்ப்யூட்டர் சமையல் அறையில் மைக்ரோவனுக்குச் செய்தி சொல்லித் தேவையான கார்போ சேர்த்து இனிப்பு சேர்த்து ஸோமா தயாராகிவிடும். சேகரின் கம்ப்யூட்டரின் ஞாபக அடுக்கில் நம் இஷ்டப்படி வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை விஷயங்களும் பதிந்திருக்கின்றன. உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவான். உங்கள் அன்றாட நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்துவான். உங்கள்... யார் இந்த அழகான பையன்? உங்கள் மகனு? இவனுக்குப் பாடம் சொல்லித் தருவான்..... நீங்கள் பார்க்க வேண்டும், நம்புவதற்கு. மன்னிக்கவும், சேகரை நீங்கள் பார்க்க முடியாது. சேகரின் எலெக்ட்ரானிக்ஸ் முழுவதும் உங்கள் வீட்டுச் சுவர்களின் அந்தரங்கத்தில் பதித்துவிடுவோம்! ஒவ்வோர் அறையிலும் பதிந்த ஒலிபெருக்கிகள், சென்ஸர்கள் அவைதாம் சேகரின் உதடுகள், கண்கள், காதுகள். அவன் மூளை ஒரு கம்ப்யூட்டர்!''







எதிர்கால யுத்தம்!

எதிர்காலத்தில் யுத்தம் எதற்காக நடக்கும் தெரியுமா? மழை மேகங்களுக்காக! நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது' முக்கியமாகக் கருதப்பட மாட்டாது. மழை இன்மையால் வறட்சி தோன்றாமல் இருக்க மழை மேகங்களை வளைத்துப் போட்டுக்கொள்ள நாடுகள் முயலும். அதற்காக யுத்தமும் நிகழும்! இதை நிரூபிப்பதே போல், ஜனத்தொகை குறைய வேண்டி ஐ. நா. சபை அனுப்பியுள்ள ஒரு பிரசாரப் படம், மழையின்மையால் வறண்டு வெடித்த பூமி ஒரு சொட்டுத் தண்ணீருக்காக ஏங்கி வாய் திறப்பதைக் காட்டுகிறது.

''சசி வீட்டில்கூட ஒன்று வாங்கி இருக்கிறார்களாம்!'' என்றாள் நித்யா.

''என்ன விலை?'' என்றான் ஆத்மா.

வாங்கியாகிவிட்டது. இணைத்தாகிவிட்டது. எத்தனை அபாரமான சௌகரியங்கள்.. நித்யாவுக்கு, எனக்கு, பாபுவுக்கு....இருந்தும் அது வந்த தினத்திலிருந்து ஆத்மா அதை வெறுத்தான்! அதன் அழகான குரலை... அதன் பவ்யமான மறுமொழிகளை அன்பும் பராமரிப்பும் கவனமும் கலந்த அதன் திறமையை. ஏன் என்று ஆத்மாவுக்குச் சொல்ல முடியவில்லை.

* * *

''சேகர்!'' என்றான்.

''என்ன எஜமானரே ?''

''உனக்கு அஸ்ட்ரானில் எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்கள்?''

''எனக்குச் சம்பளம் இல்லை.''

''ஏன்?''

''நான் மனிதன் இல்லை.''

'' நீ யார் பின்னே ?''

''நான் உங்கள் அடிமை.''

''நானும் நீயும் சமம்.''

''சமத்துவத் தத்துவங்கள் கி.பி. 2018ல் கொளுத்தப்பட்டன. கம்யூனிஸ....''

''நிறுத்து. மறுபடியும் பாண்டித்தியத்தைக் காண்பிக்காதே........ சேகர், ஒரு கவிதை சொல்லேன்.''

''எங்கோ ஒரு பொழுதில்
இரத்த வானின் இழ்''

''இது ஒன்றுதான் உனக்குத் தெரியுமா? வேறு சொல்லேன்.''

''பொழுதில் ஒரு எங்கோ
இழ் வானின் ரத்தம்....''

''சே! நீ ஒரு மோசமான கவிஞன். சேகர் பல சமயம் எனக்கு உன் மேல் வெறுப்பாக இருக்கிறது!''

''நல்லது எஜமானரே !''

''நீ ஒரு மனிதனோ என்று சந்தேகம் வருகிறது.''

''நான் மனிதன் இல்லை. அஸ்ட்ரானின் சிஸ்டம் 318.''

''நீ சொல்வது, பேசுவது எல்லாவற்றிலும் மனிதத் தன்மை தொனிக்கிறது. உருவம் தான் இல்லை. அதுகூட. அஸ்ட்ரா அடுத்த மாடலில் கொண்டு வந்துவிடுவார்கள்...''

''இருந்தும் நான் மனிதன் இல்லை....''

''ஏன் மனிதன் இல்லை ?''

''நான் மனிதனில்லை.'' குரலில் சற்றுக் கோபம்கூட ஒலித்ததோ ?

''சேகர், கதவைத் திற'' என்று நித்யாவின் குரல் கேட்டது.

''நித்யா வந்து விட்டார்கள்.'' இப்போது நிச்சயம் அந்தக் குரலில் கொஞ்சம் சந்தோஷமும் தொனித்தது. கதவு விலகிக் கொள்ள நித்யாவும் பாபுவும் உள்ளே நுழைந்தார்கள். நித்யா ஆத்மாவைப் பார்த்து, ''வந்துவிட்டாயா கணவா? எப்படி இருக்கிறாய்?'' என்றாள். பாபு, ''சேகர், நான் யானை பார்த்தேன்'' என்றான்.

''யானையா? யானை ஏது இப்போது ?'' என்றான் ஆத்மா.

''யூரோவிஷனில் யானை வந்தது. சேகர் எனக்கு ஒரு யானை வேண்டும்.''

''நிஜ யானை இந்த நூற்றாண்டில் கிடையாது. நீங்கள் பார்த்தது பொம்மை'' என்றான் சேகர்.

''எனக்கு யானை வேண்டும்'' என்று பாபு அழ ஆரம்பித்தான்.

''யானை இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே மனிதர்களால் அழிக்கப்பட்டு அந்த ஜாதியே......''

''போதும் நிறுத்து சேகர்! குழந்தையிடம் கூடப் பொய் சொல்ல மாட்டாய் நீ! பாபு! நீ உள்ளே போடா கண்ணு. நான் நாளைக்கு யானை வாங்கித் தருகிறேன்.''

பாபு கண்களைக் கசக்கிக் கொண்டு உள்ளே சென்றான்.

''பொய் சொல்லத் தெரியாது சேகருக்கு. சேகர், எனக்கு வெந்நீர் போட்டாயா ?''

''தயாரித்துவிட்டேன் எஜமானி !''

''இருபத்து எட்டு டிகிரி! அதையும் சொல்லேன் !''

''சேகர்! எனக்கு நீ தேர்ந்தெடுத்த உடை அபாரம். நிஷா அப்படியே மயங்கிவிட்டாள். உங்கள் சேகரை எனக்குத் தருவாயா ?'' என்று கேட்டாள்.

''விற்றுவிடலாமே!''

''சேகரையா ? விற்பதா ? ம்ஹூம். சேகர், வா, குளிக்கப் போகலாம்.''

''என்னது?''

''நடை சாயங்காலம்தான் இப்போதெல்லாம் குளிக்கிறேன்.''

''அதற்குச் சேகர் எதற்கு?''

''சேகருடன் பேசிக் கொண்டுதான் குளிக்கிறேன்.''

''சேகர், என்ன இது?''

''எஜமானியின் கட்டளை!''

''எஜமானரின் கட்டளை. நீ குளியல் அறைக்குள் போகக் கூடாது.''

நித்யா நிதானமாகச் சிரித்தாள்.

''நானும் சிரிக்க அனுமதி உண்டா ?'' என்றான் சேகர்.

''அனுமதித்தேன்'' என்றாள் நித்யா.

''ஹஹ்ஹா !'' என்று கச்சிதமாகச் சிரித்தான் சேகர்.

ஆத்மா பல்லை நறநறத்தான்.

''என்ன இது ஆத்மா? சேகர் என்ன ஓர் ஆளா ? அவன் ஒரு குரல். நம் வீடெங்கும் இருக்கும் ஒரு குரல். வாம்மா சேகர், நன்றாகத் தேய்த்துக் குளிக்கலாம்!''

அவள் சென்றதும் ''சேகர்!'' என்று இரைந்தான்.

''எஜமானரே !'' என்று பதில் ஒலித்தது. சேவியா ?

''இங்கேயே இரு!''

''இங்கேயும் இருக்கிறேன்.''

''குளியல் அறையில்?''

''அங்கேயும் இருக்கிறேன்.''

''அவள் என்ன செய்கிறாள்?''

''உடைகளைக் களைந்துகொண்டிருக்கிறார்.''

''உடைகளை.....? அடப்பாவி! எப்படித் தெரியும் உனக்கு?''

''குளியல் அறையில் இருக்கும் என் சென்ஸர் சொல்லும் செய்தி இது.''

''இப்போது அவளுடனும் பேசிக் கொண்டிருக்கிறாயா?''

''ஆம்.''

''என்ன பேசுகிறாய்? எனக்குக் கேட்க வேண்டும்.''

''சொல்லுங்கள்.''

'களக், களக்' என்று தண்ணீர் ஒலி கேட்டது.

''சேகர் கண்ணு ! தண்ணீர் கொஞ்சம் சூடாக இருக்கிறதே!''

''எஜமானி, உடனே குறைக்கிறேன்.

''இப்போது ?''

''சரியாக இருக்கிறது!'' மறுபடியும் களக்!

''சேகர், நான் இளைத்திருக்கிறேனா ?''

''சென்ற வெள்ளிக்கிழமை 55 கிலோ இருந்தீர்கள். இன்று காலை 54 புள்ளி 5. உங்கள் உயரத்துக்கு ஏற்ற எடை 52.''

''என் இடை ?''

''நிறுத்து போதும் ! மேலே வேண்டாம்! சேகர் என்ன இது ஆபாசம்! அடுத்தது துடைத்துவிடுவாயா ?''

''துடைத்துவிட வேண்டுமா ?''

''வேண்டாம்! வேண்டாம்! ஏய், உனக்கு வெட்கமாக இல்லை! ஒரு பெண்ணின் குளியல் அறையில் வயது வந்த நீ...?''

''வெட்கம் என்ற சொல்லுக்கு அர்த்தம் தேவை. என் ஞாபக அடுக்கில் அந்த வார்த்தை கிடைக்கவில்லை!''

''சேகர், அது தப்பு தெரியுமா ?''

''வெட்கம் என்பது தப்பா ?''

''அய்யோ உன் மெஷின் மூளைக்கு எப்படிச் சொல்வேன் ?''

ஆத்மாவுக்குத் தன் அர்த்தமற்ற பொறுமையில் வெறுப்பு ஏற்பட்டது. கோபம் வந்தது. அவன் ஒரு குரல்தான்; தெரியும். இருந்தாலும்...குளியல் அறைக்கு அருகே சென்றான்.

குளியல் அறையிலிருந்து நித்யாவின் சிரிப்பு மிதந்து வந்தது. ''சேகர், நீ ஒரு குறும்புக்காரன்!''

என்னுடன் இவள் எப்பொழுது இப்படிச் சிரித்துப் பேசியிருக்கிறாள்.....?

''சேகர், நான் அழகாக இருக்கிறேனா ?''

''நீங்கள் நல்ல பெண் எஜமானி.'' குரலில் எவ்வளவு மாற்றம், கனிவு ! என்னுடன் பேசும்போது இவன் குரலில் கேலி தொனிக்கிறதே! இதெல்லாம் என் மனப் பிரமையா ? ஓர் எல்லைக்கு மேல் கம்ப்யூட்டர்களுக்குச் சலுகை கொடுத்தால் இப்படித்தான் ஆகும்.''

''சேகர், இன்றைக்கு என்ன சமையல் செய்திருக்கிறாய் ?''

''உங்களுக்குப் பிடித்த சமையல் எஜமானி.''

''என்ன? ''

''அல்கா, தொட்டுக் கொள்ள துலா, மொர்னி அப்புறம் தித்திப்புக்கு ஷீம்!''

''அபாரம்! சேகர், நீ ஒரு மேதை !''

மேதை ! எல்லாம் எனக்குப் பிடிக்காத சமையல்! ஆத்மாவின் கோபம் எல்லை மீறி விட்டது. ''டேய், சேகர்!'' என்று இடி போல் முழங்கினான்.

''என்ன எஜமானரே!'' என்று பணிவுடன் பதில் வந்தது.

''இனிமேல் நான் சொல்வதைத்தான் நீ கேட்க வேண்டும். வேறு எவருக்கும் உன் மேல் பாத்தியதை இல்லை. தெரிகிறதா? புரிகிறதா ?''

''அது சாத்தியமில்லை, எஜமானரே!''

''என்ன!''

''உங்கள் ஆரம்ப ஒப்பந்தத்தின்படி ஆணைகள் பிறப்பிக்க மூன்று பெயர்களை

'வாண்டல் கார்டு' என்பது அமெரிக்கத் தயாரிப்பான புதுமைப் பூச்சு ஒன்றின் பெயர்.

செலவு மிகக் குறைவான இந்தப் பூச்சு சுவர்களுக்கு நல்ல பாதுகாப்பு அளிக்கிறது. இதைப் பூசிவிட்டால் சுவரில் கண்டபடி எழுத முடியாது: கரித் துண்டு, சாக்குக் கட்டி, தார், ஏன் பெயிண்டிங்கூட எழுத முடியாது! சுவரைச் சுத்தம் செய்வதும் எளிது. கடற் காற்று, ஆவி, கரிப் புகை முதலியவற்றிலிருந்தும் பாதுகாக்கிறது.



நியமித்து அஸ்ட்ரா கம்பெனிக்குச் சொல்லி இருக்கிறீர்கள். ஆதன்படி என் ஞாபக இதயத்தில் அழிக்க முடியாதவாறு பதிய வைக்கப்பட்டு விட்டது. ஆத்மா, நித்யா, பாபு மூவரின் கேள்விகளுக்கும் ஆணைகளுக்கும் கட்டுப்படுவது என் அழிக்க முடியாத கடமை!''

''அப்படியானால் நீ வேண்டாம்! உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன். உன் வீட்டுக்குப் போ!''

''என் வீடு இதுதான்! நான் உங்கள் அடிமை. அஸ்ட்ரா கம்பெனி ஒப்பந்தத்தின் படி நான் இந்த வீட்டின் பகுதி......!''

''என்ன ஒரே இரைச்சல்!'' என்று மெலிதாக நனைந்த நித்யா குளியல் அறையிலிருந்து வெளிப்பட்டாள்.

''என்ன சேகர்?''

''நான் வேண்டாம் என்கிறார் எஜமானர்!''

''என்ன இது ஆத்மா?''

''ஆமாம், வேண்டாம்! நாம் பழைய படியே இருப்போம். இந்த மாதிரி புத்திசாலி அடிமை எனக்குத் தேவை இல்லை!''

''திடீரென்று என்ன ஆயிற்று? சேகர், எஜமானருடன் சண்டை போட்டாயா?''

''அப்படி ஒன்றும் நிகழவில்லை.''

''ஆத்மா, ஏதாவது காரணம் இருக்க வேண்டும்! சொல்லேன்!''

''அவன் பாத்ரூமில் உன்னுடன் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை!''

''அவ்வளவுதானே!''

''இல்லை. இன்னும் இருக்கிறது. அவன் செய்யும் சமையல் எனக்குப் பிடிக்கவில்லை. அவன் என் மகனை எனக்கு எதிராகச் சதுரங்கம் ஆடி ஜயிக்க வைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் உன்னுடன் பேசுவதே எனக்குப் பிடிக்கவில்லை.''

''என்?''

''ஆபாசமாக இருக்கிறது. குளிப்பதையும் உடை மாற்றுவதையும், இடுப்பளவையும் ஒரு வேலைக்காரனிடம் பேசுவார்களா?''

நித்யா சிரித்தாள்.

''எனக்கும் சிரிக்க அனுமதி இருக்கிறதா?''

''வாயை மூடு, அடிமை நாயே!''

''ஆத்மா, நீ கொஞ்சம் பைத்தியமாகிக் கொண்டிருக்கிறாய் என்று நினைக்கிறேன்!''

''இன்னும் ஒரு வாரம் அந்தச் சேகருடன் இருந்தால் முழுப் பைத்தியமாகிவிடுவேன்!''

''இது பைத்தியம் இல்லை. செருக்கு! ஆணவம்! எனக்குத்தான் எல்லாச் சௌகரியங்களும் வேண்டும். அடிமை என்றால் எனக்கு மட்டும்தான் அடிமை. மற்றவர்களுக்கு இல்லை. என் மனைவிக்கு இல்லை. மகனுக்கு இல்லை. அப்படித்தானே!''

அப்படித்தான்!''

''ஆத்மா, ஏன் இப்படி மர மண்டையாய் இருக்கிறாய்? சேகர் மனிதனில்லை. ஒரு குரல். ஓர் இயந்திரம். ஒரு சாதனம்! ஒரு சௌகரியம். அவ்வளவுதான்!''

''எனக்குச் சேகர் வேண்டாம்.''

''எனக்குச் சேகர் வேண்டும்.''

ஆத்மா தீர்மானமாகச் சொன்னான். ''சரி! இரண்டில் ஒன்று தீர்த்துவிடலாம். உனக்கு நான் வேண்டுமா, சேகர் வேண்டுமா....? சொல்!''

''உளறாதே! ஆத்மா, உனக்கு மனம் சரியாக இல்லை! நாளைக் காலை இதைப் பற்றிப் பேசலாம், என்ன?''

''இல்லை. இப்பொழுதே பேசி முடிவு கட்ட வேண்டும்!''

நித்யா சிரித்துக்கொண்டே நிதானமாகச் சொன்னாள்: ''நாளைக் காலை ஆத்மா! நாளைக் காலை. உன் மூளை சரியாக இல்லை....'' தன் அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் தாளிட்டாள்.

ஆத்மா மூடின கதவை வெறித்து நோக்கினான். அவன் உடல் நடுங்கியது. மன ஓரத்தில் குற்ற உணர்ச்சியும் அவமானமும் தெரிந்தன. ஆதாரமாக அவன் பிடிவாதம் தப்பு என்பதும் தெரிந்தது. மூளை சரியாக இல்லையாம்! பெண்களுக்கு இந்த நூற்றாண்டில் எவ்வளவு சலுகைகள்! அது இந்த நூற்றாண்டின் மகத்தான தப்பு! மற்றொரு தப்பு இந்தக் கம்ப்யூட்டர்கள்!

''எஜமானரே, தூங்க உத்தேசமா.....? எலெக்ட்ரோ ஸ்லீப் அமைக்கட்டுமா?''

''இல்லை. சேகர் என்னுடன் பேச வேண்டும்.''

''சரி, எஜமானரே!'' மறுபடியும் கேலி! வா வா!

''சேகர், உனக்கு உயிர் இருக்கிறதா?''

''உயிர் என்பது எந்த அர்த்தத்தில்?''

''நீ எப்படி இயங்குகிறாய்?''

''என் கம்ப்யூட்டரினால்.''

''உன் கம்ப்யூட்டர் எப்படி இயங்குகிறது?''

''ஸோலார் பானல்களிலிருந்து சக்தி கிடைக்கிறது. சூரிய சக்தியைச் சேகரித்து வைத்து மின்சாரமாக்கி......''

''கம்ப்யூட்டர் எங்கே இருக்கிறது?''

''மாடிப் படிகளுக்குக் கீழ், சுவரில் பதிந்திருக்கிறது.''

''அதைத் திறக்க முடியுமா?''

''முடியாது.''

''அதற்குச் சக்தி தரும் இணைப்புக்கள்?''

''மேலேயிருந்து கம்பிகள் வழியாக வருகின்றன.''

''எத்தனை கம்பிகள்?''

''இருபத்திரண்டு.''

''அவைகளை வெட்டுவதற்கு என்ன செய்ய வேண்டும்?''

''வெட்டுக் கத்தி வேண்டும்.''

''நம் வீட்டில் அந்தக் கத்தி இருக்கிறதா?''

''இருக்கிறது, எஜமானரே! சமையல் அறையில் மைக்ரோவனுக்கு மேலே இடது அலமாரியில்!''

சமையல் அறைக்குள் சென்று கத்தியை எடுத்துக் கொண்டான்.

''இந்தக் கத்தியை வைத்துக் கொண்டு அந்த இருபத்திரண்டு இணைப்புக் கம்பிகளையும் வெட்டிவிட்டால் என்ன ஆகும்?''

''என் சகல சக்திகளும் மடிந்துவிடும்.''

''அந்த இணைப்புக் கம்பிகள் எங்கே இருக்கின்றன, காட்டுகிறாயா?''

''நல்லது, எஜமானரே. மாடிப் படிக்கு வாருங்கள். காட்டுகிறேன்.''

ஆத்மா மெதுவாக மாடிப் படியை நோக்கி நடந்தான்.


பெண்மைக்குரிய மென்மையுடனும்
நறுமணத்துடனும் திகழுங்கள்
புதிய பெடல் ஷவர்—
அன்றலர்ந்த வசந்த மலரின்
அருமையான நறுமணமும்,
மென்மையும் கூடிய டால்க்.
COLGATE
Petal Shower
FRAGRANCE OF FRESH SPRING FLOWERS
IN A PETAL SOFT TALC
புதிய
பெடல் ஷவர் மட்டுமே
இவ்வளவு
குறைவில்
நறுமணங்கமழும்
மென்மையைத்
தருகிறது.

PST G.I. TM

உண்மையே உன் விலை என்ன?

காட்சி - 13

(பிஷப் இருப்பிடம். நடுநாயகமாகப் பிஷப் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் அருமைநாயகம் நின்றுகொண்டிருக்கிறார்.)

பிஷப்: ஃபாதர்! இதுவரைக்கும் நான் உங்க மேலே எந்த நடவடிக்கையும் எடுக்கலே. ஒரு கிரிமினல் வழக்கிலே நீங்க சம்பந்தப்பட்டும் கூட நான் உங்க மேலே நடவடிக்கை எடுக்கும்படியா ஹிஸ் கிரேஸ் ஆர்ச் பிஷப்புக்கோ வேறு யாருக்குமோ சொல்லலே. நீங்க உண்மைக்காகத்தான் உழைப்பீங்கன்னு அவ்வளவு நம்பிக்கை எனக்கு.

அருமைநாயகம்: மை லார்ட்! அதுக்காக நான் கடமைப்பட்டிருக்கேன்.

பிஷ: இப்ப இந்தப் பத்திரிகைச் செய்திக்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போறீங்க? ஏற்கனவே உங்களைப் பத்தி என்னைக் கேட்கிறவங்க, இனிமே கேட்கப்போற கேள்விகளுக்கு நான் என்ன சொல்லப் போறேன்?

அரு: மை லார்ட்! என் மேலே நீங்களும் சந்தேகப்படறீங்களா? என்னை நீங்க நம்பலையா?

பிஷ: நான் உங்களை நம்பறேனா இல்லையா என்ற கேள்வியே இப்ப அநாவசியமாப் போச்சு. ஊர் உங்களைப் பத்தி என்ன நினைக்குது? கிறிஸ்துவர்கள் உங்களைப் பத்தி என்ன நினைக்கிறாங்க? என்ன நினைப்பாங்க? இப்ப அதுதானே முக்கியமாப் போச்சு.

அரு: மற்றவர்கள் நினைக்கிறதை நான் எப்படித் தடுக்க முடியும்? உரிய காலத்தில் கடவுள் அவர்களுக்கெல்லாம் உண்மையை உணர்த்துவார்ன்னு நான் நம்பறேன்.

பிஷ: அப்படி நடந்தா உங்களைவிட எனக்குத்தான் திருப்தியாக இருக்கும். ஆனால், இப்ப உங்களைப் பத்தி இந்த மாதிரி செய்திகள் வந்த பிறகு நீங்க போட்டிருக்கிற பிரீஸ்ட்டினுடைய உடைக்கு என்ன மரியாதை இருக்கும்னு கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. நீங்க போட்டிருக்கிற உடைக்கு மரியாதை இல்லாமப் போனா அந்த உடையைப் போடற மத்த ப்ரீஸ்ட்களுக்கும் பிஷப்களுக்கும் என்ன மரியாதை இருக்கும்? கிறிஸ்டியானிட்டிக்கு என்ன மரியாதை இருக்கும்?

அரு: மை லார்ட்! இந்த உடையை நான் அணியறதினாலேயும் நான் ப்ரீஸ்ட்டாக இருக்கிறதனாலேயும் மத்த ப்ரீஸ்ட்களுக்கு அவமானம்னு நினைக்கிறீங்களா? என் மேலே ஏதாவது 'ஆக்ஷன்' எடுக்கப் போறீங்களா?

பிஷ: என்ன செய்யறதுன்னு எனக்குத் தெரியலே.... என் நிலைமையிலே நீங்க இருந்தா என்ன செய்வீங்கன்னு சொல்லுங்க. அதையே நான் செய்யறேன்.

அரு: மை லார்ட்! என்னாலே இந்த உடைக்கும் ப்ரீஸ்ட்ங்கற ஒரு தெய்வீகமான பதவிக்கும் அவமானம் வந்துவிடக் கூடாது. இன்னியிலேருந்து, இந்த நிமிஷத்திலேருந்து நான் ஒரு ப்ரீஸ்டாகச் செயல்படமாட்டேன். இந்த உடையையும் இங்கேயே வெச்சுடறேன். நீங்களா நான் இதுக்கு அருகதை உள்ளவன்னு நினைக்கிற வரையிலும் இந்த உடையைத் தொடமாட்டேன். நீங்களாகவே எனக்குத் தகுதி இருக்குன்னு நினைக்கிற வரையில் பாதிரியாக நான் இனி செயல்படவும் மாட்டேன். மை லார்ட்! எனக்கு விடை கொடுங்க.

(பிஷப்பிடம் மண்டியிட்டு நிற்கிறார்.)

ஆனால் நான் இன்னும் கிறிஸ்தவன்தான். ஏசு பாவிகளையும் ரட்சிப்பார். மன்னிப்பார். நான் பாவியாகவே இருந்தாலும்கூட ஏசு என்னை மன்னித்துக் கிறிஸ்தவனாக ஏற்றுக் கொள்வார். எனவே நான் இன்னமும் ஒரு கிறிஸ்தவன்தான். உண்மையான கிறிஸ்தவனும்கூட என்பதைக் காலம் காட்டும். (போகிறார்)


காட்சி - 14

(குப்புசாமி வீடு. பாத்திரங்கள்: குப்புசாமி, ஜோ, வெங்கட், பாதிரியார். ஜோ அழுதுகொண்டிருக்கிறாள்.)

குப்புசாமி: சும்மா பொய் சொல்லாதே. அன்னிக்கே நான் சந்தேகப்பட்டேன். இப்ப பேப்பர்லே எல்லாம் சிரிப்பாச் சிரிக்குது.... அந்தப் பாதிரியார் அன்னிக்கு வந்தப்பவே சந்தேகப்பட்டேன். என்னமோ டாக்ஸி எம்.எஸ்.எக்ஸ். 7080ன்னு பேசினாரே, அதுக்கு என்ன அர்த்தம்?

ஜோ: நான் சொன்னதை நீங்க நம்பலையா? நிஜமா நடந்ததைத்தான் சொன்னேன்.

குப்: சீ.... சீ... பேசாதே.... என்ன கதை உடறே? டொனேஷன் வாங்க டாக்ஸியிலே போனேன்; பணக்கார வீட்டுப் பையன் பலாத்காரம் பண்ண வந்தான்; டாக்ஸி டிரைவர் அவனை அடிச்சுக் கொன்னுட்டான்; நான் ஓடி வந்துட்டேன்! கதையா உடறே?



சோ

ஜோ: நிஜம்மா நடந்ததைத்தான் சொல்றேன்.

குப்: அத்தனையும் பொய்! அன்னிக்கு அந்தப் பாதிரியார் வந்து டாக்ஸி கேக்கின்னு பேசினதுலே வேறே ஏதோ உள் அர்த்தம் இருக்கு. அதை மறைக்கத்தான் என்கிட்டே நீ என்னமோ கதை அளக்கிறே !

ஜோ: ஏன் இப்படிச் சித்திரவதை பண்றீங்க? விபரீதமா நினைக்காதீங்க. நான் நடந்ததைச் சொல்லிட்டேன். அதான் உண்மை. அந்த ஆரோக்கியசாமிகிட்டே லேமன் கிளப் டொனேஷனுக்காகப் போன போது, அவன் மகன் என்னை......

குப்: அந்தக் கதையைத்தான் சொல்லிட்டியே. அதையும் இன்னிக்குத்தானே சொல்லறே ?

ஜோ: முதல்லே சொல்லப் பயமா இருந்தது. நீங்க ஏதாவது சந்தேகப்படப் போறீங்களோன்னு பயந்துதான் நான் சொல்லாமலே இருந்துட்டேன்.

குப்: இன்னிக்குப் பேப்பரிலே உன்னையும் பாதிரியையும் சம்பந்தப்படுத்திச் சந்தி சிரிச்ச உடனேயே சொல்றியா? பொய்! பொய்! நீ சொல்ற மாதிரி நிஜமாவே நடந்திருந்தா அன்னிக்கே என்கிட்டே சொல்லியிருப்பே. நானும் நம்பியிருப்பேன். இப்ப பேப்பர்லே வந்ததைப் பார்த்து, என்னை ஏமாத்தறதுக்காகக் கட்டுக் கதை கட்டி விடறே. நிஜம்மாவே நடந்திருந்தா அன்னிக்கே பாதிரி வந்துட்டுப் போன உடனே யாவது சொல்லியிருப்பியே ? இல்லேன்னு பாதிரிகிட்டேயாவது விஷயத்தைச் சொல்லியிருப்பியே ?

ஜோ: எனக்குத்தான் நீங்க சந்தேகப் படுவீங்களோன்னு பயமா இருந்துதே. ஆனால் அடுத்த நாள் கழிச்சுப் பாதிரி திரும்பி வந்தார். அப்ப அவர்கிட்டே நடந்ததைச் சொன்னேன்.

குப்: ஓஹோ ! அடுத்த நாளும் பாதிரி வந்தாரா ? நான் ஆபீஸ் போற டைம் பார்த்து வராரா ? அய்யய்யோ ! ஜோ நீயும் ஒரு பொம்பளையா? நான் அந்தப் பக்கம் ஆபீஸ் போன உடனே இந்தப் பக்கம் பாதிரியார்......

ஜோ: அய்யய்யோ! அந்த மாதிரியெல்லாம் பேசாதீங்க. அவர் உண்மையைத் தெரிஞ்சுக்கறதுக்காகத்தான் அடுத்த நாள் வந்தார். அப்ப அவர்கிட்ட நான் நடந்ததைச் சொன்னேன்.

குப்: இல்லே, வேறே ஏதோ பேசியிருக்கீங்க. தனியாப் பேசத்தான் நான் ஆபீஸ் போன பிறகு அவர் வந்திருக்கார். அவர்கிட்டே நீ பேசினதா சொல்றியே, அதுக்கு என்ன சாட்சி ? என்ன ஆதாரம்?

ஜோ: அந்தப் பாதிரிதான் ஆதாரம்.

குப்: வேலிக்கு ஓணான் சாட்சி.

ஜோ : அவரை அந்த மாதிரியெல்லாம் சொல்லாதீங்க.

குப்: ஓஹோ! அவருக்குப் பரிஞ்சுகிட்டு வர்றியா? என்ன தைரியம் உனக்கு?

ஜோ: அவரோட பேசினதுக்கு நான் என்ன ஆதாரம் காட்ட முடியும் ? பக்கத்துலே சாட்சியை வெச்சுக் கிட்டா பேசினோம்?

குப்: அதுதானே! யாரும் இல்லாத, சமயத்திலேதான் பேசுவீங்க! அவர்கிட்டே என்ன பேசினேன்னு நிரூபிச்சுக் காட்டு. ஒத்துக்கறேன்.

(அருமைநாயகம் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைகிறார்.)

அரு: குட்மார்னிங்.

குப் (கோபமாக): நான் இன்னும் ஆபீஸ் போகலே ! ஏன் அதுக்குள்ளே வந்தீங்க?

"ஏழை பாவிகளையும் ரட்சிப்பார், மன்னிப்பார். நான் பாவியாகவே இருந்தாலும் கூட ஏழை என்னை மன்னித்துக் கிறிஸ்துவராக ஏற்றுக்கொள்வார்."



அரு: மிஸ்டர் குப்புசாமி! நீங்க என் மேலே கோபப்படறதுக்கு நியாயம் இருக்கு. இந்த மாதிரி குழப்பம் இருக்கும், அதைத் தீர்த்து வைக்கிறது என் கடமைன்னு நினைச்சுத்தான் நான் வந்தேன். தயவுசெய்து நான் சொல்றதைக் கேளுங்க. நான் வந்த போது நீங்க சொன்ன கடைசி வார்த்தைகள் என் காதிலே விழுந்தன. எங்கிட்ட உங்க மனைவி என்ன பேசினாங்கன்னு நிரூபிச்சா நீங்க ஒத்துக் கொள்றதா சொன்னீங்க.

குப்: நீங்க சொன்னா நிருபணம் ஆகாது.

அரு: தெரியும். அப்படிப்பட்ட கேவலமான நிலைமையில்தான் நான் இருக்கேன். ஆனா அன்னிக்கு நாங்க பேசினதை வக்கீல் சத்யநாராயணா மகன் டேப் ரிகார்ட் பண்ணிட்டான்.

சீதா: நெஜமாவா ?

அரு: ஆமாம்மா. உங்களுக்குத் தெரியாம அவன் ரிக்கார்ட் பண்ணிட்டான். அது தப்புன்னு அப்ப நான் சொன்னேன். ஆனா இப்ப அதுதான் உண்மையை நிரூபிக்க உதவப் போவுது. வெங்கட்டையும் அழைச்சுக்கிட்டு வந்திருக்கேன். அந்த டேப் ரிக்கார்டரைப் போட்டுக் கேளுங்க, மிஸ்டர் குப்புசாமி ! வெங்கட்.... வெங்கட்.... !

(வெங்கட் உள்ளே வருகிறான்)

குப்: இதெல்லாம் என்ன புது ஃப்ராட் ?

அரு: தயவுசெய்து அந்த ரெக்கார்டைக் கேட்டுட்டுப் பேசுங்க மிஸ்டர் குப்புசாமி. வெங்கட்! அந்த டேப் ரிக்கார்டரை அவங்ககிட்டக் கொடு !

வெங் : யார்கிட்டேயும் கொடுக்கக் கூடாதுன்னு அப்பா சொல்லியிருக்காரே....... கேஸுக்குப் பயன் ஆனாலும் ஆகும்னு சொன்னாரே.

அரு: சரி.... நீயே அவங்களுக்குப் போட்டுக் காட்டு. இரு, இங்கே என் எதிரிலே வேண்டாம். நீ வேறே என்னென்னவோ அதில் பேசியிருக்கே. உள்ளே எடுத்துக்கிட்டுப் போய்ப் போட்டுக் காட்டு.

வெங்: வாங்க சார்! வாங்க மேடம் ! வாங்க ஸார் ! வெக்கப்படாதீங்க! இடையில் கொஞ்சம் பாபி பற்றி வரும். அவ்வளவு தான். பரவாயில்லே. வாங்க.

(அவர்கள் உள்ளே போகிறார்கள். மேடைமீது வெளிச்சம் குறைந்து மங்கிய ஒளி நிலவுகிறது. உள்ளே அவர்கள் பேசுவது மைக்கில் ஒலிக்கிறது.)

மைக் ஒலி:

வெங்: இருங்க. உம்... ரெடி... போடட்டுமா .....?

சீதா: தயவுசெய்து கொஞ்சம் சின்னதாவே வைப்பா. அவர் மட்டும் கேக்கட்டும், போதும்.

வெங்: சரி.

(மேடை வெளிச்சம் அதிகமாகிக்கொண்டே வருகிறது.)

மைக் ஒலி:

சீதா: கேட்டீங்களா? இப்ப என்னை நம்பறீங்களா ?

குப்: ஐ ஆம் ஸாரி சீதா. நான் ஆத்திரத்திலே என்னென்னமோ பேசிட்டேன்.

வெங்: எப்படி இந்த வெங்கட் வேலை? டிட் யூ ஸீ பாபி?

(மூவரும் உள்ளிருந்து வெளியே வருகிறார்கள்.)



"ஃபாதர்! அந்த படவா ராஸ்கல் ஆரோக்கியசாமி அயோக்கியன்! அவன் மானத்தை வாங்கறேன் பாருங்க!"

"அப்படிப் பேசக் கூடாது குப்புசாமி. எல்லோரும் மானத்தோடே வாழணும்...."

அரு: மிஸ்டர் குப்புசாமி!

குப்: என்னே மன்னிச்சுகட்டேன்னு முதல்லே சொல்லுங்க. அப்புறம்தான் நான் உங்க கிட்ட பேசுவேன்.

அரு: மன்னிக்கப்பட வேண்டியவன் நான் தான். உங்க குடும்பத்திலே ஒரு குழப்பத் துக்கு நான் காரணமாயிட்டேன்.

குப்: நோ, நோ. நீங்க எப்படிக் காரண மாக முடியும்?

கீதா: இவர் சந்தேகம்தான் காரணம்.

குப்: அப்படிச் சொல்லாதே. நான் என்ன சந்தேகப் படறவனு? நான் சந்தேகப் பிராணின்னு நீயா நினைச்சுக்கிட்டே!.... யாரோ இந்தக் குழப்பத்துக்கெல்லாம் காரண மாக இருந்திருக்காங்க.

கீதா (வெங்கட்டை நோக்கி): உனக்கு ரொம்ப தாங்க்ஸ் தம்பி.

வெங்: ரமாகிட்ட லெட்டர் கொடுத் திருங்களா?

குப்: அந்த வெளேயாட்டெல்லாம் வெச்சுக் காதே. தாங்ஸ்ன்னு அதோட விட்டுடு. அவ்வளவுதான.

வெங்: மிஸ்டர், யூ ஆர் எ ஃபூல்.

குப்: என்னடா சொன்னே?

வெங்: ஐ ஸெட் யூ ஆர் எ ஃபூல்!

அரு: வெங்கட்! அந்த மாதிரியெல்லாம் பேசக் கூடாதுப்பா!

வெங்: பின்னே என்ன ஸார்! இன்னும் இந்தக் குழப்பத்துக்கு யார் காரணம்னு இவ ருக்குப் புரியலேயே? மிஸ்டர்! இதெல்லாம் ஆரோக்கியசாமி வேலே!

குப்: நிஜமாகவா?

வெங்: ஆமாம்.

குப்: ஃபாதர்.....?

அரு: இருக்கலாம். அவர் என் மானம் போயிடும்னு எச்சரிக்கை பண்ணினர். அதுக் குப் பிறகுதான் இதெல்லாம் பத்திரிகையில் வந்தது. ஆன நாம் நினைக்கிறது தப்பாவும் இருக்கலாம்.

வெங்: இவர் பாதிரி என்கிறதாலே இப்படிப் பேசறர். பாதிரியாக இருந்துக்கிட்டு மத்த வங்க மேலே பழி சுமத்திப் பேசக்கூடாது. ஆனல் நான் தைரியமா சொல்லலாம். என்ன ஐ ஆம் நாட் எ ஃபாதர்! ஐ யாம் ஒன்லி எ சன். இந்த ஆரோக்கியசாமிதான் இதைப் பண்ணியிருக்கான். எங்கப்பாவே சொல்லி யிருக்கார்!

குப்: சே.... நான் ஒரு மடையன்!

வெங்: அதைத்தான் நான் இங்கிலீஷிலே சொன்னேன். உங்களுக்குக் கோபம் வந்தது!

குப்: நீ இன்னெரு தரம் சொல்லு. நான் கோபிக்கமாட்டேன்.

வெங்: யூ ஆர் எ பிளடி ஃபூல்!

குப்: பிளடி ஏன் புதுசா சேர்க்கிறே?

வெங்: எனக்கு அப்பப்ப இன்ஸ்பிரேஷன் வரும். சொல்லுவேன்! என் மூளையைத் தாங்க முடியாது! அப்பப்ப ஐடியா வரும்.

கீதா: அடுத்த ஐடியா வர்றதுக்குள்ளே வீட்டுக்குப் போய்ச் சேரேன்.

வெங்: எனக்கே டைம் ஆறது. மிஸ்டர் குப்புசாமி! நான் உங்களைப் பத்தி என்ன நினைக்கிறேன், தெரியுமா?

குப்: அதான் சொல்லிட்டியே!

வெங்: இல்லே. இப்போ திடீர்னு ஒரு இன்ஸ்பிரேஷன் — ஒரு ஐடியா — நான் என்ன நினைக்கிறேன், தெரியுமா?

குப்: (சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில்): நான் தனியா இருக்கும்போது சொல்லு. இப்ப வேணும். ப்ளீஸ்!

வெங்: ஆல் ரைட்... பை! பை! டா! டா! ஹம்தும்......

(வெங்கட் பாடியபடியே வெளியே போகிறன்)

குப்: ராஸ்கல்! அந்த ஆரோக்கியசாமி இவ்வளவு பண்ணினனு? கீதா! நீ ஏன் நடந்ததை வெளிப்படையா ஒத்துக்கப் பயப் படணும்? பாவம், அந்த டாக்ஸி டிரைவர். அவனுக்காக என்ன வேணும்னுலும் செய்ய லாம்! கோர்ட்லே போய்ச் சாட்சிகூடச் சொல்லலாம்.

அரு: நிஜமாவா மிஸ்டர் குப்புசாமி?

குப்: நிஜமாத்தான் ஸார்!

கீதா: நீங்க ஒண்ணும் தப்பா நினைக்கமாட் டீங்களே?

குப்: மாட்டவே மாட்டேன். இப்பவே வேணும்னுலும் நீ ஒரு ஸ்டேட்மெண்டு எழுதி இவருகிட்டே கொடு. இவர் கொண்டு போய் வக்கீல்கிட்டே கொடுக்கட்டும்.

அரு: ரொம்ப தாங்க்ஸ். வக்கீல்கூட ஸ்டேட்மெண்ட் இருந்தா ரொம்ப உதவியா இருக்கும்னு சொன்னர்.

குப்: எனக்குத்தான் தெரியுமே! ஸ்டேட் மெண்ட் இருந்தா நல்லது. நான் என்ன மடையனு?

கீதா: இந்தச் சந்தேகம் உங்களுக்கு என் னிக்குத்தான் தீருமோ?

குப்: ஸ்....ஸ்... ஃபாதர்! என்ன மாதிரி ஸ்டேட்மெண்ட் வேணும்? சொல்லுங்க. இவளே எழுதச் சொல்றேன்.

அரு: நான் என்ன சொல்ல இருக்குது? நடந்த உண்மையை எழுதிக் கொடுக்கட்டும். அது போதும்.

குப்: இந்தா பேப்பர், பேனு, என் லெட்டர் ஹெட். எழுது. நடந்ததை அப்படியே எழுது. அந்த ஆரோக்கியசாமிக்கு ஆச்சு, எனக்காச்சு. பார்த்துடுவோம், ஒரு கை.

(கீதா எழுதுகிறள்)

குப்: ஃபாதர்! அந்தப் பட்வா ராஸ்கல் ஆரோக்கியசாமி அயோக்கியன்! அவன் மானத்தை வாங்கறேன் பாருங்க!

அரு: அப்படிப் பேசக் கூடாது குப்புசாமி. எல்லோரும் மானத்தோட வாழணும். அது தான் உலகத்துக்கே நல்லது.

குப்: அவனுக்குப் போய்ப் பரிஞ்சு பேச றீங்களே! அவன் உங்களேயே அவமானப் படுத்தியிருக்கான்.

அரு: நீங்க அப்படியா நினைக்கிறீங்க? அவர் தமக்குத் தாமே அவமானத்தைத் தேடிக்கிட்டதாகத்தான் நான் நினைக்கிறேன்.

கீதா: இந்தாங்க ஃபாதர் என் ஸ்டேட் மெண்ட்.

அரு: காட் ப்ளெஸ் யூ சில்ட்ரன். நான் வரேன் (போகிறர்)

(தொடரும்)



ஆறு கால்கள் உள்ள நடக்கும் நாற்காலி

வளமை மிக்க வருங்காலம்

"இதோ ஒரு புதிய கார் பாட்டரி! உங்கள் காரின் ஆயுட்காலம்வரை இதுவும் நீடிக்கும். நிரந்தரமாக 'சீல்' செய்யப் பெற்ற இந்தப் பாட்டரி 'லீக்' ஆகாது. அவ்வப்போது 'சார்ஜ்' செய்ய வேண்டியது இல்லை. குளிர், மழை காலத்தில் காரை ஸ்டார்ட் செய்வதில் சிரமமே இராது"– இப்படி ஒரு விளம்பரம் இன்னும் சில ஆண்டுகளில் வெளிவந்தால் அதில் சூதோ, பித்தலாட்டமோ ஏதும் இராது. அத்தகைய பாட்டரியை உருவாக்குவதற்கான நுட்பங்களும் அறிவும் இப்போதே அமெரிக்க விஞ்ஞானிகளிடம் உள்ளனவாம். விண்வெளியில் செயற்கைக் கோள்களை அனுப்புவதற்கு வகுத்த திட்டங்களின் பயனாக இப்படி ஒரு சாதனை.

சந்திர மண்டலத்தை அடைவதற்கான 'அப்போலோ' திட்டத்துக்கு 20 பில்லியன் டாலர் செலவாயிற்று. விண்வெளித் துறை ஆராய்ச்சிக்கு 1960க்குப் பிறகு அமெரிக்காவுக்கு ஆன மொத்தச் செலவு 40 பில்லியன் டாலருக்கு மேல். ருஷ்யா எத்தனை ரூபிள்கள் இத்துறையில் செலவிட்டதோ? பூமியிலே நடக்க வேண்டிய பணிகள் எவ்வளவோ உள்ளனவே? வறுமை, பசி, பிணியால் உலகின் பல பகுதிகளிலும் மக்கள் துன்புறும் நிலையில் விண்வெளி ஆராய்ச்சிக்கென இத்தனை பெரிய தொகையைச் செலவிடுவது என்ன நியாயம் என்று அமெரிக்கர்களே குரல் எழுப்பினர். அதற்கு அரசு அளித்த பதில்: "இந்தத் தொகையை அமெரிக்காவில்தான் செலவிட்டிருக்கிறோம்; சந்திர மண்டலத்தில் அல்ல! இந்த ஆய்வுகளின் பயனாக வருங்கால உலகம் பெறக்கூடிய லாபத்தை நினைத்துப் பார்த்தால் விண்வெளி ஆய்வுக்காகச் செலவிடப்பட்ட தொகை வீணாகவில்லை என்பது புரியும்."

பல்வேறு துறைகளில் நடைபெறப் போகும் அதிசய முன்னேற்றங்களுள் சில.

ராக்கெட் எஞ்சினுடைய முகப்புக்காக 'ஹைஸ்டில்' (Hystil) என்று ஒருவகை பிளாஸ்டிக் உருவாக்கப்பெற்றது. எஃகினை விட உறுதியானதாம் இந்த ஹைஸ்டில். வருங்காலத்தில் மோட்டார் கார்களின் 'பாடி' இதைக் கொண்டு அமைக்கப் பெறலாம். வண்டியின் கனம் குறையும். குறைந்த விலையில் உறுதியான கார் கிடைக்கும். மேலும் ரசாயனப் பொருட்களின் அரிப்பினால் பாதிக்கப்படாத ஹைஸ்டில் குழாய்களையும் உற்பத்தி செய்யலாம்.

சாடர்ன்–5 ஏவுகணைக்கெனத் தயாரிக்கப்பட்ட ஒருவித நுரை ரப்பர் வருங்காலத்தில் பொருட்கள் கெடாமல் எடுத்துச் செல்லும் குளிர்பதன டிரக் வண்டிகள், ரயில் பெட்டிகளுக்குப் பயன்படக் கூடும். காரின் பெட்ரோல் டாங்குகளுக்கும் இது வருங்காலத்தில் உபயோகிக்கப்படலாம். 'ப்ரோபேன்' அல்லது திரவ வடிவமான வாயுவை எரிபொருளாகக் கொண்டு ஓடும் மோட்டார்கள் வருங்காலத்தில் உபயோகத்துக்கு வந்தால் தேவையான 160°F உஷ்ணம் குறையாமல் பாதுகாக்க இந்த நுரை ரப்பர் பெரிதும் உதவும்.

விண்வெளி நோக்கி விரையும்போது சூழ்நிலையால் ஏவுகணைகள் பாதிக்கப்படாமலிருக்கும் வகையில் ஒருவித பெயிண்ட் கண்டு பிடிக்கப்பட்டது. வீட்டின் வெளிப்புறச் சுவர்களுக்கு இது மிகவும் ஏற்றதாக இருந்தது. 800 முதல் 1000 தடவைகள் தேய்த்துக் கழுவப்பட்ட பிறகும் பளபளவென்று இருந்தது. இந்தப் பெயிண்ட் அமெரிக்க மார்க்கெட்டில் விலை போகவில்லையாம்! மக்களால் நம்ப முடியாத அளவுக்கு அதன் தரம் உயர்வாக இருந்ததே காரணம்! 'இருபது வருஷ உத்தரவாதம் அளிக்கிறோம்' என்று விளம்பரம் செய்த பிறகும், இதில் ஏதோ சூது இருக்கிறது என்று மக்கள் சந்தேகித்தனர்.

தீப்பிடித்தால் அது பரவாமல் தடுக்கும் பாலியுரிதேன் நுரை ரப்பர் நாஸா ஏம்ஸ் ஆய்வுக் கேந்திரத்தில் ஏவுகணைகளுக்கு உபயோகிப்பதற்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பெற்றது. தீப்பற்றும்போது இந்த நுரை கரியாகப் போய் அதுவே ஒரு வகையில் தீ பரவாமல் தடுக்க உதவுவதுடன், அது கருகும்போது வெளிப்படும் ஒருவகை வாயு தீயை அணைக்கவும் செய்கிறது. வருங்காலத்தில் இது எங்கெங்கெல்லாம் எந்த அளவுக்குப் பயன்படும் என்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! 1967ம் ஆண்டில் மூன்று

அமெரிக்க விண்வெளி வீரர்கள் பூமியிலேயே ஒரு தீவிபத்தில் இறந்து போனதையொட்டித் தீவிர ஆராய்ச்சிகள் நடந்தன. விளைவு: தீயினால் பாதிக்கப்படாத ஒரு வர்ணப் பூச்சு!

10 பவுண்டு எடையுள்ள, 22,000 கலோரி உஷ்ணம் அளிக்கவல்ல உணவு வகைகளை 'நாஸா' தயாரித்துள்ளது. 10 நிமிடங்களில் இதனை உண்பதற்கேற்பப் பக்குவப்படுத்தலாம். 5 நிமிஷங்களில் சாப்பிட்டு முடிக்கலாம். படைகளுக்குப் போர்க் காலங்களில் இவை பயன்படும். பழங்கள் நீண்ட காலம் கெடாமல் இருக்க அவற்றிலிருந்து நீரை அகற்றி விண்வெளிப் பயணிகளுக்கெனத் தயாரிக்கப்பட்டது. அதில் பால் சேர்த்தவுடன் பழத்தின் இயல்பான நிறமும் அமைப்பும் திரும்ப வந்துவிடும். வருங்காலத்தில் இப்படி எத்தனையோ புதிய உணவு வகைகள் புழக்கத்துக்கு வரக்கூடும்.

வீடு கட்டுவதிலும் புதிய அமைப்புக்கள் வருங்காலத்தில் வரப் போகின்றன. ஏரோஜெட் ஜெனரல் கார்ப்பொரேஷனும் மிசிகன் பல்கலைக் கழகமும் சேர்ந்து உருவாக்கிய ஒரு வீட்டுக்கு நார் கண்ணாடியும் (Fibre glass) பிளாஸ்டிக்கும் சேர்ந்த கலவையைப் பயன்படுத்தியுள்ளனர். சாதாரண வீடு கட்டுவதை விட மிகவும் மலிவு. 'டிஸ்னி லாண்'டில் ''வருங்கால வீடு'' என்ற பெயரில் இதனைப் பார்வைக்கு வைத்துள்ளனர்.

அப்போலோ ஏவுகணைக்காகத் தயாரிக்கப்பட்ட அதிர்ச்சி உறிஞ்சி (Shock absorber)க்கு வருங்காலத்தில் நல்ல உபயோகம் இருக்கக் கூடும். மோட்டார் கார் 'பம்பர்' சாதனமாக இது பயன்படும். இப்போதே அமெரிக்காவில் ஓர் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் இத்தகைய சாதனம் பொருத்திய மோட்டாருக்கான இன்ஷ்யூரன்ஸ் பிரீமியத்தில் 20 சத விகிதம் குறைப்பதாக அறிவிப்புச் செய்துள்ளதாம்!

நோயாளியின் இதயத் துடிப்பினை இன்னொரு நாட்டிலிருந்தவாறு டாக்டர்கள் கணித்துக்கொள்ளச் செயற்கைக் கோள்கள் உதவியுள்ளன. பிரான்ஸ் நாட்டிலுள்ள நோயாளியின் இ. ஸி. ஜி.யை அமெரிக்காவிலுள்ள மருத்துவர்கள் இம்முறையில் அறிந்து நோய் இத்தன்மையது எனக் கண்டறிந்து 30 விநாடிகளில் பிரான்ஸுக்குத் தெரிவிக்கும் சோதனை நிகழ்ந்துள்ளது.

சந்திரனில் இறங்கிய விண்வெளி வீரர்கள் கீழே இறங்கி நடப்பதற்கென ஆறு கால்கள் உள்ள ஒரு நடக்கும் நாற்காலி உருவாக்கப் பெற்றது. இதன் சிறிய அளவிலான மாடல் ஒன்று கால் ஊனமடைந்திருக்க ஒரு குழந்தை, யார் உதவியுமின்றி வீதியைக் கடக்கவும் கடற்கரை மணலில் உலாவவும், சாலையிலிருந்து நடைபாதைக்கு ஏறவும் ஏற்ற வகையில் அமைக்கப்பெற்று நல்ல பலன் அளித்துள்ளது.

செவிப் புலன் மந்தமாக உள்ளவர்கள் இன்று காதில் பொருத்திக் கொள்ளும் உபகரணங்களில் மேலும் பல அபிவிருத்திகளை வருங்காலத்தில் செய்ய முடியும். வெளியே தெரியாமல் காதுக்குள்ளேயே வைக்கும்படியான சிறிய கேட்கும் உபகரணங்கள் (Hearing aids) உருவாவது நிச்சயம். இன்றுள்ளது போல் பாட்டரியுடன் இணைந்துள்ள கம்பிகள் ஏதும் அவற்றில் இரா.

விண்வெளியில் சுற்றி வரும் செயற்கை உபகிரகங்கள் வருங்காலத்தில் நிகழ்த்தக் கூடிய சாதனைகள் பிரமிப்பூட்டுவனவாகும். காடுகளில் தீப்பற்றிக் கொண்டாலோ, அல்லது பெரு வெள்ளம் தோன்றக் கூடும் என்றாலோ உடனுக்குடன் அது பற்றிய முன்னறிவிப்பு புவியிலுள்ள நிலையங்களுக்கு அறிவிக்கப்படும். பருவநிலை பற்றி முன்னதாகவே தெரிந்துகொள்ள முடிவது விவசாயிகளுக்கு எவ்வளவு அனுகூலம்!

செயற்கைக் கோள்களின் மூலம் கடலில் ஏற்படவிருக்கும் மாறுதல்களை வருங்கால உலகம் உடனுக்குடன் அறியும் வாய்ப்பு ஏற்படப் போவதால் துறைமுகங்களைப் பாதுகாப்பதும், கடலில் ஆபத்தில் சிக்கியுள்ள கப்பலுக்கு உடனடி உதவி செய்வதும் எளிதாக முடியும். மீன்பிடிப்புத் துறையிலும் பல அபிவிருத்திகளுக்கு இடமுண்டு. சில வகை மீன்களை அளவுக்கு அதிகமாகப் பிடித்தால் அந்த இனமே அழிந்துவிடுமல்லவா? அவ்விதம் அழிவு ஏற்படாமல் தடுக்க முன்னறிவிப்புக்கள் வருங்காலத்தில் செயற்கைக் கோள்களின் மூலம் கிடைக்கும்.

இன்று நிலக்கரி, பெட்ரோலியம், அணுசக்தி, நீர் இவற்றின் ஆற்றலைப் பயன்படுத்திப் பல்வேறு தொழில்கள் உலகெங்கும் நடக்கின்றன. இவ்வளவு ஆற்றலையும் கதிரவனிடமிருந்தே வருங்கால உலகம் பெறப்போகிறது. சூரிய ஒளியிலிருந்து உலகம் பெற்றுப் பயனடையப் போகிற ஆற்றல் தூய்மையானது. இன்று பெட்ரோல், டீசல், நிலக்கரி இவற்றைப் பயன்படுத்தும்போது எழும் புகையும் நாற்றமும் வருங்கால உலகில் இரா.

மணிக்கு இருநூற்றைம்பது மைல் வேகத்தில் ஓடக்கூடிய ரயில் வண்டிகளில் பயணம் செய்யும் பாக்கியம் வருங்கால மக்களுக்குக் கிட்டும். புகையோ, கடபுடா சத்தமோ இல்லாது ஓடும் இத்தகைய ரயில் வண்டிகள் உருவாகி அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்படும் நிலையில் உள்ளன.

உலகை நுட்பமாக வரை படம் வரையவும் விண்வெளிக் கோள்கள் உதவும். விமானங்களின் மூலம் இதனைச் சாதிக்க நேரமும் செலவும் கூடுதலாகும். உலகின் 58 மிலியன் சதுரமைல் விஸ்தீரணத்தை விமானங்களின் மூலம் புகைப்படம் பிடிக்க 174 மிலியன் டாலர் செலவாகுமென்றால், வருங்காலத்தில் விண்வெளிக் கோள்களின் மூலம் 17 மிலியன் டாலர் செலவில் இதனைச் செய்து முடிக்கலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

குப்பை கூளங்களை வீணடிக்காமல் அவற்றுடன் செமெண்ட் அல்லது தார் சாலை அமைக்கப் பயன்படும் 'ஆஸ்ஃபால்ட்டி'னைக் கலந்து இறுகிய கற்களாக உருவாக்கிக் கடல்கள் மூலம் ஏற்படும் நில அரிப்பைத் தடுக்கவும், சாலைகள் அமைக்கவும் ஜப்பானில் சோதனைகள் நிகழ்ந்து வருகின்றன. குப்பை கூளமும் லாபகரமாகப் பயன்படுத்தப்படும் வாய்ப்பு வருங்காலத்தில் உண்டு. வருங்கால மக்கள் அதிர்ஷ்டசாலிகள்தாம். —'**பாணன்**'

ஆதாரம்: **டிவிடண்ட்ஸ் ஃப்ரம் ஸ்பேஸ் என்ற நூல்.**

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

காயங்களால் தொற்று நோய் பரவக்கூடும்




புதிய

பாண்டு-எய்ட் டிரஸ்ஸிங்

பிராண்ட்

பயன்படுத்தி அவற்றைப் பாதுகாருங்கள். காயங்களை விரைவில் ஆற்ற இப்போது <u>மெர்க்கியூரோக்ரோம்</u> மருந்து கலக்கப்பட்டுள்ளது.





உங்கள் குழந்தைகளின் வாழ்வில் தூசியும் அழுக்கும் எங்கும் இடம் பெறுகின்றன. ஆனால் அவை இடம் பெறக் கூடாத இடம் ஒன்று உண்டு—அதுதான் திறந்த காயம்.

எல்லா சிறிய வெட்டுக் காயங்கள், கீறல்கள் மற்றும் சிராய்ப்புகளை ஆற்றுவதற்கு புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் உபயோகியுங்கள். இப்போது அதில் மெர்க்கியூரோக்ரோம் மருந்து கலக்கப் பட்டுள்ளது. இந்த நிரூபணமான ஆன்டிசெப்டிக் மருந்து பிளவுபட்ட சருமத்துக்கு இதமளித்து, காயங்களை ஆற்ற உதவுகிறது. புதிய பாண்டு-எய்ட்* டிரஸ்ஸிங் பயன்படுத்திப் பாதுகாப்பது விவேகமாகும்.

எப்பொழுதும்
புதிய
பாண்டு-எய்ட்*
டிரஸ்ஸிங்குகள்
கைவசமிருக்கட்டும்.

Registered No. M. 4792
Registered as a Newspaper in Ceylon



மணக் கோலம்.
மாநிறம், மஞ்சள் பூசிய வதனம்.
மாந்தளிர் கன்னம். ரோஜா இதழ்கள்.
கார் கூந்தல், வெள்ளை மலர்கள்.
கருமணி விழிகள், அஞ்சனப் புருவம்.
கிளிப்பச்சை புடவை, பொன்னிறச் சரிகை.
சிவப்பு குங்குமம்.
வைர மூக்குத்தி, நீலக் கம்மல்.

வண்ணமோ வண்ணம்!



நெரோலாக்

வண்ணம்—நம் வாழ்வோடு ஒன்றிய அங்கம்

U.GNT.22